லலிதா

நூதன தமிழ் வாசகம்

இரண்டாம் புத்தகம்

16 FEB 1932

T. A. ராஜரத்தினம் பிள்ளை

D. நடராஜன் பி. ஏ.,

எழுதியது.

லலிதா விலாச புஸ்தகசாலை,

திருவல்லிக்கேணி :: சென்னை

1932

காபிரைட்]

[விலை அணா 3.

Printed in Madras
At the B. N. Press, Mount Road, (P. O.)

சித்திரகூட பர்வதத்தைச் சார்ந்து, இலக்குவன் சமைத்த பன்னசாலையில் தேவருங் கைதொழ வீற்றிருந்தனன். இஃது இங்ஙனமாகத் தன் பிதாமகன் வீட்டினின்றும் அயோதிக்கு மீண்ட பரதன், தன் அன்னையின் கொடுமையால் தன் தந்தை விண்ணுல கேகியதையும், தன் திருத்தமையன் மைதிலியுடன் கானேகியதையும் உணர்ந்து பெருந்துயர்க்கடலில் ஆழ்ந்தனன். கோசலை முதலியோர் ஆற்றச் சிறிது துயரம் நீங்கித் தன் தந்தைக்குச் செயற்பால சரமகிரியைகளைத் தன் இளவலாகிய சத்துருக்கனனால் முற்றுவித்தனன். பின் அரசிலா நாடாகிய அயோத்தியை ஆளும்படி தன் திருத்தமையனும் சீராமமூர்த்தியை அழைத்து வருவான் பரதன் தன் தாய்மார் மூவர், அமைச்சர் முதலியோர் சூழ்ந்துவரச்சித்திரகூட பர்வதத்தை நோக்கிப் புறப்பட்டனன்.

புறப்பட்ட பரதன் காட்டில் தன் திருத்தமையன் நண்பனாகிய குகப்பெருமானைச் சந்தித்து நட்புக் கொண்டாடி, அவன் உதவியால் கங்கையாற்றைக் கடந்து சித்திர கூடபர்வதத்தை அடைந்து, தமையனை வணங்கி, அவன் அணிந்திருந்த பாதுகைகளைப்பெற்று அயோத்திக்கு மீண்டமையும், பிறவும் அயோத்தியா காண்டத்தாற் பெற்றும்.

சித்திரகூடத்திலிருந்த இரகுநாயகன், நகரமாந்தரும் தம்பியர் இருவரும் தாய்மாரும் தன் மாட்டுள்ள பேரன்பால் இங்கேவந்து தன்னை அடிக்கடி நகரத்திற்கு மீண்டுவர வருத்துவர் என்றெண்ணி, தன் தம்பியும் சீதாபிராட்டியும் பின்வர, சித்திரகூடத்தை விட்டு அகன்று அத்திரிமுனிவர் ஆச்சிரமம் அடைந்

தனன். அத்திரிமுனிவர் பன்னியாய அநசூயை, சானகிக்கு அணியும் ஆடையும் அளிக்க அவற்றைப்பெற்று, சரபங்க முனிவர் ஆச்சிரமம்சார்ந்து அவர்க்குப் பரமபதமளித்து, வாலகில்லியமுனிவர்கட்கு அபயம் தந்து, சுதீக்கண முனிவர் வழிகாட்டத் தமிழ் முனிவராகிய அகத்திய முனிவர் ஆச்சிரமம் அடைந்து, அவரை வணங்கி நின்றனர் சீராமன் முதலிய மூவரும் தன்னை வணங்கிய சீராமற்குத் தென்தமிழ் இயம்பி இசைகொண்ட அகத்திய முனிவர் வில் முதலியன பரிசாகக்கொடுக்க அவற்றை அன்புடன் ஏற்ற சீராமன் அவர்பால் விடைபெற்றுத் தண்டகாரணியத்தை நோக்கிச் செல்லுங்கால், எதிர்ப்பட்ட சடாயு என்னும் கழுகின் வேந்தனுடன் நட்புக்கொண்டு கோதாவரி தீரத்திற் பஞ்சவடியில் ஓர் ஆச்சிரமம் அமைத்து அங்கே தன் தம்பியுடனும் சீதையுடனும் வதிவாஞயினன். பஞ்சவடியின்கண் சீராமன் தங்கியிருக்குங்கால் இலங்கை நகர்க்கரசஞகிய இராவணனது தங்கையாகிய சூர்ப்பணகை என்பாள் அங்குப் போந்து சீராமனது சௌந்தரியத்தை நோக்கி அவன்மாட்டு விருப்பம் கொண்டு அவன் தன்னை மணக்குமாறு பலபட வேண்டினள். சீராமன் பற்பல நீதிகளைப் புகன்று மறுத்தனன். சீராமன் புகன்றவைகளைக் கேட்ட அரக்கி மனம் வெதும்பிச் சீதையைக் கவர்ந்து செல்லின் ஒருகால் சீராமன் தன்னை மணப்பான் என்றெண்ணி அவள் தனித்திருக்கும் சமயம் பார்த்து அவளைத் தூக்கிச் சென்றனள். அதைக்கண்ட இலக்குவன் அவளுடைய மூக்கு முதலிய உறுப்புக்களைக் கொய்தனன். உறுப்பிழந்த சூர்ப்பணகைக்காக அக் காட்டிலுள்ள கரன் முதலிய அரக்கர் பரிந்து போந்து சீராம-

னுடன் போர்புரிந்து இறந்து பட்டனர். பின் சூர்ப்ப-ணகை நிகழ்ந்தவைகளை இராவணனிடம் புகல, அவன் சீதைமேல் பெருங்காதல் கொண்டு, பொய்த் தவ வேடந்தாங்கிப் போந்து, மாயையாற் பொன்மானுரு-வங் கொண்டுபோந்த மாரீசன் சூழ்ச்சியால் இராம இலக்குமணரை அப்புறப்படுத்தி, சீதை தனித்திருக்-கும் அமயத்து அவளை வஞ்சனையாற் றூக்கிச் சென்-றனன். சீதையைத் தூக்கிச்செல்லுமளவில் முன் வந்-தெதிர்த்த சடாயுவை வென்று இலங்கையில் அசோக-வனத்தில் அரக்கியர் நடுவண் சீதையைச் சிறை-யிடை வைத்தனன் இராவணன். பொன்மான் பின்-சென்ற இராம லக்குமணர் திரும்பிப்போந்த காலையில் ஆச்சிரமத்தில் சீதையைக் காணுதவராய்த் திகைத்துத் தேடிச் செல்லுங்கால், இறக்குந் தறுவாயிலிருக்கும் சடாயு என்னும் பெரிய உடையார் வீழ்ந்துகிடந்த-தைக் கண்டு அவரால் சீதையின் வரலாற்றைச் சிறிது உணர்ந்து கொண்ட பிறகு, சடாயுவிற்குச் சரமகிரியை களைச் செய்து, கபந்தனைக் கொன்று, அயோமுகியை வென்று சபரிக்கு நிரதிசய இன்பம் அளித்தமையும் பிறவும் ஆரணியகாண்டத்தாற் பெற்றும்.

சபரி என்னும் உத்தமி பரித்தேரோன் மைந்த-ணுகிய சுக்கிரீவன் இருக்கும் குன்றினுக்குச் செல்லும் நெறி யெலாம் நினைந்து பகர்ந்தனள். பிறகு அவள் யோகத்தினுல் தன் உடல் துறந்து நிரதிசய இன்பம் அடைந்தமையைக் கண்டு அதிசயம் எய்தி அவள் புகன்ற நெறியே போவான் தலைப்பட்ட சீராமனும் இலக்குவனும் கானும் குன்றும் நதிகளும் கடந்து சென்று, புண்ணியம் உருகிற்றன்ன பம்பையாம் பொய்கையைக் கண்ணுற்றனர்.

அப் பம்பைப் பொய்கையில் மலர்ந்திருக்கும் தாமரை, குவளை முதலிய மலர்களையும், பொய்கையில் விளையாடும், சக்கரவாளம் அன்னம் முதலிய நீர்வாழ் பறவைகளையும் கண்ணுற்ற சீராமனுக்கு அவைகள் தன் அருமருந்தன்ன மனைவியாகிய சீதா பிராட்டி-யாரின் அவயவங்களே யெனப் பொலிவுற்று விளங்கின. சீராமன் தன் மனைவியாகிய சீதையை நினைந்து பலபட வருந்துவானாயினன். அது போழ்து பரிதியும் மேற்றிசை யடைந்தனன். அதைக் கண்ட இலக்குவன் தன் திருத்தமையனாகிய சீராமனை நோக்கி, 'நெடியோய்! ஈண்டு இரும்புனல் தோய்ந்து நின் இசையென நீண்டவன் கழல்தாழ்' என்று வேண்டினன். இரகுவீரனும் அவ்வழிநின்று அரிதினெய்திப் புனலாடி முன்னை நூல் நெறிமுறை நேமிதாள் சூடி, முனிவர்தந் தொகுதி செறி சோலைவாய் வைகினன் அப்போது எரிகதிரும் வைகினன். இரவு நீங்கக் கமலமலர்களும் தலையெடுத்தன, கீழ்க்கடலில் சூரியனும் உதயமாயினன். தாம் இழந்தமானை நாடுதல் புரிபவரான சீராமனும் இலக்குவனும் சவரிபுகன்றவழியே சென்று இருசியமுக பர்வதத்தை அடைந்து அதில் நொய்தின் ஏறினர். இவ்விருவர் வருகையைக் கண்ட சுக்கிரீவன் இவர்கள் தெவ்வராமென வெருண்டு தாரன் நீலன் முதலிய வானர வீரகர்ளுடன் மேரு மால் வரையை நிகர் பாரமாமலையில் ஓர்பால் ஓடினன். சுக்கிரீவன் போந்ததைக் கண்ணுற்ற அஞ்சனையின் புதல்வன் வீரர்பாற் சென்று அவர்களைப் பணிந்து அவர்கள் அம் மலைக்கண் எய்திய காரணத்தை உணர்ந்து தெளிந்து சுக்கிரீவனை அவர்கள்பால் அழைத்துச் சென்று அவ்விருவருக்கும் நட்புச் செய்வித்தனன்.

பின்னர்ச் சுக்கிரீவன் இராம லக்குவரைத் தம் இருக்கையாய மதங்கவனத்திற்கு அழைத்துச் சென்றனன். பெருந்தகையோர் இருவரும் அவ்வனத் தமர்ந்திருக்கும் அமயத்து மாருதி மைந்தன், பரித்தேரோன் புதல்வற்கும் இந்திரன் புதல்வற்கும் மூண்ட பகையைத் தெற்றெனப் புகன்றனன். மாருதி புகன்றவைகளைச் செவிசாய்த்த இராமன், 'வாலியைக் கொன்று உன் மனைவியையும் அரசையும் தருகின்றேன்' என்று சுக்கிரீவற்கு அபயப் பிரதான மளித்தனன். இரகோத்தமன் புகன்றவைகளைக் கேட்ட சுக்கிரீவன் வாலியைக் கொல்லும் ஆற்றல் இராமன்பால் உளதோ என்று அயர்த்தனன். அதனை யுணர்ந்த அஞ்சனையின் புதல்வன் இராமனை அழைதுச் சென்று நெறியிலுள்ள ஏழு மராமரங்களையும் எய்யுமாறு வேண்டினன். அதனைக் கேட்ட இறைவன் புன்முறுவல் செய்து, தேவர்கள் நடுங்கும் வண்ணம் நாணொலி எழுப்பித் தன் அம்பை ஏவினன். அப்பகழி ஏழு மராமரத்தையும் தொளை செய்து ஏழுலகும் ஊடுருவிச் சென்று இராமன் பால் மீண்டது. மேலே செல்லுகையில் துந்திபி என்னும் கடல்நிறத்த அசுரனது எற்புடம்பு அம்மலையின்மேல் மலையேயென இருப்பதைக் கண்டனன் சிராமன். எற்பு மலையைக் கண்ட இரகுவீரன் அம் மலை யாதெனத் தெரிந்து கொண்டு தன் இளவலை நோக்கி, 'உன் காலால் இவ் வெற்புக் குவையை எற்று' என்று பகர, இலக்குவன் தன் கால் விரலால் உந்த அம் மலை விரிஞ்சனுடு சென்று மீண்டும் வந்து பூமியின்கண் வீழ்ந்தது. சீதாபிராட்டியார், இராவணன் தன்னைத் தூக்கிச் செல்லுங்காலையில் தன் அணிகலன்களைக் கழற்றி ஒரு கிழியில் வைத்துப் பொதிந்து

இங்கே இட்டனள் என்று சுக்கிரீவன் பகர்ந்து அக் கலன்களை சீராமற்குக் காட்டினன். கலன்களைக் கண்ணுற்ற சீராமன் மூர்ச்சித்துச் சாய்ந்தனன். அதனைப் பார்த்த சுக்கிரீவன் தான் பிராட்டியாரைத் தேடிக் கொணர்வதாகப் பகர்ந்தனன். சீராமன் சிறிது மூர்ச்சை தெளிந்து மலைச்சாரலின் வழியே நடந்து கிட்கிந்தையைச் சார்ந்தனன். கிட்கிந்தை மலையைச் சார்ந்த சக்கரவர்த்தித் திருமகன் வாலியைக் கொன்று சுக்கிரீவற்குத் திருமுடி சூட்டினன். அப்போது மாரிக் காலம் போந்தது. சீராமன், சுக்கிரீவனுக்கு 'இக் கார்காலம் கழிந்தபின் சீதாபிராட்டியாரைத் தேடுவான் நின் சேனையுடன் இங்கு வருக' என்று கட்டளையிட்டுத் தான் மதங்க முனிவருடைய ஆச்சிரமத்தினருகே இலக்குவன் சமைத்த பர்ணசாலையிற் றங்கியிருந்தனன். கார்காலம் வந்து கழிந்தது. இறைவன் கட்டளையிட்டவண்ணம் சுக்கிரீவன் தன் சேனையுடன் வரவில்லை. இதனை யுணர்ந்த இரகோத்தமன் இலக்குவனைச் சுக்கிரீவன்பாற் செலவிடுத்தனன். இறைவன் ஆணையின்படி சுக்கிரீவன் இருக்கையைச் சார்ந்த இலக்குவன், கள்ளுண்டு தன்னை மறந்து துயிலும் சுக்கிரீவனைக் கண்டு இறைவன் கட்டளையை அறிவுறுத்தினன். சுக்கிரீவன் உடனே புறப்பட்டு இறைவன்பாற் போந்தனன். இறைவனை வணங்கி மீண்ட சுக்கிரீவன் தன் சேனைகளுடன் மீட்டும் வந்து சேர்ந்தனன். ஒன்றுகூடிப் போந்த சேனைகளைக் கண்ட இராமனும் இலக்குவனும் திருவுளம் உவந்தனர். சுக்கிரீவன் சேனாதிபதிகளை விளித்துப் பற்பல விடங்களிலும் சென்று சீதாபிராட்டியார் இருக்கும் இடத்தைத் தேடித் தெளிந்து ஒரு மாத முடிவிற்குள்

மீண்டு வரும்படி கட்டளை யிட்டனன். அநுமான் முதலிய படைவீரர் தென்திசை நோக்கிச் சென்றனர். அவர்கள் சீதாபிராட்டியாரைப் பற்பல விடங்களிலும் தேடி பிராட்டியார் இருக்கும் இடத்தை உணராமல் ஒரு பாலைவனத்தைச் சார்ந்து அதன் வெம்மையை ஆற்றுதவராய் ஓர் இருண்ட பிலத்திற் புக்கனர். பிலத்திற் புக்க வானரவீரர் மாருதியின் உதவியால் வெளிப் போந்து ஓர் பொய்கையைச் சார்ந்தனர். வானரவீரர் பொய்கையில் நீர் அருந்தி இளைப்புத்தீரும் வண்ணம் அதன் கரையில் சிறிது போழ்து உறங்குவா ராயினர். அவர்கள் உறங்கும் அமயத்து புட்கலன் என்னும் அசுரன் அப் பொய்கையினிடம் போந்து அங்கதனை வருத்தினன். அவ் வசுரனை அங்கதன் கொன்று களைந்தனன். பின்னர்ப் பற்பல நாடுகளிலும் தேடிப் பிராட்டியாரைக் காணப்பெறுதவராய் மகேந்திர மலை யிருக்கும் கடலின் எல்லையைச் சார்ந்தனர். மகேந்திர மலையை யடைந்த வானரவீரர்கள் இராவணன் சீதாபிராட்டியாரை இலங்கைக்கு எடுத்துச் சென்றமையைச் சம்பாதியால் உணர்ந்து கொண்டனர். பின்னர் அவ் விலங்கையைச் சார்ந்து சீதாபிராட்டியாரைக் கண்டு மீளும் ஆற்றல் உள்ளவன் அஞ்சனையின் புதல்வனே எனத் தெளிந்து தேறி அவ் வஞ்சனையின் புதல்வனை இலங்கைக்குப் போய் மீளுமாறு விரும்பினர். அநுமான் இலங்கைக்குப் போய் மீள இயைந்து தென்கடலைத் தாவிச் செல்லத் துணிந்து பேர் உருவங் கொண்டமையும் பிறவும் கிட்கிந்தா காண்டத்தாற் பெற்றும்.

கடல் தாவுகை

சீதா பிராட்டியார் இருக்கும் இடம் தேடுவான் மகேந்திர மலையின் மீது பேர் உருவங் கொண்டு நின்ற அஞ்சனையின் புதல்வற்குத் தெய்வ லோகம் தோன்றியது. அநுமான் இவ்வுலகம் இலங்கையோவென்று ஐயுற்றுப் பின்னர் அது விண்ணுடு என்பதை உணர்ந்து தன் சிந்தையைமீட்ட காலையில்,

கண்டன னிலங்கை மூதூர்க்
கடிபொழிற் கனக நாஞ்சில்
மண்டல மதிலுங் கொற்ற
வாயிலு மணியிற் செய்த
வெண்டளக் கனக மாட
வீதியும் பிறவு மெல்லாம்
அண்டமுந் திசைக ளெட்டு
நடுங்கத்தோள் கொட்டி யார்த்தான். (1)

இலங்கைமா நகரத்தைக் கண்டவுடன் அஞ்சனையின் புதல்வன் பரமானந்தங் கொண்டவனாய் அந் நகரை விரைவில் சார எண்ணிக் கடலைத் தாவுவான் தன் பாதங்களை அம் மகேந்திர மலையின் மீது வன்மையாக ஊன்றினான். அம் மலை அநுமானின் பாரத்தைத் தாங்க ஆற்ற லில்லாததாய் நெற நெற வென்று நெரிந்து கீழேயமுந்திற்று. அப்போது அம் மலையின் குடல்கள் பிதுங்கிய தென்னலாம்படி, அதிலே வெகு காலமாய் வசித்துக்கொண் டிருந்த மலைப் பாம்புகள் புரண்டு போகத் தலைப்பட்டன. மலைக் குகைகளிலே தூங்கிக்கொண்டிருந்த சிங்கங்கள் நெரிபட்டு வாயினால் உதிரங்கக்கி மடிந்தன. அம் மலையில் வாழும் பறவைக்

கூட்டங்கள் எல்லாம் எழும்பிக் கடலானது நாண-மடையும்படி இரைச்ச லிட்டுக்கொண்டு பறந்து பக-லென்பதே தெரியாமல் ஆகாயத்தை மறைத்தன. இத்தகைய அமயத்தில்,

இத்திற நிகழும் வேலை
யிமையவர் முனிவர் மற்றை
முத்திறத் துலகத் தாரு
முறைமுறை விரைவின் மொய்த்தார்
தொத்துறு மலருஞ் சாந்துஞ்
சுண்ணமு மணியுந் தூவி
வித்தக சேறி யென்றார்
வீரனும் விரைவ தானன். (2)

குறுமுனி குடித்த வேலை
குப்புறுங் கொள்கைத் தாதல்
வெறுவிது விசயம் வைகும்
விலங்கற்றோ ளலங்கல் வீர
சிறுவிதென் றிகழற் பாலை
யல்லைநீ சேறி யென்று
உறுவலித் துணைவர் சொன்று
றொருப்பட்டான் பொருப்பை யொப்பான்.

இலங்கையி னளவிற் றன்று
லிவ்வுரு வெடுத்த தோற்றம்
விலங்கவு முளதன் றென்று
விண்ணவர் வியந்து நோக்க
வலங்கழும் மார்பன் முன்றாழ்ந்
தடித்துணை யழுத்த லோடும்
பொலன்கெழு மலையுந் தாளும்
பூதலம் புக்க மாதோ. (4)

வால்விசைத் தெடுத்து வன்றாள்
மடக்கிமார் பொடுக்கி மானத்
தோல்விசைத் துணைகள் பொங்கக்
கழுத்தினைச் சுருக்கித் தூண்டு
கால்விசைத் தடக்கை நீட்டிக்
கட்புலங் கதுவா வண்ணம்
மேல்விசைத் தெழுந்தா னுச்சி
விரிஞ்சனூ டுரிஞ்ச வீரன். (5)

ஆயவ னெழுத லோடு மரும்பணை மரங்க டாமும்
வேயுயர் குன்றும் வென்றி மேவழமும் பிறவு மெல்லாம்
நாயகன் பணியி தென்னு நளிர்கட லிலங்கை தாமும்
பாய்வன வென்ன வானம் படர்ந்தன வெழுவ மான. (6)

இசையுடை யண்ணல் சென்ற
வேகத்தா லெழுந்த குன்றும்
பசையுடை மரனு மாவும்
பல்லுயிர்க் குலமும் வல்லே
திசையுறச் சென்று சென்று
செறிகட லிலங்கை சேரும்
விசையில வாகத் தள்ளி
விழுந்தன வென்ன வீழ்ந்த. (7)

இவ்வாறு அக் கடலி னிடத்தில் மேலுங் கீழுமாக விழுந்த மிருகங்கள், மரங்கள், கொடிகள், செடிகள், குன்றுகள் முதலியன சீராம பிரான் வந்து கோபங் கொள்வான் என்று நினைந்து முன்னமே அவைகள் அணை கோலியது போற் பொலிந்தன. அனுமான் பாய்ந்து செல்லும் வேகத்தினால் கடல் கிழிபட்டுப் பாதாளமட்டும் வெளியாய் நாகலோகத்தின்கண் உள்ள

நவ மணிகள் பொலிவன வாயின. அப் பொலிவைக் கண்டு அனுமான், 'அரவினுக்கு அரசர் வாழ்வையும் காண்தகு தவத்தனானேன்' என்று களிப்புக் கொண்டனன். மேலும் அவ்வனுமான்,

தடக்கைநா லைந்து பத்துத்
தலைகளு முடையான் றானே
அடக்கியைம் புலன்கள் வென்ற
தவப்பய னறுத லோடுங்
கெடக்குறி யாக மாகங்
கிழக்கெழு வழக்கு நீங்கி
வடக்கெழுந் திலங்கை செல்லும்
பரிதிவா னவனு மொத்தான். (8)

புறத்துற லஞ்சி வேறோ
ராணம்புக் குறைதல் போக்கி
மறத்தொழி லரக்கர் வாழு
மாநகர் மனுவின் வந்த
திறத்தகை யிராம னென்னுஞ்
சேவகற் பற்றிச் செல்லும்
அறத்தகை யரசன் றின்போ
ராழியு மனைய னானான். (9

மேலும், முன்னாளில் மூன்றுலகத்தையும் சர்வலோகசரணிய னாகிய திருநெடுமால் காலினால் அளந்தனன். இப்போது இவ் வனுமான் வாலினால் அளக்கின்றானோ என்று வானவர் மருண்டு சொல்லத் தாவிச் சென்றனன். அநுமான் தாவிச் செல்லும் வேகத்தால் தேவர்கள் ஏறிச் செல்லும் விமானங்கள் ஒன்றோடொன்று தாக்கி உடைபட்டு கடலில் வீழ்ந்தன. 'தேவேந்திரன்

வைகும் நாடும் இவன் செல்லும் வேகத்தால் நடுங்கு கின்றதே. இவ் வநுமானுடைய கருத்துத்தான் என் கொல்? என்று கலக்கமெய்திற்று தேவருலகு. இவன் வேகம் 'இலங்கையைக் காணும் அளவிற்றன்று. அதற் கப்பாலும் செல்லும்போலும்' என்று இப் பூவுலகம் விலகி ஓடிற்று. அள வில்லாத யோசனைப் பிரமாண மாகிய தூல சரீரத்தை யுடையன வென்று தேசமும், தூலுஞ் சொல்லும் திமிங்கிலங்கள் என்னும் மீனுடனே சமுத்திரம் கலங்க, அநுமானுடைய கரசரணாதிகளி லிருந்து எழுந்த காற்றினால் மற்று முள்ள மச்சங்களெல்லாம் இறந்து மிதந்தன. ஒப்பிட வரிய உருவத்தனுடைய அநுமான் தாவிச் செல்கின்றபோது வேகத்தைத் தருவனவாகிய அவன் இரண்டு கைகளும் தளராத நிமிர்தலுடையனவாய் தம்முள் ஒப்ப முன்னே செல்லுந் தோற்றம் சத்துவ குண முடையவனாகிய ஸ்ரீராமபிரான் தன் தம்பி யாகிய இலக்குவனோடு முன் னர்ச் செல்வதனை ஒத்திருந்தது. இவ்வாறு அநுமான் கடலைத் தாவிச் செல்கையில்,

இந்நாக மன்ன னெறிகாலென வேகும் வேலை
திந்நாக மாவிற் செறிகீழ்த்திசைக் காவல் செய்யுங்
கைந்நாக மந்நாட் கடல்வந்ததோர் காட்சி தோன்ற
மைந்நாக மென்னு மலைவானுற வந்த தன்றே. (10)

இலங்கையை நோக்கி வேகமாகச் செல்லும் அநுமா னுக்கு எதிரே மைந்நாக மலையானது ஆயிரஞ் சிகரங் களுடனும் தன் மீது பாயும் அருவித் திரளுடனும் எழுந்து நின்றது. அவ்வாறு எழுந்துநின்ற தோற்ற மானது அரக்கர் செய்யும் கொடுமையைத் தணிப்பான் திருநெடுமால் ஆயிரந் திருமுடிகளுடனும் தான்

அணிந்திருந்த பீதாம்பரத்துடனும் கடலினின்றும் மேலே போந்ததை ஒப்பதாயிற்று. கடலினின்றும் திடீரென வெளிப்போந்து ஆகாயத்தையும் பூமியை-யும் ஒருசேரப் படர்ந்து தன் எதிரே நின்ற மலையை நோக்கி, 'இது என் கொல்' என்று அதிசயித்து நின்ற-னன் அநுமான். பிறகு அம் மலையின் மீது சிறிது-போது தங்கி மேலே செல்லலாம் என்று முதலில் எண்ணிய அநுமான் அவ்வாறு தங்குதல் நன்மையைத் தாத்தக்கதன்று என்று தெளிந்து மைந்நாக மலையைத் தலைகீழாய் விழும்படி அக்கடலில் தள்ளினான்.

உந்தாமு னுலைந்துயர் வேலை யொளித்த குன்றுஞ்
சிந்தா குலமுற்றது பின்னருந் தீர்வி லன்பால்
வந்தோங்கி யாண்டோர் சிறுமானிட வேட மாகி
எந்தா யிதுகே ளெனவின்ன விசைத்த தன்றே. (11)

அநுமானாலே தலை கீழாகக் கடலில் தள்ளப்பட்ட மைந்நாக மலையானது மானிடவடிவந் தாங்கி வெளிப்-போந்து அநுமானை நோக்கி, 'ஐயா, என்னைப் பகைவன் என்று கொள்ளற்க. முன்னாளில் இந்திரன் தன்னு-டைய வச்சிராயுதத்தினால் மலைகளின் சிறகை எல்லாம் அரிந்தனன். அவ்வமயத்து உன் தந்தையாகிய காற்-றுக் கிறைவன் என்னை இக் கடலில் கொண்டுவந்து சேர்த்துக் காத்தனன். நீ அம் மகானுடைய குமார-னாகையால் என்னால் உனக்கு செய்யவேண்டிய உப-காரம் இல்லை யெனினும் என் சிகரத்தின் மேலே சிறிதுபோது தங்கி இளைப்பாறிப் போவாயாக' என்று இரந்து கூறியது. மைந்நாக மலை கூறியவைகளைக் கேட்ட அநுமான்,

நற்றாயினு நல்ல னெனக்கிவ
　　னென்று நாடி
யிற்றேயிறை யெய்தினை யேய்ந்தது
　　கோடி யென்னுப்
பொற்றாகன் மார்பதம் மில்லுழை
　　வந்த போதே
உற்றார்செயன் மற்றுமுண் டோவென
　　வுற்று ரைத்தான். (12)

மைந்நாகமலை மாணிட வடிவந்தாங்கி தன்னிடத்தே சிறிதுபோது தங்கி விருந்துண்டு செல்லுமாறு வேண்டியதைக் கேட்ட அநுமான் முகமலர்ந்து சிறிது நகைத்து இவன் குற்றமற்றவன் என்று எண்ணி, 'யான் நெடுந்தூரஞ் செல்வதனல் வருத்தமடையேன். அதற்குக் காரணம் சீராமன் என்பால் வைத்த அன்பே யாகும். என் மனோரதம் நிறைவேறி னன்றி யான் எதனையும் அருந்தேன். நீ அன்பாற் கூறிய மொழிகளைக் கேட்டவளவானே நான் உண்டவனாயினேன். இத்தகைய அன்பைக் காட்டிய தனினும் நீ எனக்குக் கொடுக்கக் கூடியது யாது உளது?' என்று பகர்ந்து.

ஈண்டியான் கடிதேகி யிலங்கை
　　விலங்க லெய்தி
ஆண்டா னடிமைத்தொழி லாற்றியென்
　　னுற்ற துண்டேல்
மீண்டியா னுகர்வென்னின் விருந்தென
　　வேண்டி மெய்மை
பூண்டா னவன்கட் புலம்பிற்பட
　　முந்து போனான். (13)

இவ் வண்ணமாக அநுமான் கடல்மேல் உயர்ந்து செல்வதைக் கண்ணுற்று, 'பூமியின்மேல் கால்கள்-படிந்து, நடக்க இயலாத இளம்பருவத்தேயே தம்முடைய தேர்மேற் குதித்த இவ் வஞ்சனையின் புதல்வன் இவ்வளவு வேகமாகக் கடலைத் தாண்டிப்போவது யாவர் மாட்டுச் செல்லவோ?' என்று அருக்கனும் ஐயமுற்றனன். அதிக வேகத்துடன் செல்லும் அநுமானைத் தேவர்கள் பார்த்து அதிசய முடையராய்ச் சிந்தை தூயளாகிய சுரசை என்பவளைப் பார்த்து, 'காலின் மாமதலை தேவர்கட்கு நேர்ந்த இடுக்கணைத் தீர்ப்பான் என்று வந்தனன். அவன் அவ்விடுக்கணை அகற்ற வலிமையுடையனோ அல்லனோ என்பதை ஆராய்ந்து எங்கட்கு உணர்த்து' என்று அவள் பாற் குறை நேர்ந்தனர். சுரசையும்,

பேழ்வாயொ ரரக்கி யுருக்கொடு பெட்பி னோங்கிக்
கோள்வாயரி யின்குலத் தாய்கொடுங் கூற்று முட்க
வாழ்வொயெனக் காமிட மாய்வரு வாய்கொ லென்னா
நீள்வாய் விசும்பு தனதுச்சி நெருக்க நின்றாள். (14)

தீயே யெனலாய பசிப்பிணி தீர்த்தல் செய்வாய்
ஆயே விரைவுற் றெனையண்மினை வண்மை யாள
நீயே யினிவந்தெ னிணங்கொள் பிணங்கெ யிற்றின்
வாயே புகுவாய் வழிமற்றிலை வானி னென்றாள். (15)

பெண்பாலொரு நீபசிப் பீழை யொறுக்க நொந்தாய்
உண்பாயென தாக்கையை யானுத வற்கு நேர்வல்
விண்பாலவர் நாயக னேவ லிழைத்து மீண்டால்
நண்பாலெனச் சொல்லிய நல்லறி வாள னக்கான். (16)

'நாயகன் ஏவலிழைத்து மீளுங்கால் என் யாக்கையை உனக்கு உணவாகக் கொடுப்பேன்' என்று அநுமான் புகன்றவைகளைக் கேட்ட சுரசை என்பாள், 'ஏழுலகத்தவரும் காண உன்னைக் கொன்று உன் யாக்கையைத் தின்று பசி தீர்வேன்' என்று பகர்ந்தனள். அதைக் கேட்ட அநுமான் பரிகசித்து, 'நான் ஒருவன். உன் வாய் வழியாய்ப் புகுந்து வருகிறேன். நீ வல்லையாயின் என்னைத் தின்' என்று பகர்ந்தனன். அநுமான் பகர்ந்தவைகளைக் கேட்ட அரக்கி பல அண்டங்கள் ஒருசேர வந்து தன் வாய் புகுமாயினும் நிறைவுறாத பெரிய வாயைத் திறந்து அநுமானை விக்காமல் விழுங்க நின்றனள். அதைக் கண்ட அநுமனும் திசைகளெல்லாம் பரந்துள்ள சுரசையின் வாயும் சிறிதாகும் வண்ணம் ஆகாயம் வரையில் நீண்டு வளர்ந்தனன். நீண்டு வளர்ந்த அஞ்சனையின் புதல்வன் உடனே தன் பேர் உருவத்தைச் சுருக்கிக்கொண்டு சுரசையின் வாயிற் புகுந்து மூச்சு விடுவதற்கு முன்னரே வெளிப் போந்தனன். அதனைக் கண்ட விண்ணவர் மலர் மாரி பொழிந்து ஆசி புகன்றனர்.

தோன்றி மறைகின்ற மின்னலைப் போல அதி விரைவில் தேகம் பருத்துச் சுருங்கும்படி அநுமான் வாய்க்குள்ளே புகுந்து வெளிப்பட்டதைக் கண்டு அச் சுரசை தன் சுய வடிவந்தாங்கி நின்று தாயினும் மிகப் பரிவு கூர்ந்து நித்தியபிரமசாரியை நோக்கி, 'இனி மேல் உனக்கு முடியாத காரியங்கள் யாவை' என்று தொழுதுநின்றனள். பொன்மேனியனாய அஞ்சனையின் புதல்வனும் அச் சுரசைக்கு ஆசிபுகன்று மேலே செல்வானானான். கின்னரர்கள் கீதம் பாடினர், தேவ

ரம்பையர்கள் நடன மாடினர், சகல சீவராசிகளும் புகழ்ந்தன, அந்தணர் வேத கோஷம் செய்தனர், தென்றல் விருந்து செய்தது; இவ்வாறு அநுமான் செல்கையில்,

வெங்கார் நிறப்புணரி வேறேயு மொன்றைப்
பொங்கார் கலிப்புன றரப்பொலிவ தேபோல்
இங்கார் கடத்திரென வென்னுவெ ழுந்தாள்
அங்கார தாரைபெரி தாலால மன்னுள். (17)

துண்டப் பிறைத்துணை யெனச்சுட ரெயிற்றுள்
கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா
முண்டத் துரித்தவுரி யான்முளரி வந்தான்
அண்டத்தி னுக்குறை பமைத்தபில வாயாள். (18)

நின்று ணிமிர்ந்தலை நெடுங்கடலி னீர்தன்
வன்று ளலம்பமுடி வான்முகடு வொளவ
அன்றாய் திறத்தவ னறத்தையரு ளோடுந்
தின்று ளொருத்தியிவ ளென்பது தெரிந்தான்.

தன் எதிரே பெரிய உருவந் தாங்கி நிற்கும் அங்கார தாரையினது பிலம் போன்ற வாயினுட் சென்று லன்றி ஆகாய மார்க்கமாய்ச் செல்வதற்கு வழி யில்லை என்பதை உணர்ந்துகொண்ட அநுமான் அவள் வாய் வழியாய்ப் புகுந்து அவள் வயிற்றைப் பிளக்கு மாறு கருதினன். பின்னர் அங்கார தாரையை நோக்கி, 'நான் வரும் வேகத்தைக் கண்டும் என் ஆற்றலை உணரமாட்டாது வாயினல் ஆகாயத்தை அளந்து கொண்டு போகும் வழியை அடைத்து நிற்கின்றாய் நீ யார்? நீ இங்கே நிற்க வேண்டிய காரணம் யாது?' என்று வினவினன் அஞ்சனையின்

புதல்வன். அதைக் கேட்ட அரக்கி, 'நான் பெண்பால் என்று கருதேல். என் அருகில் வந்தால் தேவர்களும் இறந்துபடுவர். என் கண்முன் வரும் உயிர்களை எல்லாம் உண்ணுவது என் விருப்பம்' என்று பகர்ந்து,

திறந்தா ளெயிற்றையவ ளண்ணலிடை சென்றான்
அறந்தா னரற்றியத யர்த்தமர செய்த்தார்
இறந்தா னெனக்கொடொ ரிமைப்பதனின் முன்னம்
பிறந்தா னெனப்பெரிய கோளரி பெயர்ந்தான். (20)

சாகா வரத்தலைவ ரிற்றிலக மன்னன்
ஏகா வரக்கிகுடர் கொண்டட னெழுந்தான்
மாகா லசைப்பவட மண்ணினுற வாலோ
டாகாய முற்றகத லிக்குவமை யானான். (21)

அங்காரதாரையின் குடலைப் பிடுங்கிக்கொண்டு எழுந்த அநுமானைக் கண்ட வளவில் தேவர்கள் ஆர்ப்பரித்தனர். தானவர்கள் அழுங்கினர், பிரமனும் வியந்து புஷ்பவருஷம் பொழிந்தனன், கைலாயவாசியாகிய உருத்திரனும் வியந்து பார்த்தனன்; முனிவர்கள் ஆசிபகர்ந்தனர். இவ்வாறு நல்லோர்கள் ஆசியைப் பெற்றுச்செல்லும் அஞ்சனையின் புதல்வன் மனோவேகத்தினும் அதிவேகமாய் அப்பாற் போகத்தொடங்கி, 'இக்கடல் முன்பு சம்பாதி முதலியோர் நம்முடன் புகன்ற அளவை யுடையதேயன்று அதனினும் அதிக விசாலமுடையதாகக் காண்கின்றது. இதுவேயன்றி, இடையிலும் பற்பல இடையூறுகள் எழுகின்றன இவையெல்லாம் இலங்கையைப் போய்ச் சேர்ந்தால் நீங்கும்' என்று இராமநாம பாராயணஞ் செய்து கொண்டே,

தசும்புடைக் கனக நாஞ்சிற் கடிமதி
றரித்து நோக்கான்
அசும்புடைப் பிரசத் தெய்வக் கற்பக
நாட்டை யண்மி
விசும்பிடைச் செல்லும் வீரன் விலங்கன்மே
விலங்கை மூதூர்ப்
பசுஞ்சுடர்ச் சோலைத் தாங்கோர் பவளமால்
வரையிற் பாய்ந்தான். (22)

மண்ணடி யுற்று மீது வானுற
வரம்பின் தன்மை
எண்ணடி யுற்ற குன்றத் தலத்துநின்
றெய்த நோக்கி
விண்ணிடை யுலக மென்னு மெல்லியன்
மேனி நோக்கக்
கண்ணடி வைத்த தன்ன விலங்கையைக்
கண்ணிற் கண்டான். (23)

மாருதி இலங்கைமா நகரத்தைச் செவ்வனே உற்று நோக்கி அதிசய மெய்தினவனுய்க் கைகொட்டி, 'தேவர்கள் வாழும் பொன்னகர் இவ் விலங்கையை ஒக்கும்' என்று சொல்வது புல்லிதே; எல்லா உலகத்தையும் தன்னடிக் கீழ்ப்படுத்தி ஆளவல்லவனுகிய இராவணன் இந் நகரின்கண் இருந்து அரசுபுரிவதே பொன்னகர் இவ் விலங்கைக்கு நிகராகாதென்பதற்குப் போதிய சான்றும். தேவர் உலகம் மாட்சிமைப்பட்ட ஒப்பற்ற அழகினை யுடையது என்று புகல்வது வாய்மையாகாது; வேண்டிய பொருள்களை எல்லாம் வேண்டியபடியே யடைந்து அவ்வாறு விரும்பிப் பெற்ற பொருள்களை வெறுப்பின்றித் துய்க்கும்

சுகானுபவத்தை முடிவில்லாததாக எவ்விடத்திற் கண்டோமோ அவ்விடமே சுவர்க்கமுமாகும், அதுவே வேதங்களின் துணிவுமாகும். இவ் விலங்கைமாநகரின் உள்ளிடத்தளவு எழுநூறுயோசனை என்று கூறுவர் அறிவாற் சிறந்த பெரியோர். மூன்று உலகங்களிலும் உயர்வாக மதிக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் இவ்விலங்கைமா நகரின்கண் செறிந்திருக்கின்றன வென்னின், நுட்பமாய் அறிவினுனே எவ்வற்றையும் நுணிகியறியும் ஆற்றலமைந்த ஆன்றோரும் இந் நகரின்கண் காணப்படும் எல்லாப் பொருள்களேயும் காணுந்திறலிலராவர். ஏனெனில் அவர்கள் நோக்கற்குக் கருவியாயுள்ள கட்புலனும் வரம்பிலதாய் நீண்டிராமையினுலும் அந்நகரிற் காணப்படும் பொருள்கள் ஓரளவினையுடைய தன்மையாயிராமையானு மேயாம்.

ஊர் தேடுகை

சிறப்புவாய்ந்த விலங்கைமா நகரத்தில் மேகமண்டலத்தைக் கடந்து சந்திரமண்டலத்தை முட்டும் மாடங்கள் எல்லாம் பொன்னினுற் செய்து இரத்தினங்கள் பதிக்கப் பெற்றவையோ, மின்னலேக்கொண்டு சமைக்கப்பட்டவையோ, வெயிலேக்கொண்டு அமைக்கப்பட்டவையோ எதைக் கொண்டு செய்யப்பெற்றவையோ என்று அறியப்படாதவைகளாய்ப் பொலிவெய்தின. இம் மாடங்களிலுள்ள பாகினுமினிய சொற்களேயுடைய மாதர்கள் கரிய மேகங்களில் தோன்றும் மின்னல்களேப்பற்றி மடக்கி அடுக்கித் துடைப்பக்கற்றைகளாகப் பற்றிக்கொண்டு மேல் தளங்களிலுள்ள பூக்களின் பராகங்களாகிய குப்பையை விளக்கி ஆகாய-

கங்கையின் நீரை அள்ளித் தெளிப்பா ராயினர். குழல், யாழ், வீணை முதலிய இன்னிசைக் கருவிகளின் ஓசையும் தோல்வி யடையச் செய்யும் இனிய மழலைச் சொற்களைக் கிளிகட்குப் பயிற்றுவிக்கும் மாதர்கள், உப்பரிகைகளில் பளிங்கினாற் கட்டப்பட்ட சுவர்களில் பிரதிபலித்துக் காண்கின்ற சாயையும் தம்முருவத்தையும் வேறுபாடு அறியாதாராய் மயங்குவ ராயினர்.

இனைய மாடங்க ளிந்திரற் கமைவர வெடுத்த
மனையின் மாட்சிய வென்னினச் சொல்லுமா சுண்ணும்
அனைய தாமெனி லரக்கர்தந் திருவுக்கு மளவை
நினைய லாமன்றி யுவமையு மன்னதா நிற்கும். (24)

மரம டங்கலுங் கற்பக மனையெலாங் கனகம்
அரம டந்தையர் சிலதிய ரரக்கியர்க் கமரர்
உரம டங்கிவந் துழையரா யுழல்பவ ரொருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால். (25)

தேவ ரென்பவர் யாருமித் திருநகர்க் கிறைவற்
கேவல் செய்கிலா ரேவரே யெண்வகை யுருவின்
மூவர் தம்மினு மதிகனென்று லவன் முயலும்
தாவின் மாதவ மல்லது பிறிதொன்று தருமோ. (26)

தெய்வத் தச்சனைப் புகழ்துமோ
செங்கண்வா ளரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே
வியத்துமோ விரிஞ்சன்
ஐயப் பாடிலா வரத்தையே
மதித்துமோ வறியாத்
தொய்யற் சிந்தையாம் யாவரை
யாதென்று துதிப்பாம். (27)

இந் நகரத்தி னுள்ள கான்களும், பொழில்களும் கனகத்தினுலும், இரத்தினங்களினுலும் இயற்றியவே-னும் இயற்கை மரங்களே போல் தேனேயும், மலர்க-ளேயும், கனிகளேயும் தரும்படி அமைத்திருக்கும் விசித்-திரமான செய்கையை இவ்விலங்கை நகரினும் வேருய சுவர்க்கத்தாரும், நில வுலகத்தாரும் பெறும் வகை யுண்டோ? இல்லே என்றபடி. இலங்கை நகரி னுள்ள கோபுரத்தின் உயர்ச்சியைக் கண்டு மகமேருவும் வெள்-குவதாயிற்று. அங் நகர்க் கமைந் துள்ள மதிலின் ஒளியே அங் நகர முழுவதையும் விளக்குதலின் சூரியன் ஒளி மிகை யாயிற்று. 'இராவணன் தன்னேக் கண்டு முனியும்' என்றெண்ணி, சூரியன் அங் நகரில் செல்லான் என்பது இழுக்கு. மதிலின் ஒளியால் தன் கண் ணெளி மாசுறும் என்பதை உணர்ந்தே கதிரவன் அங் நகர்க்குச் செல்வதில்லேயாம்.

தசக்கிரீவன் நமக்குத் தீங்கு செய்பவர் தேவர்க-ளாதலின் அவர்கள் இங் நகரத்தி னுள்ளே புகாமல் தடுக்குமாறு அவர்கள் வரும்படியான வழியைக் கடந்த தாகிய ஓர் எல்லேயை ஏற்படுத்துவோமென்று எண்ணி அண்ட முகட்டையுங் கடந்து செல்லும் இம் மதிலே இட்டனன் என்று பகரும் சிறப்புடன் விளங்குவ தாயிற்று அங் நகரத்திலுள்ள மதில்.

கறங்கு கால்புகா கதிரவ ணெளிபுகா மறலி
மறம்பு காதினி வானவர் புகாரென்கை வம்பே
திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதையினுஞ் சிதையா
அறம்பு காதிந்த வணிமதிட் கிடைக்கைநின் றகத்தின்.

கடலின் நடுவண் உள்ள இலங்கைமா நகரின்கண் விளங்கும் கோபுரங்களின் சிகரம் ஆகாயம் வரையும்

அளாவி நிற்றலின், அந் நகரம் திருப்பாற்கடலில் நாகணையின் மீது அறி துயிலமரும் திருநெடுமாலின் திருவுந்தியினின்றும் பூத்த பிரமாண்டத்தை ஒத்திருக்கின்றது. இசை பாடுகின்றவர்கள் பலர், நாட்டியஞ் செய்பவர்கள் அப்பாடுகின்றவர்களினும் பலர், நாட்டியத்தினுக்கியைய மத்தளத்தைத் தட்டி முழக்குபவர் அவரினும் பலர். இவ்வாறு சிறையினின்றும் விடுதலை யடையப் பெற்ற தேவர்களைக் கொண்டு ஆடல், பாடல்களை இயற்றுவித்து அந் நகரத்து அரக்கர் மகிழ்வெய்துவா ராயினர். தேவ மாதர்கள் ஆடுவதைக் கண்ட விஞ்சைய மாதர் அவர்களுடன் மாறுபட்டு அவரினும் மேலாக ஆடுவார். வித்தியாதர மாதர்கள் ஆடுவதனைக் கண்ட இயக்க மாதர்கள் அவரினும் மாறுபட்டு மேலாக நடிப்பாராயினர். கருங் குழற் கற்றையுடைய இராக்கத மாதர்கள் இயக்க மாதரின் மேம்பட்டு நடிப்பாராயினர். இவர்கள் இவ்வாறு நாட்டியஞ் செய்வதை ஏனைநாட்டு மாதர்கள் கண்டு வியப்பெய்துவாராயினர். நவநிதியங்களும் பணிப் பெண்கள்போல ஆபரணங்கள் ஆடைகள், பூமாலைகள், சந்தனம் முதலியன தாங்கிக்கொண்டு அவர்கள் விரும்பும்போது கொடுப்பனவாயின. நான்முகன் கட்டளையிட வானவர் தச்சன் பொன்மயமான பெரிய மகாமேரு மலையின்மீது மாணிக்கங்களைப் பொழிந்து அம் மணிகளைப்பொருத்திப் பலநாள் சிரமப்பட்டு அருமையாகப் படைத்தனன்போலும் என்று யாவரும் வியக்கும் தன்மையதாய்ப் பொலிவுடன் விளங்கியது இலங்கைமாநகரம். மேலும்,

பளிக்கு மாளிகைத் தலந்தொறு
மிடந்தொறும் பசுந்தேன்
துளிக்குங் கற்பகத் தண்ணறுஞ்
சோலைக டோறும்
அளிக்குந் தேறலுண் டாடுநர்
பாடுந ராகிக்
களிக்கின் றாரலாற் கவல்கின்ற
றொருவரைக் காணேன். (29)

விற்படை பெரிதென் கோயான்
வேற்படை மிகுமென் கோயான்
மற்படை யுளதென் கோயான்
வாட்படை வலிதென் கோயான்
கற்பணந் தண்டு பிண்டி
பாலமென் றினைய காந்தும்
நற்படை யுடைத்தென் கோயான்
நாயகற் குரைக்கு நாளில். (30)

என்றன னிலங்கை நோக்கி யினையன
பிறவு மெண்ணி
நின்றவா ளரக்கர் வந்து நேரினு
நேர்வ ரென்னுத்
தன்றகை யனைய மேனி சுருக்கியச்
சாளச் சாரற்
குன்றிடை யிருந்தான் வெய்யோன் குரைகடற்
குளிப்ப தானன். (31)

எய்வினை யிறுதியிற் செல்வ மெய்தினுன்
ஆய்வினை மனத்திலா னறிஞர் சொற்கொளான்
வீவினை நினைக்கிலா னொருவன் மெய்யிலான்
தீவினை யெனவிருள் செறிந்த தெங்குமே. (32)

பின்னும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாம் சிவபெருமான் தன்மேல் தாருகவனத்து முனிவர் ஏவிய யானையை உரித்தபோர் உரிவையினால் நான்முகன் இவ்வுலகிற்கெல்லாம் ஓர் உறை யிட்டனனோ என்று கண்டோர் யாவரும் ஐயுறும் வண்ணம் இருள் பரவுதலாயிற்று. சர்ப்பங்கட் கெல்லாம் அரசனாகிய ஆதிசேடன் தன்னுடைய ஆயிரம் வாயிலுள்ள பற்களில் நெடுங்காலமாக ஊறிக்கொண் டிருந்த விடத்தை எல்லாங்கக்க அது உலகம் எங்கணும் பரந்ததுபோலவும், இராவணன் கற்புடைய சீதாபிராட்டியாரை எடுத்து வந்து சிறை வைத்த பின்பு அவனுடைய கீர்த்தி உலகமெங்கும் கருநிறங்கொண்டு படர்ந்ததுபோலவும், அவ்விருள் உலகமுழுவதும் பரவி மூடிக்கொண்டது. இவ்வாறு இருள்பரந்த சமயத்தில் அநேகம் அரக்கர்கள் இந்திரனுலகிற்குச் செல்வார்கள். அநேகர் சந்திரமண்டலத்திற்குச் சார்வார்கள். பலர் யமலோகத்திற்குப் போவார்கள். இவைகளை எல்லாம் அஞ்சனையின் புதல்வன் பார்த்துக்கொண்டிருந்தனன். அப்போது,

அருந்தவன் சுரபியே யாதி வானமா
விரிந்தபே ருதயமே மடிவெண் டிங்களா
வருந்தலின் முலைகதிர் வழங்கு தாரையாச்
சொரிந்தபா லொத்தது நிலவின் றோற்றமே.(33)

எண்ணுடை யனுமன்மே லிழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
அண்ணல்வா ளரக்கனை யஞ்சி யாய்கதிர்
விண்ணிடைத் தங்கின போன்ற மீனெலாம்.(34)

அக் காலத்து அநுமான் இலங்கைக்குள் எவ்வாறு பிரவேசிப்பது என்பதை ஆலோசித்துக்கொண்டு

சமுத்திரமே அகழாக மேல் ஏழு லோகத்தினுக்கும் அப்பாற்சென்று உயர்ந்து ஊழிக்காலத்தும் அழியா நிலைமையினை யுடையதாய்ப் பொன்னாற் சமைக்கப் பட்டு விளங்கும் மதிலைச் சார்ந்தனன். அம் மதிலின் உயர்வை உற்றுநோக்கி, 'சந்திர சூரியர்கள் இராவ-ணன் ஆணைக்குப் பயந்து இவ் விலங்கையின்மேல் வருகிறதில்லை' என்கிறார்களே அது தவறு. இம் மதிலின் உயரத்தைத் தாண்டிச்செல்ல இயலா-தென்றே ஒதுங்கிச் செல்கின்றனர்' என்று வியப்-பெய்தினன். பிறகு அக் கோட்டையின் வாயிலை நோக்கி, 'மகாமேருவைக் கொடுவந்து நிறுத்தி அதன் நடுவே இடைவெளி செய்ததுவோ? தேவலோகத்-திற்கு ஏறிச் செல்ல அமைக்கப்பட்டதொரு படிக்-காலோ? மேல் ஏழு லோகம் கீழே விழாமல் நிலை-நிறுத்துதற்கு நடுவே நாட்டி வைத்ததொரு தூணோ? கடல் நீரெல்லாம் புகுந்து போவதற்கு அமைக்கப்-பட்டதொரு வழியோ? நம்முடைய வானர வீரர்கள் வந்து புகத்தக்கவழி இதுவேயென்று துணிவோ-மாயின் இங்கே பகைவர்கள் எழுகடலினும் மிக்கு-ளார். ஆகையால் எந்தத் தேவர்கள் எந்த அசுரர்கள் எத்தகைய ஆற்றலுடையவர்க ளாயினும் இந்தக் கோட்டை வாயிலைக் கடக்கமாட்டுவரோ,' என்று பலபட எண்ணுவானாயின் அஞ்சனையின் புதல்வன் பிறகு,

வாயில்வழி சேறலரி தன்றியும் வலத்தோர்
ஆயிலவர் வைத்தவழி யேகலழ கன்றால்
காய்கதி ரியக்கின்மதி லைக்கடிது தாவிப்
போயிநகர் புக்கிடுவெ னென்றுரயல் போனான்.

வேறு

நாணு ளுந்தா னல்கிய காவ னனிமூதூர்
வாணு ளந்நாள் போவதின் மேலே வழிநின்றுள்
தூணு மென்னுந் தோளுடை யானைச் சுடரோனைக்
காணு வந்த கட்செவி யென்னக் கனல்கண்ணுள்.

எட்டுத் தோளா றுறு முகத்தா ளுலகேழுந்
தொட்டுப் பேருஞ் சோதி நிறத்தாள் சுழல்கண்ணுள்
முட்டிப் பேரின் மூவுல கத்தை முதலோடும்
கட்டிச் சீறுங் காவல் வலத்தாள் கமையில்லாள். (37)

அஞ்சு வணத்தி னுடை
யுடுத்தா ளரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேக
மிகுத்தா ளருளில்லாள்
அஞ்சு வணத்தி னுத்தரி
யத்தா ளலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளி
ராரத் தணிகொண்டாள். (38)

எல்லா முட்கு மாழி
யிலங்கை யிகன்மூதூர்
நல்லா ளவ்வூர் வைகுறை
யொக்கு நயனத்தாள்
நில்லாய் நில்லா யென்றுரை
நேர்வா ணினையாமுன்
வல்லே சென்றுள் மாருதி
கண்டான் வருகென்றுன். (39)

தன்னெதிரில் நிற்கும் அநுமானைப் பார்த்து இலங்கா
தேவியானவள், 'அறிவில்லாதவனே, அச்சமில்லாமல்

தகாத காரியஞ் செய்தனை? இலையும், காயும், கனியும் தின்று திரிகின்ற குரங்கோடு எனக்கென்ன பேச்சு? மதிலின்மேலேறி உன்னுடைய பிராணனைப் போக்கடித்துக்கொள்ளவேண்டாம், ஓடிப் பிழைத்துப் போ' என்றனள். இலங்காதேவி புகன்றவைகளைக் கேட்ட அநுமான் கோபங்கொண்டு, 'நான் இந்தப் பட்டணத்தைப் பார்க்கும்படி வந்தேன். எளியோனாகிய யான் வந்தால் உனக்கு என்ன நஷ்டம்?' என்று பகர்ந்தனன். அதனைக் கேட்ட இலங்காதேவி, 'நான் போம்படி சொன்னாலும் போகாமல் எதிர்மாற்றம் பகர்ந்துகொண்டு என் முன் நிற்கின்றனையே நீ யாவன்? என்று சொல். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் முதலியோரும் இவ்வூருக்குட் புக அஞ்சுவர். இவ்வூர் உன்னாலே பார்க்கும்படியான ஊரா?' என்று நகைத்தனள். நகைத்தவளாய இலங்கா தேவியைக் கண்டு ஐயனும் மனத்துள் நகைத்தனன். அதை உணர்ந்த இலங்கா தேவி, 'நீ யார்! நீ யார் சொல வந்தனை, உன் பிராணன் உக்கா லன்றி நீ ஓடமாட்டாயோ!' என்றனள். புகழ் மிக்கான், 'இவ் வூர் புக்கா லன்றிப் போகிலன்' என்றனன். சிறிய திருவடி மொழிந்தவைகளைக் கேட்ட இலங்கா தேவி 'இவன் வானரனல்லன். வஞ்ச மனத்துடன் போந்தவனாக இருக்கின்றான். யமனும் என்னைக் காணின் நடுக்கிடுவானே. இவன் ஆலகால விடத்தை அருந்திய உருத்திரமூர்த்தியே போல் சிரிக்கின்றனன். இவன் நெஞ்சங் கல்லா னியன்றதோ' என்று பலபட எண்ணி 'இவனை நான் அவசியம் கொல்வேன். இல்லையேல் இவ்வூருக்கே அழிவு வரும்' என்று துணிந்து வாயினின்றும், கண்களினின்றும் அனல் பொங்கக்கோப

முடையவளாய்ச் சூலாயுதத்தை அநுமான்மீது செல விட்டனள். மின்னிக்கொண்டு தன்மீது வரும் சூலாயுதத்தை, நாகத்தை முறிக்கும் கலுழனே போல், கையாற் பற்றி, தேவர்கள் வியப்ப, ஒடித்து எறிந்தனன் அநுமான். சூலாயுதம் ஒடிந்துபட்டதைக் கண்ட இலங்கா தேவி பல விதமான தெய்வப் படைக்கலங்களைப் பிரயோகஞ் செய்யும்படி முயன்றனள். அதைக் கண்ட அநுமான் அவள் கையி லிருந்த ஆயுதங்களை யெல்லாம் ஒன்றொழியாமற் பற்றி விண்ணிலெறிந்தனன். ஆயுதங்கள் இல்லாமையினால் இலங்காதேவி தன் கையினாலே சிறிய திருவடிகளை ஓங்கி அடித்தாள்.

அடியா முன்ன மங்கை
யணைத்து மொருகையால்
பிடியா என்னே பெண்ணிவள்
கொல்விற் பிழையென்னா
ஒடியா நெஞ்சத் தோரடி
கொண்டான் உயிரோடும்
இடியே றுண்ட நாகமெ
னப்பா ரிடைவீழ்ந்தாள். (40)

விழுந்தா ளொருந்தாள் வெங்குரு
திச்செம் புனல்வெள்ளத்
தழுந்தா நின்றா ளன்முக
னார்தம் மருளன்றி
எழுந்தாள் யாரும் யாவையு
மெல்லா வுலகத்துந்
தொழுந்தாள் வீரன் றாதுவன்
முன்னின் றிவைசொன்னாள். (41)

அநுமானால் அடிபட்ட இலங்கா தேவி எழுந்து அநுமானை நோக்கி, 'ஐயா மகானுபாவனே ! முற்காலத்தில் பிரபஞ்சத்தைச் சிருட்டி செய்யும் பிரமன் என்னை இவ் விலங்கையைக் காத்துக்கொண் டிருக்கும்படி கட்டளையிட்டனன். என் பெயர் இலங்கைமாதேவி. நான் செய்யுந் தொழிலில் தவறி உள்ளந்திகைத்து நின்மாட்டு இந்தச் சிறுமையைச் செய்தேன். நீ என்னைக் கொல்லாமல் பிழைத்துப் போ என்னின் யான் உண்மையை உணர்த்துவன்' என்று,

எத்தனை காலங் காப்பன் யானிந்த
மூதூ ரென்று
முத்தனை வினவி னேற்கு முரண்வலிக்
குரங்கொன் றுன்னைக்
கைத்தல மதனாற் றீண்டிக் கழிவதன்
றென்னைக் காண்டி
சித்திர நகரம் பின்னைச் சிதைவது
திண்ண மென்றான். (42)

அன்னதே முடிந்த தைய அறம்வெல்லும்
பாவந் தோற்கும்
என்னுமீ தியம்ப வேண்டுந் தகையதோ
இனிமற் றுன்னால்
உன்னிய வெல்லா முற்று முனக்குமுற்
றுத துண்டோ
பொன்னகர் புகுதி யென்னாப் புகழ்ந்தவ
ளிறைஞ்சிப் போனாள். (43)

வீரனும் விரும்பி நோக்கி மெய்ம்மையே
விளையு மஃதென்
றாரியன் கமல பாத மகத்துற
வணங்கி யாண்டப்

பூரிய ரிலங்கை மூதூர்ப் பொன்மதி
 ருவிப் புக்கான்
சீரிய பாலின் வேலை சிறுபிரை
 தெறித்த தன்னான். (44)

இலங்காதேவியை வென்று பொன் மதிலைத்தாவி நகரத்துட் பிரவேசித்த அநுமான் சூரிய காந்தக் கற்களால் சமைக்கப்பட்டு விளங்கா நின்ற பல மாடங்கள் இருளை யகற்றிப் பகல் செய்யும் அழகைக்கண்டு ஒற்றைத் தேரோனாகிய சூரியன் உதயஞ் செய்தனன் கொல்லோ என்று துணுக்கங் கொண்டனன். மீட்டும் கூர்ந்து பார்த்துச் சூரியோதய மானதன்று இந்நகரின்கண்ணுள்ள மாடமாளிகையின் பிரகாசமென்றே தெளிந்து இம் மாணிக்க மாடங்களின் ஒளிக்கு முன்னர் ஆதித்தன், மின்மினி போலக் காணப்படுவான் என்று அதிசயித்தனன். பசும் பொன்னாற் சமைக்கப்பட்ட மதில்களின் நடுவில் பதித்து வைத்திருக்கும் மாணிக்கக் கற்களின் காந்தியினாலே இருள் நீங்குதலின், இலங்கைமா நகரில் வாழும் அரக்கர்கள் பகற் காலத்தில் சஞ்சரிப்பது போலவே இரவிலேயும் யாதொரு தடையு மில்லாமல் சஞ்சரிப்பார்க ளாயினர். இக் காரணம் பற்றியே அரக்கர்கட்கு நிசிசரர் என்னும் பெயரும் எழுந்தது போலும் என்று ஐயுற்றனன் அநுமான். இவ்வாறு பலபட எண்ணி வீதி வழியே செல்லுதல் குற்றமாம் என்று தேர்ந்து தன்னுடைய பெரிய திருமேனியைச்சுருக்கிக்கொண்டு மாளிகையின் பாங்கர்ச் செல்வானாயினான் திருப்பாற்கடலைக் கடைந்த மந்தர கிரி போலவும் தயரதன் புகழே யெனவும் திரண்ட தோளையுடைய அநுமான். பசுக்கள் கட்டப்-

பட்டிருக்கின்ற கொட்டகைகளிலும், ஆனைகள் கட்டப்பட்ட கூடங்களிலும், தேர்கள் நிற்கின்ற நிலைகளிலும், குதிரைகள் கட்டுகின்ற பந்திகளிலும், காவலமைந்த கடைகள் தோறும், புஷ்பங்களை விரும்பிச்செல்லும் பொறிவண்டேபோல் கருங்கடல் கடந்த கால்களால் தாவிச்சென்றனன் அநுமான். மாளிகையின் பாங்கரிற் செல்லும் சிறிய திருவடி, பற்பல நிற மணிகள் பதித்த மாடங்களின் நிறம் தன் மீது படிதலினாலே, அன்பிலார்க்குக் காண்டற்கு அரியனாய், அன்புடையார்க்குக் காண்டற் கெளியனாய்த் தன் அகத்துறையும் ஸ்ரீராமசந்திரனேபோல் ஓர்காற் கரியனாயும், ஓர் கால் வெளியனாயும், ஓர் கால் செய்யனாயும் விளாங்கா நின்றனன். அமர மாதர் ஆகாயகங்கையின் தெண்ணீர் கொண்டு நீராட்டக் கற்பகச்சோலையி லிருந்து மஞ்சன மாடுகின்ற அரக்கிமார்களையும், தங்கள் தளிர்க்கை நோவ அளந் தெடுத்தமைத்த வீணையின் ஓசையைக் கெடுக்கும்படி முழங்குகின்ற மேகத்தினது வாயைப் பொத்துகின்ற சேடியர்களையும், அழகிய பூம்பந்தலின்கீழ்ச் சுவர்ணமயமான நடன சாலையில் கந்தர்வமாதர் நடனம் புரிவதைக் கண்டு மகிழ்கின்ற அரக்கமாதர்களையும், மதுபானம் பண்ணிக் களிக்கின்றவர்களையும், தேவமாதர் பல்லாண்டு கூறப் புதுமணம் கொள்பவர்களையும் சென்று சென்று நோக்குவானாயினன் அஞ்சனையின் புதல்வன். அந்நகரின்கண் உள்ள சிறப்புக்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே செல்லும் மாருதிமைந்தன் ஒரு பெரிய மலையே போற் கிடந்து உறங்கும் கும்பகர்ணனைக் கண்டனன்; கண்ட வளவில் இவன்தான் அரக்கர் தலைவனான இரா-

வணனே என்று நினைத்துக் கண்கள் தீப்பொறி சிந்தக் கனன்று அருகே சென்று நோக்கி ஒருபது தலையும் இருபது காமும் இன்மையால் இவன் இராவணன் அல்லன் எனத் தெளிந்து கோபந் தணிந்தனன். பின்னர் இவன் எவனாயினும் ஆகுக. இவ் வரக்கன் அழிவதற்குச் சில நாட்களே யுள்ளன என்று எண்ணி அவன் இருப்பிடத்தை விட்டு அப்பாற் சென்றனன். இராகவன் புகழே என்று சொல்லும் சிறப்புவாய்ந்த அநுமான் மண்டபங்களிலுள்ள சிகரங்களினும், மாளிகைகளினும், மகளிர் ஆடும் அரங்குகளிலும், தேவராலயங்களிலும், பட்டிமண்டம் முதலிய பல இடங்களிலும் பிராட்டியாரைத் தேடிக்கொண்டே சென்றனன். வாயில் வழியாகவும் சாளரங்களின் வழியாகவும் வழிக்குத் தக்கபடி சிறிதாகவும், பெரிதாகவும் உருவம் எடுத்துக்கொண்டு காற்றோடு காற்றாயும் புகையோடு புகையாயுங் கலந்து அணுவிலும் மேருவிலும் ஒருபடியாகக் கலந்து விளங்கும் தனது நாயகனாகிய கோதண்டபாணியைப் போலச் செல்வதாயினன் மாருதிமைந்தன். இவ்வாறு எல்லாப் பக்கங்களிலும் தேடிப் பின் மடந்தையர் யாவரையுங் காணுங் கருத்தினனாய்ச் சென்று புண்ணியனாய விபீஷணன் உறங்கும் கோயிலுட் புக்கனன்,

உற்று நின்றவ னுணர்வைத்தன்
னுணர்வினா லுணர்ந்தான்
குற்ற மில்லதோர் குணமுள
னிவனெனக் கொண்டான்

செற்ற நீங்கிய மனத்தினு
  னொருசிறை சென்றான்
பொற்றை மாடங்கள் கோடியோர்
  நொடியிடைப் புக்கான். (45)

ஏதி யேந்திய தடக்கையர்
  பிறையெயி றிலங்க
மூது ரைப்பெருங் கதைகளும்
  பிதிர்களு மொழிவார்
ஓதி லாயிர மாயிர
  முணர்விலி யரக்கர்
காது வெஞ்சினக் களியினர்
  காவலைக் கடந்தான். (46)

இலக்ஷக் கணக்கான அரக்கர்களின் காவலைக் கடந்து உள்ளே புகுந்து அங்கே மாதர் நடுவில் துயில்கின்ற இந்திரசித்தைக் கண்டனன் புகைபுகா வாயிலினும் புகும் ஆற்றலமைந்த அநுமான். இந்திரசித்தைக்கண்டவன், ‘இவன் அரக்கன் மகனோ? சிவபெருமானின் திருக்குமாரனாகிய முருகனோ? யாவனோ? அறியேன், இளையவீரனுக்கும் சீராமபிரானுக்கும் இவனோடுபோர் புரிய நெடுநாள் வேண்டிவரும். இத்தகைய வீரனைத் தனக்குத் துணையாகப் பெற்ற இராவணன், திரிலோகங்களையும் வென்று தன் அடிக் கீழ்ப்படுத்தினன் என்று புகழ்தல் அவற்கு ஒரு சிறப்பாகுமோ? உருத்திரனை, பிரமதேவனை, திருநெடுமாலாம் அவனை யல்லது இவ்வரக்கன் மகனை நிகர்ப்பவர் வேறெயுளர் என்று புகல்வது அறிவாகுமா?’ என்று எண்ணினன். மாருதிமைந்தன் இந்திரசித்து உறங்குவதைக்கண்டு இங்கே நிற்பது வீணெனத் தெளிந்து அவ்விடத்தி-

னின்றும் நீங்கி ஆயிரக்கணக்கான மாளிகையிடங்களில் சென்று தேடினான். அக்ஷன் மாளிகையையும், அதிகாயன் கோயிலையும், தம்பியர்கள் இல்லத்தையும் சேனைத் தலைவர்களின் மனைகளையும் தொடர்ந்து பார்த்தான். பின்னர் அகழியைக் கண்டு பெருவியப்பெய்தி அவ்வகழியைக் கடந்து, அரக்கர் வாழும் வீதியிற் புகுந்து தான் ஒருவனாகவே பன்னிரண்டு யோசனை தூரமுள்ள மூன்று லக்ஷம் வீதிகளையும் தேடினான். அப்போது எல்லாத் தொழிலாளிகளும் தங்கள் வியாபாரம் ஒழிந்து உறங்குவாராயினர். நியமமுடையவர்களாய் நிறைந்த ஞானத்தையுடைய உத்தமர்களும் யோகியர்களும் துயின்றார்கள். மதங்கொண்ட களிறும் உறங்கின. பித்தரும் மயக்கமுற்றுத் தூங்கினார்கள். ஊர்காப்பாளரது பறையே எங்கும் முழங்கின. இரத்தின தீபங்கள் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அப்போது இடைநகரிலுள்ள அம்மதிலகத்தில் அரசர் வாழும் இரண்டு தெருக்களின் கோடியையும் விரைவிற் சென்று ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்த்துத் தேடிப் பின்னர்க் கொடியோனான இராவணனது இருக்கையைச் சுற்றியிருப்பதோர் அகழியைக் கண்டு அவ்வகழி சூழ்ந்த மதிலையுந் தாவிக்கடந்து உள்ளே பிரவேசித்தான். மங்கைமார்களது இருப்பிடத்தை நண்ணினான். இயக்க மாதர்கள் வாழுந் தெருவெல்லாஞ் சென்று தேடினான். அங்கிருந்து திரிலோகாதிபதியாகிய இராவணன் வாழும் பெருங் கோயிலுக்குப் போக எண்ணிக்கொண் டிருக்கும்போது மயன் மகளாகிய மண்டோதரி வாழும் மணிமாடத்தைக் கண்டனன் அனுமான். அதன் பொலிவைவியப்புற்று நோக்கி 'இம்மாடம் இவ்வளவு சிறப்புடன் பொலிவதற்கு

வேறு காரணம் உண்டுபோலும், எங்கள் நாயகற்குரிய இன்னுயிரன்ன சீதாபிராட்டியாரை இராவணன் இவ்விடம் கரந்து வைத்திருக்கின்றனன்றோ ?' என்று அயிர்த்தனன். தேவமாதர் பணி செயச் சிறப்புடன் உறங்கும் மண்டோதரியை மீண்டும் கூர்ந்துபார்த்து,

இன்ன தன்மையி னெரிமணி விளக்கங்க
ளெழில்கெடப் பொலிகின்ற
தன்ன தின்னொளி தழைப்புறத் துயிலுறு
தையலைத் தகைவில்லான்
அன்ன ளாகிய சானகி யிவளென
வயிர்த்தகத் தெழுவெந்தீத்
துன்னு மாருயி ருடலொடுஞ் சுடுவதோர்
துயருழந் திவைசொன்னான். (47)

எற்பு வான்றொடர் யாக்கையாற்
பெறும்பய னிகந்தனெ னிதுநிற்க
அற்பு வான்றனை யிற்பிறப்
பதனொடு மிகழ்ந்துதன் னருந்தெய்வக்
கற்பு நீங்கிய கனங்குழை
யிவளெனிற் காகுத்தன் புகழோடும்
பொற்பும் யானுமிவ் விலங்கையு
மரக்கரும் பொன்றுது மின்றென்றான். (48)

மானு யர்த்திரு வடிவின
ளவளிவண் மாறுகொண் டனள்கூறின்
தானி யக்கியோ தானவர்
தையலோ வையுறுந் தகையானாள்

காணு யர்த்ததா ரிராமன்மே
　　ஞேக்கிய காதல்கா ரிகையார்க்கு
மீனு யர்த்தவன் மருங்குதான்
　　மீளுமோ நினைத்தது மிகையென்ருன். (49)

இலக்க ணங்களுஞ் சிலவுள
　　வென்னினு மெல்லேசென் றிறுக்கில்லா
அலக்க ணெய்துவ தணியதுண்
　　டென்றெடுத் தறைகின்ற திவள்யாக்கை
மலர்க்க ருங்குழல் சோர்ந்துவாய்
　　வெரீஇச்சில மாற்றங்கள் பறைகின்ருள்
உலக்கு மிங்கிவள் கணவனு
　　மழிவுமிவ் வியனகர்க் குளதென்ருன். (50)

அநுமான் இனையவெலாம் எண்ணி அவ்விடம் விட்டுப் பெயர்ந்து மேருக் குன்றும் இம் மாளிகையின் முன் குன்றியே என்ன ஓங்கிய ஓர் கொற்ற மாளிகையிற்சென்று புகுந்தனன். புக்க அளவில் நிலம் துடித்தது. நெடு வரை பொடித்தது. நிருதர் மங்கையர்க்குக் கண், புருவம், தோள் எல்லாம் வலப் புறம் துடித்தன. மின்ன லின்றியும் வானம் இடித்தது. பூரண மங்கல கலசங்கள் வெடித்தன. இவைகளே யெல்லாம் மாருதி நோக்கி உள்ளம் நெக்கு நின்று, பரிந்த சிந்தை யுடையவனுய், 'அந்தோ! இந் நகரத்தை விட்டு இலக்குமி நீங்குவள் என்று புலனுகின்றது. என் செயலாம். எக் குலத்தில் பிறந்த யாவரே யாயினும் அவரவர் செய்த புண்ணிய பாவங்கள் எல்லார்க்கும் ஒன்றே. ஊழ் வினையைவிட வலியது ஒன்றும் இல்லை' என்பதைச் சிந்தித்தனன். பிறகு

வெள்ளிய காந்தி வீசுவதோர் மண்டபத்தில் பாற்கடல் மீது கருங் கடல் கிடந்தது போலும் பண்பினை யுடையவனும் மலை மேல் இளஞ்சூரியன் உதித்தாற் போன்ற தோற்றத்தை யுடைய இரத்தின கிரீடங்களும் மற்றும் பல ஆபரணங்களோடும் கூடி இரா வென்னும் பொருளே யில்லாமல் அழித்து விளங்கா நிற்கவும், பகைவர்களது முடிகள் பட்டுத் தழும்பேறிய பாதங்களை யுடையவனுமான இராவணன் வெண் மலர்ப் பாயலில் துயில் அமர்ந்திருப்பதைக் கண்டனன் அநுமான்.

கொண்டதோ ருருவ மாயன்
குறளினுங் குறுக நின்றான்
திண்டலை பத்துந் தோள்க
ளிருபதுந் தெரிய நோக்கிக்
கண்டனன் காண்ட லோடுங்
கருத்தின்முன் காலச் செந்தீ
விண்டன கண்கள் கீண்டு
வெடித்தன கீழு மேலும். (51)

தோளாற்ற லென்னகு மேனிற்குஞ் சொல்லென்னும்
வாளாற்ற கண்ணை வஞ்சித்தான் மணிமுடியென்
தாளாற்ற லாலிடித்துத் தலைபத்துந் தகர்த்தின்றென்
ஆளாற்றல் காட்டேனே லடியேனும் முடியேனே. ()

நடித்துவாழ் தகைமையதோ
வடிமைதா னன்னுதலைப்
பிடித்தவா ளரக்கனார்
யான்கண்டும் பிழைப்பரோ

ஒடித்துவான் ரேளனைத்துந்
தலைபத்து முதைத்துருட்டி
முடித்திவ்வூர் முடித்தான்மேன்
முடிவதெலா முடிந்தொழிக. (53)

என்றாக்கி யெயிறுகடித்
திருகரனும் பிசைந்தெழுந்து
நின்றாக்கி யுணர்ந்துரைப்பான்
நேமியோன் பணியன்றால்
ஒன்றாக்கி யொன்றிழைத்த
துணர்வுடையைக் குரித்தன்றால்
பின்றாக்கி னிதுசாலப்
பிழைபயக்கு மெனப்பெயர்ந்தான். (54)

ஆலம்பார்த் துண்டவன்போ
லாற்றலமைந் துளரெனினும்
சீலம்பார்க் குரியோர்க
ளெண்ணாது செய்குவரோ
மூலம்பார்க் குறினுலகை
முற்றுவிக்கு முறைதெரினுங்
காலம்பார்த் திறைவேலை
கடவாத கடலொத்தான். (55)

பிராட்டியாரைத் தேடிப் போந்த அநுமான் இராவணன் மாளிகையை அடைந்து அவன் சகல வைபவங்களுடன் கண்ணுறங்குவதைக் கண்ணுற்று, 'நமது பிராட்டியாரைக் கள்ள மார்க்கமாய்க் கவர்ந்து கொணர்ந்த இவ் வரக்கன் மணிமுடிகளை என் தாள்களால் உதைத்துத் தள்ளி அவன் ஒருபது தலைகளையும் தகர்த்திலேன் என்னில் யான் சீராமபிரானுக்கு

அடிமை என்பது பொருந்துமோ என்று பலபட எண்ணிச் சினங்கொண்டனன். பின்னர் அவ்வாறு புரிவது குற்ற மென்றும் இறைவன் பணி அன்று' என்றும் தெளிந்து இராவணன் மாளிகையை விட்டுப் பெயர்ந்து தான் மேற்கொடு போந்த காரியத்தை நினைத்துப் பிராட்டியாரைத் தேடிக் காணக் கிடைக்-காமையின் நமது பிராட்டியார் இவ் விலங்கைமா நகரில் இல்லை போலும் என்று நைந்து,

கொன்றானோ கற்பழியாக்
குலமகளைக் கொடுந்தொழிலால்
தின்றானோ வப்புறத்தே
செறித்தானோ சிறையறியேன்
ஒன்றானு முணரகிலேன்
மீண்டினிப்போ யென்னுரைக்கேன்
பொன்றாத பொழுதெனக்குக்
கொடுந்துயரம் போகாதால். (56)

கண்டுவரு மென்றிருக்குங்
காகுத்தன் கவிகுலக்கோன்
கொண்டுவரு மென்றிருக்கும்
யானிழைத்த கோளிதுவால்
புண்டரீக நயனத்தான்
பாலினமம் போவேனோ
விண்டவரோ டுடன்வீயா
தியான்வாளா விளிவேனோ. (57)

கண்ணியநாள் கழிந்துளவாற்
கண்டிலெனாற் கனங்குழையை
விண்ணடைந்து மென்றுரை
யாண்டிருந்தி விரைந்தயான்

எண்ணியது முடிக்ககிலேன்
யான்முடியா திருப்பேனோ
புண்ணியமென் றொருபொருளென்
னுழைநின்றும் போயதால். (58)

எழுநா ரேசனைசூழ்ந்
தெயில்கிடந்த திவ்விலங்கை
வாழுமா மன்னுயிர்யான்
காணாத மற்றில்லை
ஊழியான் பெருந்தேவி
யொருத்தியுமே யான்காணேன்
ஆழிதா யிடராழி
யிடையேவீழ்ந் தழிவேனோ. (59)

வல்லரக்கன் றனைப்பற்றி
வாயாறு குருதியுகக்
கல்லரக்குங் கரதலத்தாற்
காட்டென்று காண்கேனோ
எல்லரக்கு மயினுதிவே
லிராவணனு மிவ்வூரும்
மெல்லரக்கி னுருக்கியுக
வெந்தழலால் வேய்கேனோ. (60)

எருவைக்கு முதலாய
சம்பாதி யிலங்கையிலத்
திருவைக்கண் டனனென்று
னவனுரையுஞ் சிதைந்ததால்
கருவைக்கு நெடுநகரைக்
கடலிடையே கரையாதென்
உருவைக்கொண் டின்னமுநா
னுளனாகி யுழல்வேனோ. (61)

வடித்தாய்பூங் குழலாளை
வானறிய மண்ணறியப்
பிடித்தானிவ் வடலரக்க
னெனுமாற்றம் பிழையாதால்
எடுத்தாழி யிலங்கைதனை
யிருங்கடலி லிட்டிவனை
முடித்தாலே யான்முடிதன்
முறைமன்ற வென்றுணர்வான். (62)

எள்ளுறையு மொழியாமல்
யாண்டையுளு முளனுய்த்தன்
உள்ளுறையு மழகனைப்போ
லெம்மருங்கு முலாவினன்
புள்ளுறையுய் யானத்தை
யுறநோக்கி யயல்போவான்
கள்ளுறையு மலர்ச்சோலை
யயலொன்று கண்ணுற்றான். (63)

காட்சி

வேறு

மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி யவ்வழி காண்பனேற் றீருமென் சிறுமை
ஊடு கண்டில னென்னிற்பின் னுரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கன்மே லிலங்கையை வீட்டி.

என்று சோலைபுக் கெய்தின னிராகவன் றூதன்
ஒன்றி வானவர் பூமழை சொரிந்தன ருவந்தார்
அன்ற வாளரக் கன்சிறை யவ்வழி வைத்த [தாம்.
துன்ற லோதிதன் னிலையினைச் சொல்லுவான் றுணிந்

இராவணனாலே சிறை எடுக்கப்பட்டு அரக்கர் தன்னை நெருக்க அசோகவனத்திலிருந்த பிராட்டியார் கல்லினிடைத்தோன்றி என்றும் ஒரு துளி நீரைக்கண்டறியாத அமிர்த சஞ்சிவியைபோல் வாடியும், தன் தேக முழுவதும் தன் இடையேபோல் மெலிந்தும் விளங்கினாள். மேலும் தூக்க மென்பதைத் துறந்து வாட்டமுற்று வெயிலிடை வைத்த விளக்கேபோல் ஒளியிழந்தவளாய்ப் புலிக்கூட்டத்து நடுவண் அகப்பட்ட பெண்மானேபோல் நடுக்க மெய்தினாள். சீதாபிராட்டியார், விழுதல், விம்முதல் மெய்வெதும்பல், வெருவரல், எழுதல், ஏங்குதல், இரங்குதல், சீராமனை எண்ணி எண்ணித் தொழுதல், சோருதல், நடுங்குதல், துயர்கொண்டு நெட்டுயிர்ப் பெறிதல், அழுதல் என்னும் இவற்றை யன்றி மற்றொன்றையும் செய்ய வறியாது தியங்குவாராயினர்,

அரிய மஞ்சினோ டஞ்சன முதலிவை யதிகம்
கரிய காண்டலுங் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலி னொருவரோ டொருவரை யுலகில்
பிரிவெ னுந்துய ருருவுகொண் டாலன பிணியாள்.

அரிது போகவோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரு மென்பதோர் துணிவால்
கருதி மாதிர மனைத்தையு மளக்கின்ற கண்ணாள் (67)

ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தண்கட லமிர்துகொண் டநங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள் (68)

மாண்டு போயின னெருவைகட் கரசன்மன் மற்ருேர்
யாண்டை யென்னிலை யறிவுறப் பார்களிப் பிறப்பில்
காண்ட லோவரி தென்றென்றும் விம்முறுங் கலங்கும்
மீண்டு மீண்டும்புக் கெரிநுழைந் தாலென மெலிவாள்.

என்னை நாயக னிளவலை
யெண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட் டறிவில
ளெனத்துறந் தானே
முன்னை யூழ்வினை முடிந்ததோ
வென்றென்று முறையால்
பன்னி வாய்புலர்ந் துணர்வுதேய்ந்
தாருயிர் பதைப்பாள் (70)

பெற்ற தாயருந் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டிறந் தார்களோ குறித்துச்
சொற்ற வாண்டெலா முறைந்தன்றி யந்நகர் துன்னான்
உற்ற துண்டெனு படருழந் துருதனோ யுறுவாள்.(71)

வேறு

மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள். (72)

தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்
வாங்கு கோல வடவரை வார்சிலை
ஏங்கு மாத்திரத் திற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள். (73)

மெய்த்த தாதை விரும்பின னீட்டிய
கைத்த லங்களைக் கைகளி னீக்கிவே
றுய்த்த போது தருப்பையி லுண்பதம்
வைத்த வேதிகைச் செய்தி மனங்கொள்வாள். (74)

மழுவின் வாளின் மன்னரை மூவெழு
பொழுதி னூறிப் புலவுறு புண்ணினீர்
முழுகி னான்றவ மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை நினைந்துயிர் சாம்புவாள். (75)

இருந்தன டிரிசடை யென்று மின்சொலில்
திருந்தினா ளொழியமற் றிருந்த தீவினை
அருந்திற லரக்கிய ரல்லு நள்ளுறப்
பொருந்தலுந் துயினறைக் களிபொ ருந்தினர். (76)

ஆயிடைத் திரிசடை யென்னு மன்பினாள்
தாயினு மினியவ டன்னை நோக்கினாள்
தூயநீ கேட்டியென் றுணைவி யாமென
மேயதோர் கட்டுரை விளம்பன் மேயினாள். (77)

நலந்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலந்துடித் தின்னமுந் தருவ துண்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன். (78)

முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமுந் தோளு நாட்டமும்
இனியன துடித்தன வீண்டு மாண்டனா
நனிதுடிக் கின்றன வாய்ந்து நல்குவாய். (79)

நஞ்சனை யான்வனத் திழைத்த நாளிடை
வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையால்
எஞ்சல வீண்டுதா மிடந்து டித்ததால்
அஞ்சலென் றிரங்குதற் கடுப்ப தியாதென்ருள். ()

என்றலுந் திரிசடை யியைந்த சோபனம்
நன்றிது நன்றெறு நயந்த சிந்தையாள்
உன்றுணைக் கணவனை யுறுத லுண்மையால்
அன்றியுங் கேட்டியென் றறைதன் மேயினுள்.(81)

உன்னிறம் பசப்புற வுயிரு யிர்ப்புற
இன்னிறத் தேனிசை யினிய நண்பினுல்
மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லவே
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால். (82)

ஆயது தேரினுன் ருவி நாயகன்
ஏயது தூதுவந் தெதிர்த லுண்மையால்
தீயது தீயவர்க் கெய்த றிண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள். (83)

எண்ணெய்பொன் முடிதொறு மிழுகி யீறிலாத்
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணலவ் விராவண னரத்த வாடையன்
நண்ணினன் றென்புல னவையில் கற்பினுய்.

தோரண முறிந்தன துணியச் சூழமா
வாரண முறியுமால் வலத்த வாண்மருப்
பாரண மந்திரத் தறிஞர் நாட்டிய
பூரண குடத்துநீர் நறவு பொங்குமால். (85)

மன்னவன் றேவியும் மயன்ம டந்தைதன்
பின்னவி ழோதியும் பிறங்கி வீழ்ந்தன
துன்னிருஞ் சுடர்சுடச் சுறுக்கொண் டேறின
இன்னலுண் டெனுமிதற் கேது வீதெனு. (86)

இவ்விடை யண்ணலவ் விராம னேவிய
வெவ்விடை யனையபோர் வீரத் தூதனும்
அவ்விடை யெய்தின னரிதி ளுேக்குவான்
நொவ்விடை மடந்தைதன் னிருக்கை நோக்கினன்.

அநுமான் தான் தேடிப் போந்த சீதாபிராட்டியார் திரிசடை என்னும் பெண்மணியுடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டனன்; அப்போது அங்கே தூங்கிக்கொண்டிருந்த அரக்கிமார் கண்விழித்தெழுந்து மழு சூலம் முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சீதாபிராட்டியாரைச் சூழ்ந்து நின்றனர். வயிற்றில் வாயுடையவர்களும், வளைந்த நெற்றியிலே கண்களை-யுடையவர்களும், பற்களுக்கிடையில் யானை, யாளி முதலிய மிருகங்கள் தூங்கக் குகைபோன்ற வாயை யுடையவர்களும் பத்துக்கையும் ஒரு தலையுமுடைய-வர்களும், இருபதுதலையும் இரண்டு கையும் உடை-யவர்களும், பயங்கரமான தோற்றமுடையவர்களும், சூலம், வாள், தோட்டி, தோமர முதலிய ஆயுதங்கள் பிடித்த கையை யுடையவர்களும், விஷமே உருக்-கொண்டது போன்ற மேனியை யுடையவர்களும், யானை, குதிரை, வேங்கை, கரடி, யாளி, பேய், நரி, நாய் ஆகிய இவற்றின் முகமுடையவர்களும், பெண் என்னும் பெயர் கொண்டு திரிபவர்களாகிய அரக்-கியர் பலர் அழகன் தேவியைச் சுற்றிக்கொண்டனர்.

ஆயிடை யுரையழிந் தழகன் தேவியும்
தீயனை யவர்முக நோக்கித் தேம்பினுள்
நாயகன் தூதனும் விரைவி னண்ணினுன்
ஒய்வில துயர்மரப் பணையி னும்பரான். (88)

தொடற்கரு மரக்கியர் காவற் சுற்றுளாள்
மடக்கொடிச் சீதையர் மாத ரேகொலாம்
கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருந்
தடத்திடை யிருந்ததோ ரன்னத் தன்மையாள்.

வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினன் கண்டனன் தேவி யேயெனு
ஆடினன் பாடின னுண்டு மீண்டும்பாய்ந்
தோடின னுலாவின னுவகைத் தேனுண்டான்.

எள்ளரு முருவின விலக்க ணங்களும்
வள்ளறன் னுரையொடு மாறு கொண்டில
கள்ளவா ளரக்கனக் கமலக் கண்ணனர்
உள்ளுறை உயிரினை ஒளித்து வைத்தவா. (91)

மாசுண்ட மணியனுள் வயங்கு வெண்கதிர்த்
தேசுண்ட திங்களு மென்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலும்
ஏசுண்ட தில்லையா லறத்துக் கீறுண்டோ. (92)

புனைகழ லிராகவன் புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழ லரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தங் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்.

தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
எவரும் பிழைத்தில ரறமு மீநின்றால்
யாவதிங் கினிச்செய லரிய தெம்பிராற்
காவதென் னடிமையும் பிழைத்தின் றுமன்றோ.()

பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவ ளிருந்த வாறெலாம்
காணநோற் றிலனவன் கமலக் கண்களால். (95)

தருமமே காத்ததோ சழக்கன் றன்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே யருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே யெம்மனோர்க் குரைக்கற் பாலதோ.()

என்றிவை யினையன வெண்ணி வண்ணவான்
பொன்றிணி நெடுமரப் பொதும்பர் புக்கவண்
நின்றன னவ்வழி நிகழ்ந்த தென்னெனின்
துன்றுபூஞ் சோலைவா யரக்கன் றோன்றினான். ()

நிந்தனை

சிகரவண் குடுமி நெடுவரை யெவையு
மொருவழி திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டல மலம்புந்
திண்டிறற் றோள்புடை வயங்கச்
சகரவே லையினீர் தழுவிய கதிரிற்
றலைதொறுந் தலைதொறுந் தயங்கும்
வகையபன் மகுட மிளவெயி லெறிப்பக்
கங்குலும் பகல்பட வந்தான்

இத்தகைய சிறப்புடன் வரும் இலங்கை நகர்க்-கரசனை தசக்கிரீவனை, ஊர்வசி உடை வாளை எடுத்-துக் கொண்டு தொடர, மேனகை வெற்றிலை மடித்து உதவ, திலோத்தமை செருப்பைத் தாங்கிச் செல்ல, அரம்பையர் குழாம்பக்கத்தே சூழ்ந்து வந்தனர். பச்-சைக்கற் பூரஞ் சேர்ந்த சந்தனக் கலவையும் மலர்களும் ஒன்று சேர்ந்து வீசுகிற பரிமளமானது திக்கஜங்களி-னுடைய மூக்கிலே போய் மடுத்தது. நாலிருகோடி நங்கையர் நான நெய்விளக்கேந்தி வந்தனர். அவர்கள் மேனியில் அணிந்த ஆபரங்களின் காந்தி இருளை எல்லாம் வாரி விழுங்கிற்று. இனியஒலிகளைச் செய்-யும் அன்னக் கூட்டம் செல்வதுபோல அம் மங்கையர் பாதங்களில் அணிந்துள்ள நூபுரமும் கிண்கிணியும், இடையி லணிந்துள்ள மேகலாபரணமும் இன்னொலி செய்ய இராவணனைச் சூழ்ந்து நடந்து வந்தனர்.

இவ்விதமான சிறப்புக்களுடன் இராவணன் வருவ-தைத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் கண்டு, 'இவன் தன்னுடைய எண்ணத்திற்கு இடையூறு நேர்ந்திருக்-கின்றது என்ற எண்ணத்தில் முனிவுங்கொண்டவ-னாய்த்துயில் நீங்கிச் செல்வது சந்திரவதனத்து அருந்-ததியாம் சீதாபிராட்டியார் தங்கியிருக்கும் சோலைக்கோ அல்லது வேறெவ்விடத்திற்கோ, இவன் எண்ணந்தான் யாதோ' என்று மனங்கலங்கி இமைத்தலில்லாத தங்-கள் கண்களையும் மூடிக்கொண்டு, உயிரெலாம் ஒடுங்க மூச்சற்று நின்றனர். தசக்கிரீவனும் நீலநிறமுள்ள மலையினின்றும் தாழும் அருவியைப்போல பால் நிற-முள்ள வெண்பட்டாலான உத்தரீயம் விளங்க, மேகத்-தைக் கிழித்துக்கொண்டு தோன்றும் மின்னற்

கொடியே போல் மார்பில் முப்புரி நூல் விளங்க, தோள்கள் தோறும் அணிந்து பொலிகின்ற வயிரங்களிழைக்கப்பெற்ற மகரிகை முதலிய ஆரணங்கள் ஆகாயத்திற் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்களேயும் ஏனைய கோள்களேயும் நோக்கிப் பரிகசிக்க, தாள்களில் அணிந்துள்ள வீரக்கழலின் காந்தி பூமியெல்லாம் தவழ, புன்னகையோடு கூடியமுகம் நிலவோடு கூடிய இருளேப்போலப் பொலியச் சீதாபிராட்டியார் தங்கியிருக்கும் சோலேயை நோக்கி வருவானுயினுன்.

இனையதோர் தன்மை எறுழ்வலி அரக்க
ரேந்தல்வந் தெய்துகின் ருனே
அனையதோர் தன்மை யஞ்சனே சிறுவன்
கண்டன னமைவுற நோக்கி
வினையமுஞ் செயலு மேல்விளே பொருளு
மிவ்வழி விளங்குமென் றெண்ணி
வனேகழ லிராமன் பெரும்பெய ரோதி
யிருந்தனன் வந்தயன் மறைந்தே. (99)

சீதாபிராட்டியாரைத் தேடி வந்த இராவணன் தன்னுடன் போந்தோர் யாவரையும் தூரத்தே நிறுத்தித் தான் மாத்திரம் சனகியார் இருக்கும் இடத்தை நோக்கி வந்தனன். அம் மெல்லியல் புள்ளிகளேயும், கோடுகளேயும், மிக்க வலிமையையும், எரிகின்ற விழியையுமுடைய சினங்கொண்ட கடும்புலி தன்னே விழுங்க வரக்கண்ட பிணேமான் போல மனங்குழைந்து நடுங்கினுள் ; அயலில் மறைந்திருந்த அநுமான் கூசி ஆவிகுலேகின்ற சீதா பிராட்டியாரையும் ஆசையால் உயிரழிபவனுய இராவணனேயும் கண்டு உளேயும் உள்ளத்தவனுய்,

வாழி சானகி வாழி யிராகவன்
வாழி நான்மறை வாழிய ரந்தணர்
வாழி நல்லற மென்றுற வாழ்த்தினன்
ஊழி தோறு புதிதுறுங் கீர்த்தியான். (100)

அவ்வி டத்தரு கெய்திய ரக்கன்றான்
எவ்வி டத்தெனக் கின்னரு ளீவது
நொவ்வி டைக்குயி லேநுவல் கென்றனன்
வெவ்வி டத்தை யமிழ்தென வேண்டுவான். (101)

தேவர் தேவியர் சேவடி கைதொழும்
நாவின் மூவல கின்றனி நாயகம்
மேவு கின்றது நுன்கண் விலக்கினை
யாவ ரேழையர் நின்னி னிலங்கிழாய். (102)

குடிமை மூன்றுல குஞ்செயுங் கொற்றத்தென்
அடிமை கோடி யருளுதி யாலென
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான். (103)

இராவணன் பகர்ந்த, பழுக்கக் காய்ச்சிய சலாகை போன்ற கொடிய வார்த்தைகள் பிராட்டியாரின் செவியில் புகுமுன்னரே செவிகள் தீய்ந்தன, உள்ளம் திரிந்தது, கண்களினின்றும் புனல் பாய்ந்தது. இத்தகைய நிலைமை எய்தப் பெற்ற சீதாபிராட்டியார்,

மல்லடு திரடோள் வஞ்சன்
மனம்பிறி தாகும் வண்ணம்
கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங்
கற்பின்மேற் கண்ட துண்டோ

இல்லொடுந் தொடர்ந்த மாதர்க்
கேய்வன வல்ல வெய்ய
சொல்லது தெரியக் கேட்டி
துரும்பெனக் கனன்று சொன்னாள். ()

அஞ்சினை யாத லானன்
றுரிய னற்ற நோக்கி
வஞ்சனை மாறனன் றேவி
மாயையான் மறைந்து வந்தாய்
உய்ஞ்சனை போதி யாகின்
விடுதியுன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை யெதிர்ந்த போது
நோக்குமே நினது நாட்டம். (105)

பத்துள தலையுந் தோளும்
பலபல பகழி தூவி
வித்தக வில்வி னூற்குத்
திருவிளை யாடற் கேற்ற
சித்திர விலக்க மாகு
மல்லது செருவி லேற்கும்
சத்தியை போலின் மேனாட்
சடாயுவாற் றரையின் வீழ்ந்தாய். (106)

பெற்றுடை வரனு நாளும்
பிறந்துடை யுரனும் பின்னும்
மற்றுடை யெவையுந் தந்த
மலரயன் முதலோர் வார்த்தை
விற்றொடை யிராமன் கோத்து
விடுதலும் விலக்குண் டெல்லாம்
இற்றிடைந் திறுதன் மெய்யே
விளக்கின்முன் னிரு ளுண்டாமோ. (107)

இப்பெருஞ் செல்வ நின்க
ணீந்தபே ரீசன் யாண்டும்
அப்பெருஞ் செல்வந் துய்ப்பா
னின்றுமா தவத்தி னன்றே
ஒப்பருந் திருவி னீங்கி
யுறவொடு முலக்க வுன்னித்
தப்புதி யறத்தை யேழாய்
தருமத்தைக் காமி யாதே. (108)

உன்னையுங் கேட்டு மற்றுன்
னூற்றமு முடைய நாளும்
பின்னையிவ் வரக்கர் சேனைப்
பெருமையு முனிவர் பேணிச்
சொன்னபி னுங்கை மூக்கு
மும்பியர் தோளுந் தாளும்
சின்னபின் னங்கள் செய்த
வதனைநீ சிந்தி யாயோ. (109)

ஆயிரந் தடக்கை யானின்
னைந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக்
குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்க
டுணித்தவன் றுலைந்த மாற்றம்
நீயறிந் திலையோ வேகு
நெறியறிந் திலாத நீசா. (110)

இவ்வாறு சீதாபிராட்டியார் இடித்துக் கூறிய வார்த்தை-களைக் கேட்ட இராவணனுக்கு அடக்கொணக்கோபம் உண்டாயது. இருபது கண்களிலும் அனற்பொறி

பறக்க மலைகள் எல்லாம் அடியற்றுக் கீழ் விழும்படி அதட்டி ஆரவாரித்தான். கோபம் அதிகமாக உண்டாகவே 'இவளைப் பிளந்து தின்பேன்' என்று உடன்று எழுந்தனன்.

அன்ன காலையி னனுமனு
மருந்ததிக் கற்பின்
என்னை யாளுடை நாயகன்
றேவியை யென்முன்
சொன்ன நீசன்கை தொடுவதன்
முன்றுகைத் துழக்கிப்
பின்னை நின்றது செய்குவ
னென்பது பிடித்தான். (111)

தனியி னின்றனன் தலைபத்துங்
கடிதுகத் தாக்கிப்
பணியின் வேலையி லிலங்கையைக்
கீழுறப் பாய்ச்சிப்
புனித மாதவத் தணங்கினை
சுமந்தனன் போவான்
இனிதி னென்பது நினைந்தனன்
கரம்பிசைந் திருந்தான். (112)

ஆண்ட வாளரக் கன்கனன்
றண்டத்தை யழிப்பான்
மூண்ட காலவெந் தீயென
முற்றிய சீற்றம்
நீண்ட காதனீர் நீத்தத்தின்
வீவுறு நிலையின்
மீண்டு நின்றொரு தன்மையா
லிவையிவை விளம்பும். (113)

ஒன்றுகே ளுரைக்க நிற்கோ
ருயிரென வுரியான் றன்னைக்
கொன்றுகோ ளிழைத்தா னீநின்
னுயிர்விடிற் கூற்றங் கூடும்
என்றனு ருயிரு நீங்கு
மென்பதை யிமைய வெண்ணி
அன்றுநான் வஞ்சஞ் செய்த
தாரெனக் கமரி னேர்வார். (114)

பதவிய மனித ரேனும் பைந்தொடி
நின்னைத் தந்த
உதவியை உணர நோக்கி லுயிர்கொலைக்
குரிய ரல்லர்
சிதைவுற லவர்க்கு வேண்டிற் செய்திறன்
நேர்ந்த தெண்ணின்
இதனினக் கிதே யாகி னியற்றுவல்
காண்டி யின்னும். (115)

பள்ளநீ ரயோத்தி நண்ணிப் பரதனை
முதலி னோரான்
டுள்ளவர் தம்மை யெல்லா முயிர்குடித்
தூழித் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத்
தெளிதி னெய்திக்
கொள்வனின் னுயிரு மென்னை யறிந்திலை
குறைந்த நாளோய். (116)

ஈதுரைத் தழன்று பொங்கி எரிகதிர்
வாளை நோக்கித்
தீதுயிர்க் கிழைக்கு நாளுந் திங்களோ
ரிரண்டிற் றேய்ந்த

தாதலி னின்ற தெண்ணென் றறிந்தவா
றறிவா யென்னுப்
போதரிக் கண்ணி ஞளை அகத்துவைத்
துரப்பிப் போனுன். (117)

அஞ்சுவித் தானு மொன்று லறிவுறத்
தேற்றி யானும்
வஞ்சியிற் செவ்வி யாளை வசித்தென்பால்
வருவீ ரன்றுல்
நஞ்சுமக் காவ னென்னு நகையிலா
முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத் தரக்கி மார்க்கு வேறுற
உணர்த்திப் போனுன். (118)

போயின னரக்கன் பின்னைப் பொங்கரா
நுங்கிக் கான்ற
தூயவெண் மதியை யொத்த தோகையைத்
தொடர்ந்து சுற்றித்
தீயவல் லரக்கி மார்க டெழீஇத்தெழித்
துரப்பிச் சிந்தை
மேயின வண்ண மெல்லாம் விளம்புவ
ருடன்று மிக்கார். (119)

இராவணன் தன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றதும், சீதாபிராட்டியாருக்குக் காவலாகச்சூழ்ந்து கொண்டிருக்கும் அரக்கிகளுட் சிலர் கண்களில் தீப்பொறி சிந்தச் சானகிக்கு முன்னே போந்து நின்று சூலம் வேல் முதலியவைகளை வீசி இவளைக் 'கொல் லுங்கள் தின்னுங்கள்' என்று வைது பயமுறுத்தி ஞர்கள். சிலர், 'உலகம் யாவையும் தந்த நான்முகன்

வம்சத்தில் போந்தபுலஸ்தியமுனிவனுடையமைந்தன் இராவணன், எல்லோர்க்குந் தலைவன், ஆயிரஞ்சாகைகளை யுடைய வேதத்தைக்கற்று வல்லவன், மிக்க அறிவாளன் இத்தகைய நற்குணம் வாய்ந்த தசக்கிரீவன் உன்பால் மெய்யன்பு வைத்திருக்கின்றான். இதுவே யல்லாமல் அவன் செய்த புன்மையாது?' என்று புத்திபுகட்டினர். சிலர், 'பெண்களுக்குள் கொடியவளே, பொதுவாக உண்மையை யோசித்துப் பாராமல், புண்ணிலே கோலிட்டாற் போன்ற கர்ணகடூரமான வார்த்தைகளைப்பேசி, நின்முதலற்றுப் போவதல்லாமல் உலகின்கண் உள்ள மானிடவருக்கம் முழுவதும் மாய்ந்து போகத்தக்க மன வருத்தத்தையும் உண்டாக்கினை' என்று சொல்வா ராயினர். இன்னும் வேறு சிலர், 'அடீ, கன்னெஞ்சுடைய் அறிவில்லாதவளே, நீ பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் கருநெருப்பை வாரி இறைக்க ஏற்பட்டாயன்றோ? நீயும் இக்கணமே மாண்டாய்' என்று பகர்வாராயினர். இவ்வண்ணம் கொல்லத் துணிந்தவர்களுடைய செய்கையில் யாதொன்றும் குறை வில்லாத கொடுமையை உடையவர்களாய் அரக்கிமார் எல்லாம் தன்னை வருத்துவதையும், இராவணன் அவர்களை இவ் வண்ணம் செய்யும்படி ஏவியதையும் உணர்ந்து பிராட்டியார் கண்களிற் சலம் பெருக நின்று கிலேசித்துத் துக்க மேலிட்டால் நகைத்து மனங்கலங்கி நின்றார்.

இன்னோ ரன்ன வெய்திய காலத் திடைநின்றாள்
முன்னே சொன்னேன் கண்ட கனவின் முடிவம்மா
பின்னே வாளா பேதுறு வீரேற் பிழையென்றாள்
அன்னே நன்றென் றாரவ ரெல்லா மறிவுற்றார். (120)

அறிந்தா ரன்ன முச்சடை யென்பா ளவள்சொல்லப்
பிறிந்தார் சீற்ற மன்னனை யஞ்சிப் பிறிதில்லார்
செறிந்தா ராய தீவினை யன்னார் தெறலெண்ணார்
நெறிந்தா ரோதிப் பேதையு மாவி நிலைநின்றாள். (121)

உருக் காட்டுகை

இவ்வாறு வைதேகியார் மன நொந்திருக்குங் காலையில் சோலையில் ஒரு புறம் ஒதுங்கி மறைந்திருந்த அஞ்சனையின் புதல்வன், 'பிராட்டியாரைக் காண்டற் கொத்த காலம் இதுவே யாகும். இராவணன் மீது காதல் கொள்வான் பிராட்டியாரைத் தூண்டும் அரக்கிமார்களும் பிரிந்திருக்கின்றனர். இவர்களைத் தூங்கும்படி செய்ய வேண்டும்' என்று ஓர் மந்திரத்தை உச்சரித்தனன். உடனே அத்தீயோர்களும் உறங்கலாயினர். இவ்வாறு எப்பொழுதும் நித்திரை செய்யாத அரக்கிமார்களும் நித்திரை செய்வதைக் கண்டு பிராட்டியார் துக்கத்தைச் சகியாதவராய்க் கீழ் வருமாறு பிரலாபிக்கத் தொடங்கினர் :—

கருமே கநெடுங் கடல்கா ரணையான்
தருமே தனியே னெனதா ருயிர்தான்
உருமே றுறழ்வெஞ் சிலைநா ணொலிதான்
வருமே யுரையாய் வலியார் வலியே. (122)

வாரா தொழியா னெனும்வண் மையினால்
ஓரா யிரகோ டியிடர்க் குடையேன்
தீரா வொருநாள் வலிசே வகனே
நாரா யணனே தனிநா யகனே. (123)

என்றென் றுயிர்விம் மியிருந் தழிவாள்
மின்றுன் னுமருங் குல்விளங் கிழையாள்
ஒன்றென் னுயிருண் டெனினுண் டிடர்யான்
பொன்றும் பொழுதே புகழ்பூ ணுமெனு. (124)

பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணு மாசையால்
நிறையிரும் பல்பக னிருதர் நீணகர்
சிறையிருந் தேனையும் புனிதன் தீண்டுமோ. (125)

பிறர்மனை எய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்னுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்
புறனல ரவனுறப் போது போக்கியான்
அறனல தியற்றிவே றென்கொண் டாற்றுகேன். ()

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கியென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயெனு
நஞ்சனை யானகம் புகுந்த நங்கைநான்
உய்ஞ்சன னிருத்தலு முலகங் கொள்ளுமோ. (127)

ஆதலா னிறத்தலே அறத்தி னுறெனுச்
சாதல்காப் பவருமென் தவத்திற் சாம்பினுர்
ஈதலா திடமும்வே றில்லை என்றொரு
போதுலா மாதவிப் பொதும்ப ரெய்தினுள். ()

கண்டன னனுமனுங் கருத்து மெண்ணினுன்
கொண்டனன் துணுக்கமெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகனரு டூதன் யானெனுத் [ன்.
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினு

அடைந்தன னடியனே னிராம னாணையால்
குடைந்துல கனைத்தையு நாடுங் கொட்பினால்
மிடைந்தவ ருலப்பிலர் தவத்தை மேவலால்
மடந்தைநின் சேவடி வந்து நோக்கினேன்.(130)

ஐயுற லுளதடை யாள மாரியன்
மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள
கையுறு நெல்லியங் கனியிற் காண்டியால்
நெய்யுறு விளக்கனாய் நினையல் வேறென்றான்.

என்றவ னிறைஞ்ச நோக்கி இரக்கமு
முனிவு மெய்தி
நின்றவ னிருத னல்ல னெறிநின்று
பொறிக ளைந்தும்
வென்றவ னல்ல னாகின் விண்ணவ
னாக வேண்டும்
நன்றுணர் வுரையன் தூய னவையிலன்
போலு மென்னா. (132)

அரக்கனே யாக வேறோ ராமனே
யாக வன்றிக்
குரக்கினத் தலைவ னேதா னாகுக
கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரா
னாமஞ் சொல்லி
உருக்கினா னுணர்வைத் தந்தா னுயிரிதி
னுதவி உண்டோ. (133)

எனநினைந் தெய்த நோக்கி இரங்குமெ
னுள்ளங் கள்ளம்
மனனகத் துடைய ராய வஞ்சகர்
மாற்ற மல்லன்
நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப்
புலம்பா நின்றான்
வினவுதற் குரிய னென்னு வீரநீ
யாவ னென்றாள். (134)

ஆயசொல் தலைமேற் கொண்ட வங்கைய
னன்னை நின்னைத்
தூயவன் பிரிந்த பின்பு தேடிய
துணைவன் தொல்லைக்
காய்கதிர்ச் செல்வன் மைந்தன் கவிக்குல
மவற்றுக் கெல்லாம்
நாயகன் சுக்கி ரீவ னென்றுள
னவையிற் றீர்ந்தான். (135)

மற்றவன் முன்னோ னந்நா ளிராவணன்
வலிதன் வாலின்
இற்றுகக் கட்டி எட்டுத் திசையினு
மெழுந்து பாய்ந்த
வெற்றியான் தேவர் வேண்ட வேலையை
விலங்கன் மத்தில்
சுற்றிய நாகந் தேய அமுதெழக்
கடைந்த தோளான். (136)

அன்னவன் தன்னை உங்கோ னம்பொன்று
லாவி வாங்கிப்
பின்னவற் கரசு நல்கித் துணையெனப்
பிடித்தா னெங்கள்

மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத்
துள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்த ளுமைமு
மறும னென்ருன். (137)

'எழுபது வெள்ளங் கொண்ட வானர வீரர்கள் உமது நாயகனுக்குக் குறிப்பறிந்து குற்றேவல் புரி-கின்றனர். அச்சேனையிலுள்ள ஒவ்வொருவானரமும் கையால் உலகத்தைக் கல்லி எடுக்கவும், காலால் கடலைக்கடக்கவும் வல்லது. அத்தகைய வானரவீரர்-கள் இப்போது ஏழுகடல், அவற்ருற் சூழப்பட்ட ஏழுலோகம், பாதாளம், சுவர்க்கம் என்னும் இவ்விடங்-களிற்சென்று உம்மைத்தேடி அங்கே உம்மை எதிர்ந்-திலர் என்னின், அண்டத்துக்கு அப்புறம் போய்த்-தேட ஒரு தவணையும் பெற்றுக்கொண்டு போயிருக்-கின்றனர். இழிதொழிலார்கள் உம்மைக் கவர்ந்து போந்த ஞான்று தாம் எங்கள் மலையோரமாகத் தூசிற் பொதிந்து இட்ட அணிகலன்களை நோக்கி அவற்றி-னடையாளத்தால் என்னை அவ் விஜயராகவன் தென் திசை நோக்கிச் செல்லக் கட்டளையிட்டனன்; அவன் ஆணையும் சிதைவ துண்டோ? தாம் கழற்றி எறிந்த திருவாபரணங்களை யாம் சீராமன் முன் கொண்டு காட்டியபோது அவருக்கு உண்டாகிய நிலைமையை யான் என் என்று சொல்வேன். அவற்-றையே அவர் தம் உயிர் நிலையாகக் கொண்டு இற்றை நாள் அளவும் உயிர் தாங்கி நிற்கின்றனர். அவ் வணி-கலன்களே இதுகாறும் உமது மாங்கல்ய நாணைக் காத்-தன. இஃது இவ்வாருக இரண்டு வெள்ளஞ் சேனை-யோடு தென்திசை நோக்கிவந்த வாலி மைந்தனை

அங்கதன் என்னை இவ்விலங்கைக்குப் போகும்படி கட்டளை யிட்டனன். அடியேன் என் புண்ணிய மிகுதியா... இங்கு வந்து நும்சரணங்களைக் கண்டு உய்யும் புண்ணியம் பெற்றேன்' என்று விண்ணப்பஞ் செய்தனன் அநுமான்.

எய்தவ னுரைத்த லோடு
மெழுந்துபே ருவகை யேற
வெய்துற லொடுங்கு மேனி
வானுற விம்மி யோங்கி
உய்தல்வந் துற்ற தோவென்
றருவிநீ ரொழுகு கண்ணாள்
ஐயசொ லையன் மேனி
எப்படிக் கறிதி என்றாள். (138)

படியெடுத் துரைத்துக் காட்டும்
படித்தன்று படிவம் பண்பின்
முடிவுள உவமை எல்லா
மிலக்கண மொழியு முன்னர்த்
துடியிடை யடையா ளத்தின்
தொடரவை தொடர்தி என்னு
அடிமுதல் முடியின் காறு
மறிவுற அநுமன் சொல்வான். (139)

சேயிதழ்த் தாமரை என்று சேணுளோர்
ஏயின ரதன்றுணை யெளிய தில்லையால்
நாயகன் திருவடி குறித்து நாட்டுறின்
பாய்திரைப் பவளமுங் குவளைப் பண்பினும். ()

தளங்கெழு கற்பக முகிழுந் தண்டுறை
இளங்கொடிப் பவளமுங் கிடக்க என்னவை
துளங்கொளி விரற்கெதி ருதிக்குஞ் சூரியன்
இளங்கதி ரொக்கினு மொக்கு மேந்திழாய். ()

சிறியவு பெரியவு மாகித் திங்களோ
மறுவில பத்துள அல்ல மற்றினி
எறிசுடர் வயிரமோ திரட்சி எய்தில
அறிகில னுகிர்க்கியா னுவமை மாவன. (142)

பொருந்தில நிலனொடு போந்து கானிடை
வருந்தின எனினது நூலே மாறுகொண்
டிருந்தது நின்றது புவனம் யாவையும்
ஒருங்குடன் புணர்வஃ துரைக்கற் பாலதோ. ()

தாங்கணைப் பணிலமும் வளையுந் தாங்கரா
வீங்கணைப் பள்ளியா னெனினும் வேறினிப்
பூங்கணைக் காற்கொரு பரிசு தான்பொரும்
ஆங்கணைக் காவமோ ஆவ தன்னமே. (144)

அறங்கிளர் பறவையி னரச னுடெழிற்
பிறங்கெருத் தனையன பெயரும் பெற்றுடை
மறங்கிளர் மதகரிக் கரமு நாணின
குறங்கினுக் குவமையிவ் வுலகிற் கூடுமோ. ()

வலஞ்சுழித் தொழுகுநீர் வழங்கு கங்கையின்
பொலஞ்சுழி என்றலும் புன்மை பூவொடு
நிலஞ்சுழித் தெழுமணி உந்தி நேரினி
இலஞ்சியம் போலும்வே றுவமை யாண்டரோ.

பொருவரு மரகதப் பொலங்கொண் மால்வரை
வெருவுற விரிந்துயர் விலங்க லாகத்தைப்
பிரிவற நோற்றன ளென்னிற் பின்னையத்
திருவினில் திருவுளார் யாவர் தெய்வமே. (147)

நீடுறு கீட்டிசை நின்ற யானையின்
கோடுறு காமெனச் சிறிது கூறலாம்
தோடுறு மலரெனச் சுரும்பு சுற்றுறுத்
தாடொடு தடக்கைவே றுவமை சாலுமோ. (148)

பச்சிலைத் தாமரை பகற்கண் டாலனக்
கைச்செறி முகிழுகிர் கனக னென்பவன்
வச்சிர யாக்கையை வகிர்ந்த வன்றொழில்
நிச்சய மன்றெனி னேய நீக்குமே. (149)

திரண்டில ஒளியில திருவின் சேர்வில
முரண்தரு மேருவின் முரிய மூரிநாண்
புரண்டில புகழில பொருப்பென் றென்றுபோன்
றிரண்டில புயங்களுக் குவமை ஏற்குமோ. (150)

கடற்படு பணிலமுங் கன்னிப் பூகமும்
மிடற்றினுக் குவமையென் றுரைக்கு மெல்லியோர்
உடற்பட ஒண்ணுமோ உரகப் பள்ளியான்
இடத்துறை சங்கமொன் றிருக்க எங்களால். (151)

அண்ணறன் திருமுகங் கமல மாமெனின்
கண்ணினுக் குவமைவே றியாது காட்டுவேன்
தண்மதி யாமென உரைக்கத் தக்கதோ
வெண்மதி பொலிந்தது மெலிந்து தேயுமால். (152)

ஆரமு மகிலு நீவி
    அகன்றதோ ளமலன் செவ்வாய்
நாரமுண் டலர்ந்த செங்கேழ்
    நளினமென் றுரைக்க நாணும்
ஈரமுண் டமுத மூறு
    மின்னுரை இயம்பா தேனும்
மூரல்வெண் முறுவல் பூவாப்
    பவளமோ மொழியற் பாற்றே. (153)

முத்தங் கொல்லோ முழுநிலவின்
    முறியின் றிறனோ முறையமுதச்
சொத்தின் றுள்ளி வெள்ளியினந்
    தொடுத்த கொல்லோ துறையறத்தின்
வித்து முளைத்த அங்குரங்கொல்
    வேறே சிலகொல் மெய்முகிழ்த்த
தொத்தின் தொகைகொல் யாதென்று
    பல்லுக் குவமை சொல்லுகேன். (154)

எள்ளா நிலத்திந் திரநீலத்
    தெழுந்த கொழுந்து மரகதத்தின்
விள்ளா முழுமா நிழற்பிழம்பும்
    வேண்ட வேண்டு மேனியதோ
தள்ளா ஓதி கோபத்தைக்
    கவ்வ வந்து சார்ந்ததுவும்
கொள்ளா வள்ள றிருமுக்கிற்
    குவமை பின்னுங் குணிப்பாமோ. (155)

பணிக்கச் சுரத்துக் கான்முதலோர்
    கவந்தப் படையும் பல்பேயும்
தனிக்கைச் சிலையும் வானவரு
    முனிவர்குழுவுந் தனியறனும்

இனிக்கட் டழிந்த தரக்கர்குல
மென்னுஞ் சுருதி ஈரிரண்டும்
குனிக்கக் குனித்த புருவத்துக்
குவமை நீயே கோடியால். (156)

வருநாள் தோன்றுந் தனிமறுவும்
வளர்வுந் தேய்வும் வாளரவம்
ஒருநாட் கவ்வு முறுகோளு
மிறப்பும் பிறப்பு மொழிவுற்றால்
இருநாள் பகலி னிலங்குமதி
அலங்க விருளி னெழினிழற்கீழ்ப்
பெருநா ணிற்பி னவனெற்றிப்
பெற்றிற் றாகப் பெறுமன்றே. (157)

நீண்டு குழன்று நெய்த்திருண்டு
நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து சரிந்துகடை
சுருண்டு புகையு நறும்பூவும்
வேண்டு மல்ல வெனத்தெய்வ
வெறியே கமழு நறுங்குஞ்சி
ஈண்டு சடையா யினவென்றால்
மழையென் றுரைத்த விழிபன்றே. ()

புல்ல லேற்ற திருமகளும்
பூவும் பொருந்தப் புவியேழும்
எல்லை ஏற்ற நெடுஞ்செல்வ
மெதிர்ந்த ஞான்று மஃதின்றி
அல்ல லேற்ற கானகத்து
மழியா நடையை யிழிவான
மல்ல லேற்றி னுளதென்றால்
மத்த யானை வருந்தாதோ. (159)

என்ன மொழிய அம்மொழிகேட்
டெரியினிட்ட மெழுகென்னத்
தன்னை யறியா தயர்வாளைத்
தரையின் வணங்கி நாயகனார்
சொன்ன குறியுண் டடையாளச்
சொல்லு முளவா லவைதோகை
அன்ன நடையாய் கேட்கென்ன
அறிய அறைவா னயினன். (160)

வேறு

நடத்தலரி தாகுநெறி நாள்கள்சில தாயர்க்
கடுத்தபணி செய்திவ ணிருத்தியென வச்சொற்
குடுத்ததுகி லோடுமுயி ருக்கவுட லோடும்
எடுத்தமுனி வோடுமய னின்றது மிசைப்பாய். (161)

நீண்டமுடி வேந்தனரு ளேந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறு நாளின்
ஆண்டநக ராரையோடு வாயில்க லாமுன்
யாண்டையது கானென விசைத்தது மிசைப்பாய். ()

எள்ளரிய தேர்தரு சுமந்திர னிசைப்பாய்
வள்ளன்மொழி வாசக மெனத்துயர் மறந்தாள்
கிள்ளையொடு பூவைகள் கிளத்தல்கிள வென்னும்
பிள்ளையொடு தன்றிற முணர்த்துதி பெயர்த்தும். ()

மீட்டுமுரை வேண்டுவன வில்லையென மெய்ப்போர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தன னெனநெடிய கையால்
காட்டினனொ ராழியது வாணுதலி கண்டாள் (164)

இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்தகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலி நன்னுதலி செய்கை. ()

இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதோ ருயிர்ப்பொறியு மொத்தாள்.

இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகிய தறத்தவரை அண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி ஆழி. (167)

அஞ்சனையின் புதல்வன் கொடுத்த இறைவனது கணை யாழியைப் பெற்றவளவில் பிராட்டியார் அளவிலா மகிழ்ச்சி எய்தி அநுமானை நோக்கி உத்தமனே, என் உயிரைத் தந்தனையாதி என்று,

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு
முதல்வன் றாதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச்
செயலென்னு லெளிய துண்டோ
அம்மையா யத்த னாய அப்பனே
அருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானு நல்கினை
இசையொ டென்றாள். (168)

பாழிய பணைத்தோள் வீர துணையிலேன்
    பரிவு தீர்த்த
வாழிய வள்ள லேயான்
    மறுவிலா மனத்தே னென்னின்
ஊழியோர் பகலா யோதும்
    யாண்டெலா முலக மேழும்
ஏழும்வீ வுற்ற ஞான்று மின்றென
    இருத்தி என்றாள். (169)

சீதாபிராட்டியார் அநுமானைச் சிரஞ்சீவியாக இருக்கும்படி வாழ்த்தி மீட்டும் அவனை நோக்கி, 'விழுமிய குணத்தோய், 'வீரன் யாண்டு உளன்? இளவலோடும் அவன் உன்னை எவ்வழி உற்றனன்? அடியேன் செய்கையை யார்சொல்ல ஆண்டகை அறிந்தது?' என்று வினவினார். தூண்போலத் திரண்ட தடந்தோளானாய அநுமான், 'அரக்கனாய மாரீசன் மாயமான் உருவுகொண்டு போந்து சிராமன் பாணத்தால் தாக்குண்டு உயிர்விடும்போது உம்மை மயக்குவான்? 'ஆ சீதா, லக்ஷ்மணா' என்று கூவியழைத்து உயிர்துறந்தனன். மாயமானின் கூக்குரலைக் கேட்ட தாம் ஏவிய வண்ணம் இளையவன் சிராமன்பாற் சென்றனன். வீரன் இளையவன் கருத்தை முகத்தினாலேயே தெரிந்து கொண்டதேயன்றி, அவன் புகல்வதையும் கேட்டு, வண்டுறை சோலைவந்து உமது திருவடிவு காணாய் இன்னலுற்றனன்'

தேண்டிநேர் கண்டேன் வாழி
    தீதில னெங்கோ னாகம்
பூண்டமெய் யுயிரே போகப்
    பொய்யுயிர் போலநின்ற

ஆண்டகை நெஞ்சி னின்று
மகன்றிலை யழிவுண் டாமோ
ஈண்டுநீ யிருந்தா யாண்டங்
கெவ்வுயிர் விடுமி ராமன். (170)

பன்னசாலையில் தாம் இல்லாமையைக் கண்டு இடருழந்த இராகவன் கானும், யாறும், மலைகளும் தொடர்ந்து நாடித் தன்னுயிரைப் புகழ்க்கு விற்ற சடாயுவீழ்ந்திருக்கும் இடத்தைச் சார்ந்தனன். சார்ந்தவன் சடாயுவின் மேனியைக் கண்டு துயரத்தில் மூழ்கி, 'எந்தையே உற்றது என்னையோ இயம்பு' என்றனன். சடாயு, 'இலங்கை வேந்தன் உன்னைச் செய்த வஞ்சனையைச் சொல்லச் சொல்ல உலகம் வெந்தது' என்று சொல்லுந் தகைய சீற்ற வெந்தீ சீராமன்பால் உதித்தது. 'இவ்வுலக மூன்றும் சினவாயம்பால் நூறுவன்' என்று கைவில்லை நோக்கினான் சீராமன். இதைக் கண்ணுற்ற தாதையாகிய சடாயு, 'சிறியோன் ஓர் ஊறுசெய்ய அதன்பொருட்டு உலகை முனிதியோ உள்ளம் ஆறு' என்று சொல்லியளவில் சீற்றம் மாறியது. ஆறிய உள்ளத்தனைய இராகவன், 'சீதையைக் கவர்ந்து சென்ற கள்வன் எவ்வழி ஏகினான்? அன்னான் யாண்டையான்? உறையுள் யாது? செவ்வியோய் கூறுக' என்றனன். இராகவன் கேள்விக்குப் பதில் இறுக்கு முன்னரே விதியின் கோட்பால் கழுகின் வேந்தன் வீடினன். வரிவிற் செங்கை இருவரும் இடரின் வீழ்ந்தனர். இடரின் வீழ்ந்த இருவரும் ஒருவாறு தேறித் தாதைக்கு ஆண்டு செயத்தகு கடன்கள் யாவும் தேவரும் மருளச்செய்தனர். பின்னர் அரக்கனைக் காண்டும் என்று குடுமிக் குன்றும் கான-

மும் கடிது சென்றனர். தேடிச்சென்ற இடங்களி-லெல்லாம் அரக்கன் காணக் கிடைக்கவில்லை. சீராமன்,

கன்மத்தை ஞாலத் தவராருள
ரேக டப்பார்
பொன்மொய்த்த தோளான் மயல்கொண்டு
புலன்கள் வேறாய்
நன்மத்தை நாகத் தயல்சூடிய
நம்ப னேபோல்
உன்மத்த னான் றனையொன்று
முணர்ந்தி லாதான். (171)

இவ்வாறு உன்மத்தங் கொண்டவனேபோல் புலப்படும் சீராமன் கோதாவரியைக் கண்டு சினங்கொண்டு, மான் கூட்டங்களைக் கண்டு வெருண்டு நின்றனன். தன் முன் பிறந்தோனாகிய காகுத்தன் வருந்துவதைக் கண்டு இலக்குவன் அமிர்த வசனங்கள் கூறி ஆறுதல் சொல்ல ஒருவாறு தெளிந்து யாங்கள் வாழும் இருசி-யமுக பர்வதத்தை அடைந்தனன். எங்கள் நாயகனை சுக்கிரீவனும், காகுத்தனும் தேவ ருய்ய நட்புக் கொண்டனர். பின்னர் இராவணனைத் தன் வாலிடைப்-படுத்துத் துன்புறுத்திய ஆற்ற லுள்ளவனை வாலி என்னும் சுக்கிரீவனுக்கு முன் வந்தோனை ஓர் அம்பி-னால் ஆருயிர் வாங்கி, அன்பிற்றாயனை சுக்கிரீவற்கு அவ்வரசைத் தந்து, மாரிக் காலம் கழித்து அவனைச் சேனையுடன் வருவான் கட்டளையிட்டுத் தான் அக்-கிட்கிந்தை மலையில் நான்கு திங்கள் மேவியிருந்தனன். பின்னர்ப் போந்த வானர சேனைகள் உம்மைத் தேடிக்-கொண்டு நாற்புறமும் செல்ல அடியேன் தெற்குத்

திசையை நோக்கி வந்தேன்' என்று நடந்ததை உள்ள-வாறு உரைத்தனன்.

இவ்வாறு அநுமான் கூறியவைகளைக் கேட்ட சீதா பிராட்டி தன் பொருட்டால் சீராமன் வருந்தி-யதைக் கேட்டு உவகையும், துன்பமும் கொண்ட உள்ளத்தளாய் என்புற உருகினள். நைந்த சிந்தை உடையவளாயும், நயனவாரியால் தன் தேக முற்றும் நனையப் பெற்றவளாயும் இருக்கும் மைதிலி அநுமானை நோக்கி, 'ஐயனே, நீ அளப்பரும் அளக்கரைக் கடந்து இவண் எய்தியது எப் பரிசு? அதனை இயம்பு' என்று வினவினள். அதைக் கேட்ட அநுமான், 'பிராட்-டியாரே! உன் துணைவனை இரகோத்தமனது தூய தாட்களைத் தியானிக்கும் உணர்விேனார் ஒப்பில்லாத மாயையின் பெருங் கடலைக் கடத்தல் போல யானும் இக் காலினால் கருங்கடல் கடந்து இவண் போந்தனன்' என்று பதிலிறுத்தனன். அதற்குச் சீதா பிராட்டியார்,

இத்துணைச் சிறியதோ ரெண்ணில் யாக்கையை
தத்தினை கடலது தவத்தி னையதோ
சித்தியி னியன்றதோ செப்புவா யென்றாள்
முத்தினு நிலவினு முறுவன் முற்றினாள். (172)

சுட்டின னின்றனன் தொழுத கையினன்
விட்டுயர் தோளினன் விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுக டெய்தி நீளுமேல்
முட்டுமென் றுருவொடு வளர்ந்த மூர்த்தியான். ()

அனுமான் கொண்ட தோற்றம், 'பெருந்தன்மை என்றுரைக்கும் சற்குணம் பஞ்சபூதங்களின் மாட்டோ

அவ்வழி இல் எனின் அநுமான் மாட்டோ இவ்விரண்டினில் எவ்விடத்துள்ளது?' என்று எண்ணும்படியான பெருமையுள்ளது. கனக வான் கிரியே போல் ஓங்கி வளர்ந்த அநுமானுடைய திருமேனியிலுளதாம் உரோம கூட்டங்களில் தாரகைக் கணங்கள் தங்கிப் பொலிவது, மரங்கள்தோறும் மின்மினிப் பூச்சிகள் தொத்திக் கொண்டிருப்பதை நிகர்க்கும். கண்ணுக்கும், அறிவிற்கும் எட்டாத தோற்றங்கொண்டவனும் அஞ்சனையின் புதல்வனது காதுகளில் தொங்கும் இரண்டு குண்டலங்கள், சந்திரமண்டலம் சூரியமண்டல மாகிய இரண்டு மண்டலங்களோடு மாறு கொண்டன. உலகம் முற்றும் அளப்பான் திரிவிக்ரம அவதாரங் கொண்ட திருநெடுமாலே இத்தோற்றத்தை நோக்கி, 'வலிமை இல்லாத ஓர் குரங்கு' என்று புறக்கணிக்காமல் உலகிற்கு ஓர் ஆணி என்று சொல்லுந் தகைமையினையுடைய அநுமானை உற்று நோக்கி 'சேண் உயர் பெருமை என்பது ஓர் இடத்திலேயுள்ளது அன்று' என்று நாண மடைபவனானான். அநுமான் கொண்ட தோற்றத்தை எட்டுத் திக்குகளிலும் எல்லா உலகங்களிலும் உள்ள உயிர்களெல்லாம் கண்டன. அநுமானும் தன் கமலக் கண்களால் சுவர்க்காதி லோகங்களில் உள்ள சகல தேவர்களையும் பார்த்தனன். பெருந்தோற்றம் கொண்டு மேல் ஓங்கிவளர்ந்த நெடுந்தகையாம் அநுமானுடைய இரண்டு பாதமும் அழுந்துவதனால் நிலம் புதைந்து இலங்கைக்குள்ளே சமுத்ரம்வந்து வீழ அக்கடலில் உள்ள மீன்களெல்லாம் அங்கே புரண்டன. மறுவில் கற்பினளாய மைதிலியும் அவ்வநுமானின் கழலையுங் காணாதவளாய் அரக்கர் இறந்துபட்டனர் என்று உவகை எய்திய உள்ளத்தின.

ளாய், 'யான் இவ் வுருவைக் காண அஞ்சுகின்றேன் இவ்வுரு அடங்குவாய்' என்றனள்.

முழுவது மிவ்வுருக் காண முற்றிய
குழுவில துலகினிக் குறுகுவா யென்றாள்
எழுவினு மெழிலிலங் கிராமன் தோள்களைத்
தழுவின ளாமெனத் தளிர்க்குந் தன்மையாள். ()

ஆண்டகை அநுமனு மருள தாமென
மீண்டனன் விசும்பெனும் பதத்தை மீச்செல்வான்
காண்டலுக் குரியதோ ருருவங் காட்டினான்
தூண்டரு விளக்கனா ளினைய சொல்லினாள் (175)

மாண்டே னெனினும் பழுதன்றே
யின்றே மாயச் சிறைநின்றும்
மீண்டே னென்னை ஒறுத்தாரைக்
குலங்க ளோடும் வேரறுத்தேன்
பூண்டே னெங்கோன் பொலங்கழலும்
புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டே னென்று மனமகிழ்ந்தா
டிருவின் முகத்துத் திருவன்னாள். (176)

தன்னைப் புகழ்ந்து மகிழ்வெய்தும் சீதா பிராட்டியாரைப் பெரியோனும் அநுமான் அடிதாழ்ந்து, 'அருந்ததியே, இராமனடியாராம் வானரத்தின் எண்ணற்கரிய படைத் தலைவர் வண்ணக் கடலினிடைக் கிடைந்த மணலினும் பலரே யாவர். அடியேனும் அக் கூட்டத்துள் ஒருவன்; தாம் ஏவிய கட்டளையைச் செய்வேன்; சீராமன் கட்டளைக்கமைந்துள்ள வானர சேனையோ எழுபது வெள்ளம் என்னும் கணக்கை யுடையது. இவ்-

விலங்கையைச் சூழ்த்திருக்கும் இவ் வேலைப் பள்ளம் ஒவ்வொரு குரங்கும் ஒருகை நீர் அள்ளிக் குடிக்கச் சாலும் பான்மையதோ? கள்ளவரக்கர் வாழும் இலங்கை நகரமானது இதுகாறும் அவ்வானர வீரர்களின் கண்ணுக்குப் புலனாகாமையின் அழியாம லிருந்தது. இப்போது அறிந்தமையின் இனி அந்நகரம் அழியாம லிருக்குமோ? வாலியின் தம்பியாகிய சுக்ரீவன் அவன் புத்திரனாகிய அங்கதன், மயிந்தன், துமிந்தன் முதலிய வானரப் படைத் தலைவர்கள் இம்பருலகோடு எவ்வுலகும் எடுக்கும் ஆற்றலுடையவராவர். மேலும் சீராமன் கையம்பேபோல் உதவுவர். அந்த வானர வீரர்களை எல்லாம் நோக்கின் இவ்வரக்கர் சேனை அவர்கட்கு உறையிடவும் போதா' என்று பகர்ந்தனன்.

சூளாமணி

சீராமபிரானுக்குத் துணையாய் அமைந்த படைத்தலைவர்களின் ஆற்றலைப் பிராட்டியாரிடம் பகர்ந்த அநுமான், இலக்குமியேயனைய பிராட்டியார் மிகவும் துன்பம் உறுகின்றனராகலின் இவரை இலங்கையினின்றும் எடுத்துச் செல்வதே கருமம் என்னும் எண்ணங் கொண்டவனாய்ப் பிராட்டியாரை நோக்கி,

> கேட்டியடி யேனுரை முனிந்தருளல் கேளார்
> வீட்டியிடு மேலவனை வேறல்வினை யன்றால்
> ஈட்டியினி யென்பல விராமனெதிர் நின்னைக்
> காட்டியடி தாழ்வனிது காண்டியிது காலம். (177)

பூங்கொடி போன்றவன்னையே, மிருதுவாகிய உரோமங்கள் நெருங்கிய என் தோளின்மேல் தாம் எழுந் தரு-

ஞவீராகில் தேவரீரை ஏந்திக்கொண்டு ஓர் இமைப்பி-
னில் இராகவன் எழுந்தருளி யிருக்கும் குன்றி னிடை
குதிப்பேன். நான் உம்மை எடுத்துச் செல்வதை
யறிந்து அரக்கர்கள் இடையே வந்து தடுப்பாரேல்
அவர்க ளெல்லாம் முறிந்து உதிரும் வண்ணம் நூறி
என் சினம் முடிப்பேன். நான் ஒருவராலும் சாவா-
தவன். பரிதபிக்கத் தக்க உமது நிலைமையைக் கண்டும்
நான் நெடியோன்பால் வெறுங் கையோடு செல்ல
மாட்டேன். இலங்கையோடும் உம்மைக் கொண்டு
போக வேண்டும் என்று சொன்னாலும் யான் இலங்-
கையை இடந்து எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு
செல்வேன். என்னைத் தடுப்பவர்களை அழித்துச் சீராம
லக்குவர் கால்களில் தாழ்வேன். அன்னையே இது
எனக்கு ஒரு பொருளன்று. அருந்ததி போல்வாளே,
அழகனும் சீராமன்பாற்சென்று, 'உன் அருமந்த தேவி,
வஞ்சகர் சிறையில் பெருந் துயரத்துடன் விடுதலை
யடையும் உபாயமில்லாதவளாய் இருக்கின்றாள்' என்று
பகரின் என் அடிமைத்தனம் என்னாகும்? 'யான் என்
தோள்களில் சண்டையிட்டுப் புண்படாமல் சீராமன்-
பாற் சென்று பகைவர்களுடைய வலத்தை எடுத்-
துரைப்பேனோ? என் உயிர்க்கு உறுதி செய்தவனைச்
சீதா பிராட்டியார் சிறையி லிருப்பதைக் கண்டு வந்-
தேனே ஒழிய அவரைக் கொண்டு வர வில்லை' என்று
பகர்வேனோ; இமைப் பொழுதில் நீ தங்கி யிருக்கும்
இவ் விலங்கையை அழித்து, இராக்கதக் காவலைக்
கொன்று, அரக்கர் குலத்தை வேர் அறுத்து விரை-
வாகச் சீராமன்பாற் செல்' என்று கட்டளை யிடினும்
அதை இன்றே முடிப்பல்.

வேறினி விளம்பவுள தன்றுவிதி யாலிப்
பேறுபெற வென்கணரு டந்தருளு பின்போய்
ஆறுதுய ரஞ்சொலிள வஞ்சியடி யன்றேள்
ஏறுகடி தென்றுதொழு தின்னடி பணிந்தான்.(178)

அரிய தன்றுநின் னுற்றலுக் கேற்றதே
தெரிய வெண்ணினே செய்வதுஞ் செய்தியே
உரிய தன்றென வோர்கின்ற துண்டமென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால். ()

தன் தோளில் ஏறும்படி சொல்லித் தன் திருவடி-களில் வீழ்ந்து வணங்கி, தாய்ப் பசுவைக் கண்ட கன்றே போல் களிக்கின்ற அஞ்சனையின் புதல்வனைப் பிராட்டியார் நோக்கி, 'நீ என்னை எடுத்துக்கொண்டு வேலையினிடைச் செல்லுங்கால் வெய்யவர் வந்து கோலி நின்னொடு வெஞ்சரங் கோத்தபோது ஆலம்போன்-றவர்களுடன் போர் செய்யவும் முடியாமல் என்னையும் காப்பாற்ற முடியாமல் மிகவும் மனக்கலக்கத்துடன் தனிமையாக இருப்பாய்.

அன்றி யும்பிறி துள்ளதொன் றுரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ. (180)

இதுவே யன்றி மேற்கொண்டு நடக்கும் போரில் கொற்றவனுகிய இராகவனது விற்றெழுின் வன்மையை அண்டர் யாவரும் வியந்து நோக்க, என் யாக்கையை விரும்பிய கண்டகனுகிய இராவணனுடைய கண்களைக் காக்கைகள் குத்தித் தின்பதைக் கண்டாலொழிய

நான் உயிருள்ளவள் ஆவேனே? வெற்றி வில்லைத் தாங்கிய இரண்டு வீரர்களும் செய்யும்போரில் (சூர்ப்பனகையின் மூக்கறுபட்டது போல்) நாணமில்லாத அரக்கியர்களது தாலி அறுபட்ட போதல்லாமல் எனக்குரிய நாணம் பெருமையை யுடையதாகுமா? பொன் மயமான இவ் விலங்கை, அரக்கர்களது எலும்புமலை யாகாமற்போயின் எனது இற்பிறப்பையும், ஒழுக்கத்தையும், இழுக்கில்லாத கற்பையும் நான் பிறர்க்கு எவ்வாறு காட்டுவேன்?

அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்வி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன். (181)

வேறு முண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாவிடை
ஆறு மைம்பொறி நின்னையு மாணெனக்
கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ. (182)

'இராவணன் என்னைத் தீண்டியிருப்பானாயின் இத்தனை நாள் உயிரோடிருப்பேனோ?' இமைப்பின் முன் மாய்ந்தே யிருப்பேன். அதனாலன்றோ அக் கீழ்மையனான இராவணன் நிலத்தோடுங் கீண்டி கொடுவந்தனன். மேலும் மனமில்லாத மாதரை அவ்வரக்கன் தீண்டினால், 'தலைவெடித்து எரிந்துபோவாய்' என்று நான்முகன் கொடுத்த சாபமும் அவனுக்குண்டு. அதனாலேயான் இது வரையில் உயிர்பிழைத்திருந்தேன். இராவணனுக்கு அத்தகைய சாபம் உள்ளதை விபீடணன் மகளாகிய திரிசடை என்னிடம் பகர்ந்ததை

எண்ணியும், அறம்வழுவாதென்னும் துணிவாலும், நாயகனது பராக்கிரமத்தை நோக்கியும் என் தூய்மையைக்காட்ட நினைத்தும் இதுகாறும் இங்கே உயிருடன் இருந்தேன்.

ஆண்டு நின்று மரக்க னகழ்ந்துகொண்
டீண்டு வைத்த திளவ லியற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி யையநின் மெய்யுணர் கண்களால். ()

ஆத லானது காரிய மன்றைய
வேத நாயகன் பாலினி மீண்டனை
போதல் காரிய மென்றனள் பூவையக்
கோதி லானு மினையன கூறினன். (184)

நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்று ணைப்பெருந் தேவி தவத்தொழில்
என்று சிந்தை களித்துவந் தேத்தினன்
நின்ற சங்கை யிடரொடு நீக்கினன். (185)

இருளு ஞால மிராவண னவிது
தெருளு நீயினிச் சிற்பக றங்குறின்
மருளு மன்னவற் கியான் சொலும் வாசகம்
அருளு வாயென் றடியி னிறைஞ்சினன். (186)

இன்னு மீண்டொரு திங்க ளிருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்
பின்னை யாவி பிடிக்கின்றி லேனந்த
மன்ன னாணை இதனை மனக்கொணீ. (187)

ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல்ல ளேனுந் தயாவெனும்
ஈரந் தானகத் தில்லளென் றுனுந்தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய். ()

எத்தும் வென்றி இளையவற் கீதொரு
வார்த்தை கூறுதி மன்னரு ளாலெனைக்
காத்தி ருந்தவற் கேகட னென்றிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய்.(189)

திங்க ளொன்றினென் செய்தவந் தீர்த்ததால்
இங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
சங்கை யாற்றங் கரையடி யேற்குந்தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்.()

சிறக்கு மாமியர் மூவர்க்குஞ் சீதையாண்
டிறக்கின் றுடொழு தாளெனு மின்னசொல்
அறத்தி னுயகன் பாலரு ளின்மையால்
மறக்கு மாயினு நீமற வேலையா. (191)

வில்லிறுத்து என்னைக் கடிமணம் புணர்ந்த ஞான்று, 'இந்தப் பிறவியில் இருமாதரைச் சிந்தையாலுந் தொடேன்' என்று காகுத்தன் புகன்ற மொழிகளைந் திருச்செவியில் சாற்றுவாய். 'இச் சிறைக்கோட்டத்தின் கண்ணே யிருந்து என் இன்னுயிர் மாயினும், மீண்டுவந்து பிறந்து தன் மேனியைத் தீண்டலாவதோர் வரத்தை வேண்டினுள், தொழுதாள்' என்று விளம்புவாய். சீராமன் மணிமுடிகவித்து அரியாசனத்தமர்ந்து அரசு புரிவதையும், யானையின் மீது ஆரோகணித்து வீதியில் உலாப்போதுவது முதலிய நற்

கோலங்களையும் கண்டு களிக்கும் விதியில்லாதயான் பலபடப் புகழ்ந்து பேசியென், 'என் ஊழ்வினையை நினைந்து வருந்துகின்றேன்' என்பதையும் பகர்வாய். காடு சென்றமையால் தன் வரவையே நோக்கி அக்கோசல நாட்டவரும் ஏனைய நாட்டவரும் அடைந்த தளர்வினையும், அன்னையர் மூவரும் எய்தும் நோயினையும், பரதனது கவற்சி யினையும் மாற்றுவதன் பொருட்டு அயோத்திக்கு மீண்டு செல்வதேயன்றி என்னை நோக்கி இங்கு எங்ஙனம் எய்துமோ? கவிக்குலத்தரசனே, என் தந்தை தாயர் முதலிய கிளைஞர் யாவர்க்கும் என் வந்தனை விளம்புதி, பின் சுந்தரத்தோளனுடைய இரகோத்தமனை எக்காலத்தும் தொடர்ந்து காத்து அயோத்திக்குச் சென்று அவ்வந்தமில் திரு நகர்க்கு அரசனுக்குவாய்,

இத்திற மினையன விளம்ப வின்னுநீர்
தத்துற லொழிந்திலீர் தைய லீரெனு
எத்திறத் தேதுவு மியைந்த இன்னுரை
ஒத்தனை தெரிவுற உணர்த்தி னனரோ. (192)

ஏ சர்வலோகமாதா, நீ இவ்விலங்கையிலே இறப்பது உண்மையாம். நீ இறந்தும் உம்மைப் பிரிந்ததனுய துயரத்தினுல் நலியும் காகுத்தன் உயிர்பிழைத்திருப்பானும், பின்னர் காட்டை விட்டகன்று அயோத்திக்குச் சென்று இரகோத்தமன் அரசர்க்குரிய கிரீடத்தையும் சூட்டிக்கொள்வானன்றே? கற்புக்கரசியாகிய உம்மைச் சிறையில் வைத்த கண்டகனுகிய தசக்கிரீவன் இன்னும் உயிருடன் வாழ்வானும், வில்வீரர்களாகிய இராம லக்குமணர் தம்முடைய ஆற்றலில் பொய்த்துப்

போவாராம். இதற்கு ஒப்பானது யாதுளது? நல்லோய், உன்னை வருத்தியவர்களைக் கொல்லாமல் நாங்கள் எல்லோரும் சீராமன்பாற் செல்ல எங்கள் தலைவனாகிய காகுத்தனும் அயோத்திக்குச் செல்ல வேண்டாவோ? கடத்தற் கரிய இன்னற் கடலிற் படிந்து கரை யேறும் வழி அறியாமல் வருந்தும் எங்கட்குப் பெருஞ் செல்வம் கொடுத்த காகுத்தற்கு உன்னைத் தேடிக் கொடாமல் நாங்கள் நீங்குவோ மாயின் எம்மினும் உயர்ந்தோர் யாவர்? தவம், யாகம் முதலிய நற்செய்கைகளைப் புரிந்து தண்டகாரணியத்தில் வாழும் முனிவரர்கட்குத் துன்புறுத்திய அரக்கர்களின் குடரைப் பேய்கள் தின்னும் வண்ணம் கொன்று குவித்தால் அல்லது நான் கோசல நாட்டுக்குச் செல்லேன் என்று அபயங் கொடுத்த பெருந்தகைக்கு உன்னைச் சிறையினின்றும் மீட்பது ஏலாத காரிய மாகுமா? பகைவர்களாகிய அரக்கர்களால் சிறை வைக்கப்பட உம்மை மீட்டுக்கொண்டு வந்தோம் என்னும் சிறப்பைப் பெறுமல், வெறுமனே மீள்வோ மாயின் நாட்டின்கண் வாழும் கற்றவர்களும், கல்லாதவர்களும் எங்களுரையை ஏற்றுக்கொள்வரோ? கற்புக் காசி யாகிய சீதை, கற்பினையே ஆபரணமாகக் கொண்டு, சிறை வைத்தோனாகிய அரக்கன் தன்னைத் தீண்டுவதற்கு முன் உயிர் துறந்தாள் என்பதைக் கேட்டு மனந்தேறி உன் கணவனாகிய சீராமன் அயோத்திக்கு மீள்வனேல் அவன் வீரம் யாவர்க்கும் விளங்க மாட்டாதா? தன் இன்னுயிர் அன்ன நாயகன் தன்னை வந்து மீட்காமையினால் சிறையிலேயே பிராட்டியார் உயிர் துறந்தார் என்னும் பழிச் சொல், சீராமன் அரக்கர் கூட்டத்துடன் ஏழுலகத்தையும் அம்பினாற் சுட்டாலும் தொலையுமோ?

பொன் போன்றவளே! உன் கணவனுகிய கோதண்ட-ராமன் உன்னை இராவணன் கவர்ந்து வருவதற்கு முன்னரே மூன்றுலகங்களிலும் உள்ள அரக்கர்களைக் கொல்லும் கோட்பா டுடையவனுக இருந்தனன். நீ இப்போது சிறையில் வைக்கப்பட்டு அங்கே துயர் உறுவதை உணர்ந்தும் அரக்கர்களைக் கொன்று குவி-யாமல் சாந்த குணத்தை மேற்கொண் டிருப்பானே? உனது நாயகனுகிய இரகோத்தமனுக்கு உதிக்கும் கோபம் கொடியவனுகிய இராவணனையும், அரக்கர்-களையும் நாசஞ் செய்த மாத்திரையானே தணியுமா? புவியையும், வானையும் அழிக்காமல் விடுமா? சீராமன் கை யம்பானது கடல்கள் ஏழனையும், பதினுன்கு லோகங்களையும் பிரளய காலத்து அக்கினியே போல் சுட் டெரிக்கமாட்டாதா? தேவர்கட்குப் பகையாகிய அசுரர்களைக் கொன்முன், தீச் செயல்களை எல்லாம் தடுத்தான், தக்கோராய முனிவர் முதலியவர்களைக் காத்தான், உலகத்தார் எல்லோரும் புண்ணியத் தொழில்களை எந்நாளும் புரியுமாறு கொடுத்தான் என்னும் பெரும் புகழைச் சீராமன் அடைவான் என்று எண்ணமாட்டாயோ? ஏ கற்புக்கரசியே! உன்னால் உலகின்கண் நல்லறம் நிலை பெறுமாயின் நீ சின்னுள் துன்பம் நீங்கப்பெறு தவளாய் அத் துன்பத்திலே தங்கியிருத்தலினுலே எல்லோரும் நல்ல நாளைக் காணுதல் நல்லறமே யன்றே? யாவரும் வெறுக்கத் தக்க கண்ட-கர்களுடைய இரத்தப் பிரவாகத்தில் பேய்க் குலங்கள் மூழ்கிக் குளிக்குந்தோறும் இராக்கதர்கட்கு பயந்து ஒளிக்கின்ற தேவர்கள் கண்டு களிப்பதை நீ காண-மாட்டாயோ? ஊழிக் காலத்தின் இறுதியில் இடிக்-கும் இடியைப் போலச் சக்கரவர்த்தித் திருமகனது

பாணமானது தைத்து இராக்கதர்களுடைய சரீரத்தைக் கிழிக்க அப்புண்ணிலிருந்து ஒழுகும் இரத்த சமுத்திரமானது பெருகி வந்து விழுவதினால் ஏழு சமுத்திரங்களும் ஒருசேரப் பேரொலி செய்வதை நீ காண்பாய். அரக்கியர்கள் தம் கணவர் போரில் இறந்துபட கர்ப்பம் நிறைந்த தமது வயிற்றைப் பிசைந்து கொண்டு நீர் சோரும் கண்களை யுடையவராய் அறுத்து எறிந்த மங்கல நாணாகிய தாலியினது பெரு மலை ஆற்றன் மிகுந்த வாலியாலும் தாவித் தாண்டுதற்கு அருமையாய்த் தயங்குவதை நீ காண்பாய். ஆகாயத்தினும் உயர்ந்தன வாகிய நீண்ட பேய்களும், எண்ணிறந்த பறவைக் கூட்டங்களும் அரக்கர்களுடைய இரத்த வெள்ளமாகிய கடலில் மூழ்கி அரக்கியரது கண்ணீர்ப் பெருக்காகிய நதியில் நீராடுவதைக் காண்பாய், முழவு முழங்க, யாழ்நரம்பின் ஒலியினும் இனியதாகிய பாட்டிசை பொருந்த அரம்பையர் நடனஞ்செய்யும் இலங்கை நகரின்கண் உள்ள நாடகசாலைகளில், பராக்கிரமமுள்ள ஆண் குரங்குகள் வரிசை வரிசையாக நடிப்பதைக் காண்பாய். அரக்கர்களது புண்களினின்றும் ஒழுகுகின்ற இரத்த வெள்ளமானது பிணமலைகளைப் புரட்டி இழுத்துக் கொண்டுபோய்ப் பெரிய கடலைத் தூர்ப்பதைக் காண்பாய்.

வினையுடை யரக்கரா மிருந்தை வெந்துகச்
சனகியென் றொருதழ னடுவட் டங்கலான்
அனகன்கை அம்பெனு மளவி லூதையால்
கனகநீ டிலங்கைநின் றுருகக் காண்டியால். (193)

தேவரீருடைய மாசற்ற திருமேனியைப் பார்த்த தசக்கிரீவனுடைய கண்களை அவன் தலையின்மேல் தாவிக்

காக்கைகள் கூரிய மூக்கினால் கவர்ந்து கொத்தித்தின்பதைத் தாமே பார்க்கப் போகின்றீர். ஆதலின் பல காரியங்களைச் சொல்வதில் என்ன பயன்? தாம் ஒரு திங்கள் இவ்விடத்தில் இடரின் வைகுதல் வேண்டுவதில்லை. நான் விரைவாகச் சென்று வீரனைக் காண்டல் தான் தாமதம். அவர் இலங்கைக்கு வருதற்குத் தவணையும் வேண்டுமோ? இறைவன் ஒரு கணமாயினும் புறப்படுவதற்குத் தாமதிப்பனோ? எம் மிறைவனாகிய இராகவற்கு உயிர் உண்டு என்னுஞ் சொல்தான் உண்டு நெடிய கானங்களில் அவன் திருமேனியைத் தீண்டிப் பொரிந்து வேகாதபூவிலை, தளிரிலை, காயிலை, கொடியிலை, மேகம் இடித்து மேலே வீழினும் ஐந்தலை நாகம் கடித்தாலும் அவருக்குத் தெரியவே தெரியாது. மத்தினாற் கடையப்பட்ட தயிரேபோல் உயிரும் ஐம்புலன்களும் சோர்வடைய நின்பிரிவாகிய வேதனையினால் பித்துக்கொண்டவரேபோல் அவர் வருந்துவது சொல்லுந் தன்மையதோ. இத்தகைய நிலைமையிலிருக்கும் இரகுநந்தனன் இங்கே உம்மைச் சிறையினின்றும் விடுவிக்க வாரான் என்று தாம் நினைப்பீராகில் நான் இதுகாறும் புகன்றவைகளை எல்லாம் உண்மையேயென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல இப்போதே காட்டுவேன். சீராமபிரானும் எங்களரசனாகிய சுக்கிரீவனும் உம்முடைய வரலாற்றைக்கேட்டு உவப்பதன் முன்னரேயே இவ் விலங்கையைச் சூழ்ந்திருக்கும் கடலைக் குரங்குகள் வந்து தூர்த்து ஆர்ப்பரிப்பதைத் தாம் கேட்பீர். எண்ணிறந்த வானரப்படைகள் இந்நகரத்திற்கு நண்ணும்போது அவைகளின் நடுவே கருடன் திருத்தோளில் ஆரோகணித்து வரும் நாராயண மூர்த்தியேபோல் அடியேனுடைய

தோளின்மேல் சீராமன் இவர்ந்து வருவதைக்காண்பீர். உதயகிரியிற்றோன்றும் இளஞ் சூரியனேபோல் அங்கதன் தோள்மேல் இளையபெருமாள் எழுந்தருளுவதையும் காண்பீர்,

குராவருங் குழலியிக் குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கி லானெனின்
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்
கிராவண னவனிவ னிராம னென்றனன். (194)

இவ்வாறு ஆஞ்சனேயர் தேறுதல் மொழிகளைக் கூற அவைகளைக் கேட்ட பிராட்டியார் அளவிலா மகிழ்ச்சியடைந்து, 'ஏ கவிக்குலத்தரசே, நீ சீராமன் பால்விரைந்துசெல். யாதொரு தீங்கும் உன்னை அணுக மாட்டாது. யான் விசேஷமாக உனக்கு என்ன சொல்லப் போகிறேன். யான் சில அடையாளங்கள் புகல்கின்றேன், அவைகளை உங்கள் இறைவனுக்கு இயம்புவாயாக' என்று சொல்லுவாராயினர்.

'யானும் என்னுயிரன்ன நாயகரும் சித்திரகூட பர்வதத்தில் தனித்திருக்குங் காலையில் ஒரு மாயக்காகம் வந்து என் தேகத்தைத் தன் கூர்மையான நகத்தினுலே கிழித்ததுகண்டு இறைவன் ஒரு சொற்பமாகிய புல்லை ஏவ அதற்குப் பயந்து அக்காகமானது பிரமன் உருத்திரன் முதலிய தேவர்களிடம் சரண்புக அவர் அவ்வம்பைத் தடுக்கும் ஆற்றல் இல்லாதவராய்ச் சீராமனிடத்திலேயே சரண்புகும்படி சொல்ல அவ்வாறே அக் காகம் வந்து தன்னை அடைக்கலம்புக அதற்குத் திருவருள் பாலித்துக் காப்பாற்றியதை நீ விளம்பு. இதுவேயன்றி, யான் அயோத்தியில் வளர்த்து வந்த என் கிளிக்கு 'என்ன பெயர் கொடுப்பது' என்று கேட்ட-

போது இறைவன் 'கைகயன்மாது என்னும் பெயரிடு' என்று புகன்றதையும் செப்பு. என்மாட்டுள்ள ஓர் அடையாளம் தருகின்றேன். அதையும் அவரிடம் சேர்த்துவிடு' என்று தான் பொதிந்து வைத்திருந்த சூளாமணியை,

வாங்கி னுடன் மலர்க்கையி னன்னது முன்னு
ஏங்கி னுளவ் வநுமனு மென்கொலி தென்னு
வீங்கி னுன்வியந் தானுல கேழும்வி மூங்கித்
தூங்கு காரிருண் முற்றுமி ரிந்தது சுற்றும். (195)

கூந்தன் மென்மழைக் கொண்முகின் மேலெழு கோளி
வேந்த னன்னது மெல்லிய றன்னெழின் மேனி [ன்
சேந்த தந்தமில் சேவகன் சேவடி யென்னக்
காந்து கின்றது காட்டினள் மாருதி கண்டான். (196)

சூடை யின்மணி கண்மணி யொப்பது தொன்னுள்
ஆடை யின்கணி ருந்தது பேரடை யாளம்
நாடி வந்தென தின்னுயிர் நல்கிய நம்பா
கோடி என்றுகொ டுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்.

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினின் முற்றப்
பழுது றுவகை பந்தனை செய்தனன் வந்தித்
தழுது மும்மைவ லங்கொடி றைஞ்சின னன்போ
டெழுது பாவையு மேத்தின ளேகின னிப்பால். (198)

பொழி லிறுக்கை

நெறிக்கொடு வடக்குற நினைப்பினி னிமிர்ந்தான்
பொறிக்குல மலர்ப்பொழி லிடைக்கடிது போவான்
சிறுத்தொழின் முடித்தகற றீதென றெரிந்தான்
மறித்துமோர் செயற்குரிய காரிய மதித்தான். (199)

ஈனர்களாகிய அரக்கர்களையெல்லாம் கொலை செய்து, இலங்கையை எடுத்துக் கடலில் வீசி, மான்போன்ற நோக்கத்தை யுடையளாய சீதாபிராட்டியை மநு குல நாயகனாகிய சீராமன் திருவடியில் சேர்க்கவில்லை என்னின் நான் எப் பரிசினால் சீராமனுக்கு அடியவனாவேன். வஞ்சகனாகிய அரக்கனை என்னுடைய வாலினால் அவன் பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் இறுகப் பிணித்துச் சிறையிடை வைத்தேனில்லை; அவனைப் போரில் வெல்லவுமில்லை என்றால் ஒருவருக்கொருவர் தஞ்சம் என்று புகறல் எவ்வாறு பொருந்தும். என்கண்முன்னே காணும் அரக்கர் கூட்டங்களைக் கலக்கி, இராவணனுக்கு முன்னே அவன் பத்தினியாகிய மண்டோதரி என்பவளைத் தலைமயிரைப் பிடித்திழுத்துச் சிறையில் வைத்தால் எனக்குக் குறையுண்டாகுமோ? இனி யான் வேறே எண்ணக்கடவது யாது ளது? அரக்கர்களைத் திசைகளில் ஓடும்படி வருத்தி என் அடிமைத் திறத்தைக் காட்டுந்திறமே செய்தற்குரிய காரியமாகும். அரக்கர்களைப் போரில் மூளச் செய்யும் விதம் யாது?' என்று எண்ணமிடும் அநுமான்,

இப்பொழி லினைக்கடி திறக்குவ னிறுத்தால்
அப்பெரிய பூசல்செவி சார்தலு மரக்கர்
வெப்புற சினத்தரெதிர் மேல்வருவர் வந்தால்
துப்புற முருக்கியுயி ருண்பனிது சூதால். (200)

என்றுநினை யாவிரவி சந்திர னியங்கும்
குன்றமிரு தோளனைய தன்னுருவு கொண்டான்
அன்றுல கெயிற்றடைகொ ளேனமேன லானன்
துன்றுகடி காவினை யடிக்கொடு துகைத்தான். (201)

அநுமான் அந்த வனத்தைத் தம்முடைய பாதங்களால் துகைத்த அளவில் அதி லிருந்த அநேக மரங்கள் முறிந்தும், பிளந்தும், நெரிந்தும், மடிந்தும், பொரிந்தும், இடிந்தும், சிதைந்தும், எரிந்தும், கரிந்தும் போயின; சில மரங்கள் வேரோடே சாய்ந்தன. சில மரங்கள் சமூலமும் வெந்து விழுந்தன. சில மரங்கள் மேக மண்டலத்தை மோதி விழுந்தன. சில மரங்கள் காற்றில் அடி பட்டுக் கடலிலே போய் விழுந்தன. சில மரங்கள் தேவர் உலகில் போய் விழுந்தன. சில மரங்கள் அஷ்ட கஜங்களுக்கெதிரே அவைகள் உண்கின்ற உணவாகப் போய் விழுந்தன. சில மரங்கள் ஆகாய மார்க்கமாய்ப் போய்த் தேவர்களுடைய கற்பகச் சோலையை தகர்த்தன. அநேக மரங்கள் ஒடிந்து போய் விழுகின்றதினால் கடலில் அலைகள் மிகவும் பொங்கிப் புரண்டன. அநேகமரங்கள் இலங்கையிலே விழுகின்றதினால் அங்குள்ள அரக்கர்களது மாடங்கள் இடிந்து உதிர்ந்தன. பற்பல மரங்கள் தங்கட்குச் சமீபத்தில் வந்து விழுகின்றமையால் விஞ்சய லோகத்திலும், யக்ஷ லோகத்திலும், தேவ லோகத்திலு முள்ள மாதர்கள் அம் மரங்களி லுள்ள பூக்களைப் பறிப்பாராயினர். பொன்னாலும், வலிய இரத்தினங்களாலும் இயன்ற பருத்த மரங்கள் பல திசைகளிலும் செல்வனவாயின. அவை மின்னல் திரிவதையும், சூரியன் பிரகாசத்தையும் ஒத்து விளங்கின. மேற் கூறிய மரங்கள் ஒன்றோடொன்று தாக்குண்டு உடைந்து உதிர்தல் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் விண் மீன்கள் பூமியில் வீழ்வதை ஒத்திருந்தது. அநுமான் மரக் கிளைகளை ஒடித்துக் கடலில் வீச அக் கிளைகளி லுள்ள பறவைகளையும், வண்டுகளையும், மலர்களையும், அரும்புகளையும், தளிர்களையும்,

கனிகளேயும் கடலில் உலாவும் மீன்கள் விழுங்கிக் கரந்திருக்கும் காலேயில் மேலும் பல மரங்கள் மேலே வந்து கடலில் வீழ்தலால் அம் மீன்கள் நெரிந்து துடித்தன. பல விதமான மலர்களால் நிறைக்கப் பெற்றுப் புலால் நாற்றமில்லாமல் எட்டுத் திக்குகளிலும் சுகந்தத்தை வீசுதலால் கடலானது தேவர்கள் தம்முடைய தேவிமாருடன் நீராடும் வாவியைப் போல விளங்கியது. அப் பொழிலில் உள்ள இரத்தின மேடைகளே இடித்தும், மரங்களே ஒடித்தும் தொடர்ச்சியாகக் கடலில் வீசியதினல் அக் கடல் முழுதுந் தூர்ந்து, முன் அநுமான் கடத்தற் கரிய ஆழ முடையதாய்க் கிடந்த கடல் அவர் இரண்டு கால்களால் சுலபமாய் நடந்து செல்லலாம் என்னும் நிலைமையை யுடைய தாயிற்று. பற்பல கிளேகள் தழைத் திருக்கின்ற தேக்க மரங்கள் ஆகாயத்தினின்றும் கடலில் வீழ்வது மேகங்கள் கடலில் நீர் உண்ண இறங்குவதை ஒத்திருந்தது. அநுமானுடைய பாதம் படுதலால் சந்தன மரங்கள், பூ மரங்களும் பிளந்து, துணிந்து, எரிந்து, கரிந்தன. மல்லிகை முதலாகிய கொடி வகைகளும், செடிகளும் தூள் தூளாயின. மயில்கள், கிளிகள், வண்டுகள் முதலியவைகளும் நெருங்கி நசுங்கி மடிந்தன. மரம் வீழ்ந்ததனல் இலங்கையைச் சூழ்ந் திருந்த பொன் மதில்கள் இடிந்து நெருப்பெழுந்தன. ஆனல் இலங்கையி லிருந்தவர்கள் எல்லாம் பயந் தோடினர்கள். அக் காலேயில்,

தொண்டையங் கனிவாய்ச் சீதை
துயக்கின லென்னேச் சுட்டாய்,
விண்டவா னவர்தம் முன்னே
விரிபொழி லிறுத்து வீசக்

கண்டனை நின்று மென்று
காணுமே லரக்கன் காய்தல்
உண்டென வெருவி னன்போ
லொளித்தன னுடுவின் கோமான். (202)

பொய்ம்முறை யரக்கர் காக்கும்
புள்ளுறை புதுமென் சோலை
விம்முறு முள்ளத் தன்ன
மிருக்குமவ் விருக்க மொன்றும்
மும்முறை யுலக மெல்லா
முற்றுற முடிவ தான
அம்முறை யையன் வைகு
மாலென நின்ற தம்மா. (203)

உறுசுடர்ச் சூடைக் காசவ் வுயிரினை
உயிரொப் பானுக்
கறிகுறி யாக விட்டா ளாதலான்
வறிய ளங்கோ
செறிகுழற் சீதைக் கென்றோர்
சிகாமணி தெரிந்து வாங்கி
எறிகட லீவ தென்ன எழுந்தன
னிரவி யென்பான். (204)

தாழிரும் பொழில்க ளெல்லாந்
துடைத்தொரு தமிய னின்றான்
னேழிரே டேழு நாடு
மளந்தவ னெனலு மானான்
ஆழியி னடுவ ணின்ற
அருவரைக் கரசு மொத்தான்
ஊழியி னிறுதிக் காலத்
துருத்திர மூர்த்தி யொத்தான். (205)

இன்னன நிகழும் வேலை
அரக்கிய ரெழுந்து பொங்கிப்
பொன்மலை யென்ன நின்ற
புனிதனைப் புகன்று நோக்கி
அன்னையீ தென்னை மேனி
யார்கொலென் றச்ச முற்றார்
நன்னுத றன்னை நோக்கி
அறிதியோ நங்கை யென்றார். (206)

தீயவர் தீய செய்த
தீயவர் தெரியி னல்லால்
தூயவர் துணித லுண்டே
நும்முடைச் சூழ லெல்லாம்
ஆயமா னெய்த வம்மா
னிளையவ னரக்கர் செய்த
மாயமென் றுரைக்க வேயு
மெய்யென மையல் கொண்டேன். ()

இவ்வாறு சீதாபிராட்டியார் கூறிய மறுமொழிகளைக் கேட்ட அரக்கிமார்கள் வயிற்றிலடித்துக்கொண்டு, பேரச்சத்தால் நிலைகுலைந்து, பூமியும் வனமும், மலையும் கடலும் நிலைகுலையும்படி அவ்வனத்தை விட்டு ஓடத் தலைப்பட்டார்கள். இராவணனுடைய கட்டளையின்படி பிரமதேவன் நிருமித்த கண்ணுக் கடங்காததும், ஆகாயம் வரையில் நீண்டதும், அநேகந் தூண்களை யுடையதுமான அழகிய ஓமமண்டபம் ஒன்று அப்பொழிலின்கண் இருந்தது. அம்மண்டபத்தை அநுமான் சர்வ சுலபமாக எடுத்து இலங்கா பட்டணத்தின் மீது எறிந்தனன். அது நகரின்மீது விழ அநேக மாட கூடங்கள் இடிந்து நகர்ந்து பொடிப் பொடியாய்ப்

போக, அவற்றிலிருந்து அனற்பொறி எழுந்து அருகே யிருந்த பல வஸ்துக்களையுஞ் சுட்டெரித்தது. இந்தச் சம்பவத்தை எல்லாம் கண்ட அச்சோலையி லுள்ள காவலாளர்கள் இராவணனிடத்தில் ஓடோடியும்சென்று 'ஓர் குரங்குவந்து நம்முடைய சோலையையும் இலங்காபட்டணத்தையும் அழித்து விட்டது' என்று சொல்லிப் புலம்பினார்கள். அதனைச் செவியிலேற்ற இராவணன்,

ஆட்கத் தருவின் சோலை
பொடிபடுத் தரக்கர் காக்கும்
தேடரு மோமம் வாங்கி
இலங்கையைச் சிதைத்த தம்மா
கோடர மொன்றே நன்றி
திராக்கதர் கொற்றஞ் சொற்றல்
மூடரு மொழியா ரென்னா
மன்னனு முறுவல் செய்தான். (208)

இராவணன் புன்னகை செய்ததைக்கண்ட காவலர்கள், 'ஐய, அக்குரங்கின் வலியை என்னென்று சொல்வோம். அக்குரங்கைப் பூமிதான் எப்படிச் சுமக்கின்றதோ அறியோம், திரிமூர்த்திகளில் ஒருவன் என்று உவமை சொல்வது இழிவாகும். அக்குரங்கு இன்னும் அங்கே இருக்கின்றது. வந்து பார்க்கவேண்டும்' என்று கூறினார்கள். அப்போது,

மண்டலங் கிழிந்த வாயின்
மறிகடன் மோழை மண்ட
எண்டிசை சுமந்த மாவுந்
தேவரு மிரியல் போகத்

தொண்டைவா யரக்கி மார்கள்
சூல்வயி றுடைந்து சோர
அண்டமும் பிளந்து விண்ட
தாமென வநும னார்த்தான். (209)

கிங்கரர் வதை

அநுமன் ஆர்த்த ஓசையானது இடிமுழக்கத்தையும், சமுத்திர கோஷத்தையும், சீராமன் சிவபெருமான் வில்லை இறுத்த ஞான்று எழுந்த ஓசையினையும் போன்று இராவணனது இரண்டு காதுகளிலும் நுழைந்தது. அப்போது அக்கொடியோனாகிய தசக்கிரீவன், பொறாமை பொங்கிய மனத்தினையுடையவனாய் எண்ணிறந்த பெருவலி அரக்கர்களை ஏவி, 'நமது பொழிலை அழித்த அக்குரங்கைக் கொல்லாமல் பிடித்துக் கொண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டனன். அக்கணமே அக்கிங்கரர்கள் சூலம், வாள், முசலம் முதலிய ஆயுதங்களைப் பிடித்தகையையும், ஆலகாலவிடம் போன்ற மெய்யையு முடையராய் ஊழிக்காலத்துக் கடல்போல் எழுந்து சென்று பொழிலைச் சுற்றிலும் வளைந்துகொண்டனர். அநுமானும் இவ் விதமாகிய போர் நேரிடவேண்டும் என்று விருப்பங்கொண்டவனாகையால், அவ் வரக்கர்களைக் கண்டு மிகவும் களிப்படைந்தனன். அக்கிங்கரர்கள் பகலும் இருளும்படி நெருங்கிக் காற்றிலும் விசைகொண்டு முடுகி வந்து, 'இவன்தான் இவன்தான் நம் சோலையை அழித்தவன்' என்றுசொல்லி விடம்போற் சுடர்விடுகின்ற கொடிய படைக்கலங்களை அநுமான்மீது எறிந்தனர்.

800-३१९

மழைகளு மறிகட லும்போய்
மதமற முரசம றைந்தார்
முழைகளி னிதழ்க டிறந்தார்
முதுபுகை கதுவ முனிந்தார்
பிழையில படவா வின்றேள்
பிடரிற வடியிடு கின்றூர்
கழைதொடர் வனமெரி யுண்டா
லெனவெறி படைஞர் கலந்தார். (210)

அறவனு மதனை யறிந்தா னருகினி
னழகின மைந்தார்
இறவினி னுதவு நெடுந்தா
ருயர்மர மொருகை யியைந்தான்
உறவரு துணையென வன்றே
உதவிய அதனையு வந்தான்
நிறைகடல் கடைய நெடுந்தாண்
மலையென நடுவணி மிர்ந்தான். (211)

திருப்பாற்கடலைக் கடைந்த மந்தரகிரியே போல் அரக்கர் நடுவே நின்ற அநுமான் அருகேயுள்ள மரத்தை ஒரு கையில் எடுத்து அரக்கர்கள் பலரை இடியும் பின் வாங்கும்படி அறைந்து கொன்றனன். கண், கால், தலை, பல் முதலிய அவயவங்களை இழந்து சின்ன பின்னப்பட்டுத் தரையின் மீது விழுந்து பலர் இறந்தனர். அநுமான் அரக்கர்களை வாரி வீசுவதால் சிலர் அருகேயுள்ள மலையில் அறைபட்டும் சிலர் கடலில் வீழ்ந்தும் மாண்டனர். வாலினுற் சுற்றி வீசப்பட்ட அரக்கர்கள் சிலர் பம்பரம்போற் சுழன்று மாய்ந்தனர். இவ்விதமாக மாருதி தாள்களால் பல-ரையும், கைகளாற் பலரையும், விழியாற் பலரையும்,

அவ்வவர் வாள்களாற் பலரையும் கொன்றதனால் நகர முழுவதும், மூளையும் நிணமும், இரத்தமும் பரவி அவ்விலங்கை நகரமானது அநுமானால் அலைப்புண்டு வாய்தோறும் இரத்தத்தை உமிழ்வதேபோல் காணப்பட்டது.

கருது காலினுங் கையினும்
வாலினுங் கட்டிச்
சுருதி யேயன்ன மாருதி
மரத்திடை துரப்பான்
நிருத ரெந்திரத் திடுகரும்
பாமென நெரிவார்
குருதி சாறெனப் பாய்வது
குரைகடற் கூனில். (212)

மாருதி அரக்கர்களை எடுத்து எறிதலினாலே அவர்கள் வந்து விழ மாளிகை பல இடிந்தன. மண்டபம் பல குலைந்தன, யானைகள் பல மரித்தன, கோபுரங்கள் பல தகர்ந்தன, பல பெண்யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் அழிந்தன. தங்கள் வீட்டைத் தங்களுடம்பாலேயே சிலர் தகர்த்தார்கள், தங்கள் மாதரைத் தங்கள் காலால் சிலர் வதைத்தார்கள், தங்கள் பிள்ளைகளைத் தங்கள் ஆயுதத்தாற் சிலர் கொன்றார்கள், இவ்விதம் அநுமான் அரக்கர்களை வீசி எறிந்துகொன்றமையால் இலங்கையில் ஓரிடம் தப்பாமல் எங்கணும் கையும், காலும், தலையுஞ் சிதறிக் கிடந்தன. இவ்வாறு அநுமானுடன் பொருது இராவணன் ஏவிய அரக்கர் பலர் மடிந்தனர். எஞ்சிய சிலர் பிணக் குவியல்களைத் தாண்டி, இராவணனிடம் ஓடோடியும் சென்று தங்கட்கு உளதாய வருத்தத்தினாலும், நடுக்கத்தினாலும்

நடந்தவற்றை வாயினுற் கூற மாட்டாதவர்களாய்ப் போர்க்களத்தில் நடந்தவைகளைச் சைகையினுல் தெரிவித்து நடுக்கத்துடன் நின்றனர். இராவணன் இவர்கள் கூற வந்ததை உணர்ந்துகொண்டு, 'இறந்து போனார்களோ? என் கட்டளையை இகழ்ந்து போர் செய்தலை விடுத்து ஓடிப் போனார்களோ நடந்தது யாது புகலுங்கள்?' என்றனன். வந்தவர்கள்,

சலந்தலைக் கொண்டன ராய தன்மையார்
அலந்திலர் செருக்களத் தஞ்சி னாலர்
புலந்தெரி, பொய்க்கரி போன புன்கணார்
குலங்களி னவிந்தனர் குரங்கி னாலென்றார். (213)

ஒரு குரங்கு அரக்கர்களைக் கொன்று குவித்தது என்பதைக் கேட்டு நாண மடைந்த இராவணன் கடுங் கோபங்கொண்டவ னானான். பின்னர், அரக்கர்களை நோக்கி, 'அரக்கரைக் கொன்றுவிட்டது ஒரு குரங்கு என்னும் இக் கொடுஞ் சொல்லைக் கேட்டு வந்தீர்களா? அல்லது கண்டு வந்தீர்களா? சொல்லுங்கள்' என்று வினவினன் இராவணன், அதற்கு அவர்கள் 'நாங்கள் கண்ணினாலே கண்டு வந்தோம்' என்றனர். அப்போது

சம்புமாலி வதை

கூம்பின கைய னின்ற
குன்றெனக் குவவுத் திண்டோள்
பாம்பிவர் தறுகட் சம்பு
மாலியென் பவனைப் பாரா
வாம்பரித் தானை யோடு
வளைத்ததன் மறனை மாற்றித்
தாம்பினிற் பற்றித் தந்தென்
மனச்சினந் தணித்தி யென்றான். (214)

ஆயவன் வணங்கி வீர
வளக்கரு மாக்கர் முன்னர்
நீயிது முடித்தி யென்று
நேர்ந்தனை நினைவி னெண்ணி
ஏயினை என்னப் பெற்று
லென்னின்யா ருயர்ந்தா ரென்னுப்
போயின னிலங்கை வேந்தன்
போர்ச்சினம் போவ தொப்பான். (215)

இராவணன் இட்ட கட்டளையின்படி அநுமான் மீது போர் செய்வான் எழுந்த சம்புமாலி தன்னுடைய சேனையோடும் தசமுகன் தனக்குத் துணையாய்ப் போகக் கட்டளை இட்ட சேனையோடும் தன் தாதை கொடுத்த சேனையோடும், தன் துணைவர் அனுப்பிய சேனு சமுத்திரத்தோடும் அநுமா னிருக்கும் பொழிலை நோக்கிச் சென்றனன். அச் சேனு சமுத்திரத்தில் இடி போல் முழங்கும் இருபதினுயிரம் யானைகளும், முத்து மாலை கட்டிய பதினுயிரந் தேர்களும், நாற்பதினுயிரம் குதிரைகளும், தோமரம், வேல், வாள் முதலிய ஆயுதங்க ளேந்திய எண்பதினுயிரம் பதாதிகளும் அடங்கியிருந்தன. சம்புமாலியானவன் பொன்னெடுந்தேர்மே லேறிக்கொண்டு புறப்பட்டனன். அரக்கர் வந்திலரே என்று எண்ணி அவர் வரும் வழியை நோக்கிக்கொண்டிருந்த அநுமான் அரக்கர் வருவதைக் கண்டு மகிழ்ந்து எட்டுத் திசைகளிலும் இருக்கும் யானைகள் செருக்கு நீங்க, நமனும் மனம் நடுங்க, விண் மீன்க ளெல்லாம் பூவென உதிர, பூமியும், மலையும் பிளவுபடத் தன் தோள்களைக் கொட்டினுன். அரக்கர் களும் கடல் போல முழங்கிச் செல்லும் வழியெல்லாம்

பிணக் குன்றமும், இரத்த வெள்ளமுமாக இருத்தலின் நேரான வழியின்றிப் பிணங்களை இடறிக்கொண்டே வர, அவர்களை அணி வகுத்து அநுமானைச் சூழும்படி யேவித் தனது தேரைச் செலுத்திக்கொண்டு சம்புமாலியும் வந்தனன்.

ஐயனு மமைந்து நின்று
    ழியா னளவி னமம்.
நெய்சுடர் விளக்கிற் றோன்று
    நெற்றியே நெற்றி யாக
மொய்ம்மயிர்ச் சேனை பொங்க
    முரணயி லுகிர்வாண் மொய்த்த
கைகளே கைக ளாகக்
    கடைக்கூழை திருவா லாக. (216)

இவ்வாறு நிற்கும் அநுமாரைக் கண்டு அரக்கர்கள் கொடுஞ் சினங் கொண்டவராய் அவர் மீது பல விதமான ஆயுதங்களை வீசினார்கள். அநுமார் அப்படைக்கலங்களை யெல்லாம் கையாற்பிசைந்து எறிந்துவிட்டு அங்கே கிடந்ததோர் இருப்புத் தண்டத்தைக் கையி லெடுத்துக்கொண்டு எல்லாரையும் போர்க்களத்தில் வீழ்ந்து அவியும்படி புடைத்தனர். கோடு, கை, கால் முதலியவற்றை இழந்து யானைகள் மாண்டன. சுவர், பார், நுகம், சக்கரம், கொடிஞ்சி, குதிரை முதலியன நெரிபட்டுத் தேர்கள் குலைந்தன, கால் முறிந்துங் கழுத்தொடிந்துங் குதிரைகள் பல கீழே வீழ்ந்து இறந்தன. கரியைக் கரியாலும், பரியைப் பரியாலும், தேரைத் தேராலும், அரக்கரை அரக்கராலும் தாக்கிக் கொன்று துகைத்துத் தள்ளினார். யுகாந்த காலத்து இடி இடித்து வீழ்ந்தாற் போல

அநுமாரானவர் உயர எழும்பிக் குதிரைகளின் முது-கிலே குதிப்பார். குதிரைகளின் முதுகி லிருந்து நிருதர்க ளுடைய மார்பிலே குதிப்பார். அரக்கர்க-ளுடைய மார்பி லிருந்து இரதங்களின் மேற் குதிப்பர். இரதங்களின் மேலிருந்து மத யானைகளின் மேற் குதிப்பர். இரு வினைகளையும் கடந்த ஞானியரது அறிவைப் போல ஒரு தன்மைப்பட்டிருப்பர். காற்றாடியைப் போலவும் சுழன்று சுழன்று திரிவர். திருமாலின் திருவடிக்கு அன்பு பூண்டோர் அவனு-டைய குணாதிசயங்களைப் பெறுவர், என்னும் வேத வாக்கியத்தை அனுபவத்தில் காட்டுபவர் போல அநு-மார் பூமியிலும், ஆகாயத்திலும், எட்டுத் திக்கு-களிலும் தம்முடன் எதிர்த்து வலிமையுடன் போர் செய்யும் அரக்கர் கண்க ளிடத்தும், மனத்திலும் தனித் தனி கலந்து விளங்கினர்.

அநுமார், தேர்களை அவற்றிற் கட்டிய கொடி, குடை முதலாகிய பலவகை உறுப்புக்களுடனும், பூட்-டிய புரவிகளுடனும் ஒரு கையினலே எடுத்து அடித்து, நிலத்திலிட்டு அரைத்தார், மத யானைகளை மற்றொரு கையினலேயே பிடித்து அவைகளின் உயிர் சோரும்படி பிழிந்தார். கறுத்த நிறத்தையும், வக்கிர தந்தங்களையும் எரி யெழும்படி விழிக்கின்ற கண்களை-யும், கைகளிற்சூலத்தையும், பாசத்தையுமுடையவர்க-ளாய் இயமனைப்போல வந்த அரக்கர்களை எல்லாம் உருத்திர மூர்த்தியேபோலத் தனித்தனி உதைத்து உதைத்துக் கொன்றார். போர்க்களத்தில் சக்கரங்கள், தோமரங்கள், உலக்கைகள், தண்டுகள், வேல்கள், வாள்-கள், குடைகள், கொடிகள், ஆலவட்டங்கள், சாமரங்-

கள், தேர்கள், பரிகள், யானைகள், பதாதிகள் முதலியன சின்னப்பட்டு, உதிர வெள்ளத்தினால் கடலுக்கு உருட்டிக்கொண்டு போகப்பட்டன. அநுமான் கையிலிருக்கின்ற இருப்புலக்கையினால் அடிப்பட்டு அரக்கர்களுடைய தலைகள் எழும்பி அண்டத்தை எட்டி, மலைகளைமுட்டித் திசைகளைக் கிட்டி ஒன்றோடொன்று ஒட்டித் தட்டுமுட்டாடின. இவ்வாறு தன்னுடன் வந்த யானைக் கூட்டங்களெல்லாம் ஒரு கோபமுள்ள சிங்கத்தினால் கொல்லப்பட்டு இறக்கும்படி தனித்து நிற்கின்ற மத யானையைப் போன்ற சம்புமாலி என்பான் தன்னைச் சூழ்ந்து வந்த சேனைகள் எல்லாம் அநுமானாலே கொல்லப்பட்டு மாண்டு போகத் தான்மாத்திரம் தனியே நின்று, கண்கள் நெருப்பைச்சொரிய அதிக சீற்றங் கொண்டவனாய்த் தன்னுடைய இரதத்தைப் பிண மலைகளின் நடுவே அதிக சிரமத்துடன் நடாத்திக்கொண்டு அநுமானுக்கெதிரில் வந்தனன். அதனைக் கண்ட அநுமான்,

ஏதி யொன்றால் தேரு மன்றா
லெளியோ ருயிர்கோடல்
நீதி யன்றா லுடன்வந் தாரைக்
காக்குநி லையில்லாய்
சாதி யன்றேற் பிறிதென் செய்தி
யவர்பின் தனிநின்றாய்
போதி யென்றான் பூத்த மரம்போற்
புண்ணாற் பொலிகின்றான். (217)

அநுமான் கூறியவைகளைக் கேட்ட சம்புமாலி, 'உன் கருணை நன்று நன்று' என நகைத்துக் கோபங் கொண்டவனாய்த் தன் வில்லை வளைத்துப் பாணங்-

களைப் பொழிய ஆரம்பித்தான். ஐயன் அந்தச் சரங்களை எல்லாம் காற்றுற் சிதறும் மழை போலச் சிதறிப் போம்படி தன் கையிலுள்ள எழுவினுல் விலக்கியடித்தான். அதைக்கண்ட சம்புமாலியும் அவ்வெழுவை ஓர் அம்பால் துணித்து எறிந்து விட்டான்.

சலித்தா னையன் கையா லெய்யுஞ்
சரத்தை யுகச்சாடி
ஒலித்தா ரமரர் கண்டா
ரார்ப்பத் தேரி னுட்புக்குக்
கலித்தான் சிலையைக் கையால்
வாங்கிக் கழுத்தி னிடையிட்டு
வலித்தான் பகுவாய் மடித்த
மலைபோற் றலைமண் ணிடைவீழ. (218)

சம்புமாலி அநுமானுல் கொல்லப்பட்டதைக்கண்ட அப்பொழிற் காவலர்கள் இராவணனிடம் ஓடினுர்கள்.

புக்கா ரமரர் பொலந்தா
ராக்கன் பொருவில் பெருங்கோயில்
விக்கா நின்றுர் விளம்ப
லாற்றுர் வெருவி விம்முவார்
நக்கா னரக்க னடுங்க
லென்று னைய நமரெல்லாம்
உக்கார் சம்பு மாலி
யுலந்தா னென்றே குரங்கென்றுர். ()

என்னு மளவி னெரிந்து
வீங்கி யெழுந்த வெகுளியான்
உன்ன உன்ன உதிரக்
குமிழி விழியூ டுமிழ்கின்றுன்.

சொன்ன குரங்கை யானே
பிடிப்பன் கடிது தொடர்ந்தென்றான்
அன்ன துணர்ந்த சேனைத்
தலைவ ரைவ ரறிவித்தார். (220)

பஞ்ச சேனாபதிகள் வதை

இலங்கு வெஞ்சினத் தஞ்சிறை
யெறும்வலிக் கலுழன்
உலங்கின் மேலுருத் தென்னநீ
குரங்கின்மே லுருக்கின்
அலங்கன் மாலைநின் புயநினைந்
தல்லுநன் பகலும்
குலுங்கும் வன்றுயர் நீங்குமால்
வெள்ளியங் குன்றம். (221)

அன்றி யும்முனக் காளின்மை தோன்றுமா லரச
வென்றி யில்லவர் மெல்லியோர் தமைச்செல விட்டாய்
நன்றி நீயின்று காண்டியே லெமைச்செல நயத்தி
என்று கைதொழு திறைஞ்சின ரரக்கனு மிசைந்தான்.()

அநுமான் மீது போருக்குச் செல்ல இராவணன் இயைந்தமையை உணர்ந்த பஞ்சசேனாபதிகள் அவனை வணங்கித் தாம் போர்க்குச்செல்ல விடைபெற்று வெளியே வந்து, ஐம்பதினாயிரம் தேரும், ஐம்பதினாயிரம் யானையும், இலக்ஷம் குதிரையும், இரண்டு லக்ஷம் காலாட்களும் கொண்ட ஓர் பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு அநுமான்மீது போருக்குச் சென்றனர். இச் சேனாசமுத்திரத்தின்கண்,

கைப ரந்தெழு சேனையங் கடலிடைக் கலந்தார்
செய்கை தாம்வருந் தேரிடைக் கதிரெனச் செல்வார்
மெய்க லந்தமா நிகர்வரு முவமையை வென்றார்
ஐவ ரும்பெரும் பூதமோ ரைந்துமொத் தமைந்தார்.

இவ்வாறாகப் பிரயாணப்பட்ட சேனைகளிலுள்ள அரக்கர்களை, அவர்கள் மனைவியரும், மக்களும் தாய்மார்களும், உறவினரும் ஓடிவந்து தடுத்து, 'முன்பு அக்குரங்கின் முன்னே சென்றவர்கள் ஒருவராவது உயிர் தப்பி மீண்டும் வரவேயில்லையே' என்று அழுது புலம்பினர். இவ்வாறு பஞ்சசேனாதிபதிகள் அரக்கர் கூட்டத்துடன் தன்னை நோக்கி வருவதை அநுமானும் பார்த்தனன்.

அரக்கர தாற்றலு மளவில் சேனையின்
தருக்குமம் மாருதி தனிமைத் தன்மையும்
பொருக்கென நோக்கிய புரந்த ராதியர்
இரக்கமு மவலமுந் துளக்கு மெய்தினார். (224)

தன்னை நோக்கி வருஞ் சேனாசமுத்திரத்தைப் பார்த்த அநுமான், 'அரக்கர்கள் இற்றைப் பகலோடு ஒழிந்தார்கள்' என்று எண்ணித் தன் தோளை நோக்கினான். அரக்கரும் நெருங்கி வந்து ஆகாயம் வரையில் அளாவி நின்ற அநுமான் மீது பல படைக்கலங்களை எய்தனர். ஐயனும் அவற்றைத் தன் தேகத்திலுள்ள தினவு தீர்வுறச் சொரிந்தனர் என்று கருதிப் பொருட்படுத்தாதிருந்தனன். அரக்கர்கள் மிகுந்த கோபங் கொண்டு நெருங்கி வந்தனர். அநுமான், 'இவர்களை எற்றுவன்' என்று எழுந்து ஒரு எழுவைக் கையி லேந்திக் கரிகளையும், புரவிகளையும், தேர்களையும் அடித்துக் கொன்றனன். மத யானையின் கோடுகளை முறித்துக் கையில்

ஆயுதமாக ஏந்திக்கொண்டு மோதி மோதிப் பல தேர்களை உடைத்து எறிந்தனன். தேரின் சக்கரங்களைக் கழற்றி எடுத்து உருட்டி உருட்டி வெகு வீரர்களைக் கொன்றனன். இறந்த வீரர்களின் வாளினால் பற்பல குதிரைகளை வெட்டி எறிந்தனன். அநுமான் அரக்கர் சேனையைத் தும்சப்படுத்திக் கொன்றதனால் அவர்கள் சேனை குறைவுற்றது. தேவர்கள் களிப்பெய்தினர். இலங்கை நகரின்கண் அரக்கர் பட்டமைக்காக எழுந்த அழுகுரலோசை கடலின் மிக்கு ஒலித்தது. தங்கள் சேனை மாய்ந்ததைக் கண்ட பஞ்ச சேனாதிபதிகள் அநுமானை நோக்கி வந்தனர்.

ஈர்த்தெழு செம்புன லெக்கரி ழுக்கத்
தேர்த்துணை யாழிய ழுந்தினர் சென்றார்
ஆர்த்தன ராயிர மாயிர மம்பால்
தூர்த்தன ரஞ்சனை தோன்றலு நின்றான். (225)

பஞ்ச சேனாதிபதிகள் எதிர்த்துச் சென்று ஆயிரக் கணக்கான அம்புகளை அநுமான் மீது வீசினர். அஞ்சனை மைந்தனும் அவைகளைக் கைகளால் தடுத்து விலக்கி, அவ் வைவர்களில் ஒருவனை எழுவினால் அடித்துக் கொன்றான். ஒருவனைத் தேரோடும் விண்ணிலெறிந்து ஆவி போக்கினான். இருவரைத் தேரோடும் அந்தரத்தில் தூக்கிக் கொண்டு போய் வாலினால் அவர்கள் தாளையும், தோளையும் வரிந்து இறுக்க அவர்கள் உயிர் நீங்கிக் கீழே விழுந்து மாண்டனர். குன்றின் மேற்பாயும் கோளரியே போலத் தலையின் மீது குதித்து எஞ்சிய ஒருவனைத் தேரோடும் புவியிற் சாய்த்து மாய்த்தனன் அநுமான்,

வஞ்சமுங் களவும் வெஃகி
வழியலா வழிமே லோடி
நஞ்சினுங் கொடிய ராகி
நவைசெயற் குரிய நீரார்
வெஞ்சின வரக்க ரைவ
ரொருவனே வெல்லப் பட்ட
அஞ்செனும் புலன்க ளொத்தா
ரவனுநல் லறிவு போன்றான். (226)

பஞ்ச சேனாதிபதிகள் இறந்துபட்டதைக் கண்ட சோலையி லுள்ள காவலர்கள், 'நாம் இங்கே இருப்போமாயின் நம்மையும் இக் குரங்கு கொன்றுவிடும்' என்று பயந்து இராவணனிடம் ஓடோடியும் சென்று,

தானையு முலந்த தைவர் தலைவருஞ்
சமைந்தார் தாக்கப்
போனபின் மீள்வோம் யாமே
யதுவும்போர் புரிகி லாமை
வானையும் வென்று ளோரை
வல்லையின் மடிய நூறி
ஏனைய ரின்மை சோம்பி
யிருந்ததக் குரங்கு மென்றார். (227)

அட்சகுமாரன் வதை

பஞ்சசேனாதிபதிகள் இறந்துபட்டதைக் கேட்ட இராவணன் கடுங் கோபங்கொண்டு அநுமானுடன் தான் போர் செய்ய எண்ணங் கொண்டவனாய் ஆதனத்தினின்றும் எழுந்தபோது, அவன் குமாரனான அட்சகுமாரன் தன் தந்தையின் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சி, போர்க்குச் செல்லாம லிருக்கும்படி தடுத்து,

முக்கணு ணார்தி யன்றேல்
மூவுல கடியிற் றுயோன்
ஒக்கவூர் பறவை யன்றே
லவன்றுயி லுரக மன்றேல்
திக்கய மல்ல தேற்புன்
குரங்கின்மேற் சேறி போலாம்
இக்கட னடியேற் கீதி
யிருத்தியீண் டினிதி னெந்தாய். (228)

'குரங்கைப் பிடித்து வரும் குற்றேவலை எனக்குக் கொடுக்க வேண்டும்' என்று தன் தந்தையை இரந்த அட்சகுமாரன், 'எந்தையே, முன்னுளில் இந்திரன் மேல் கோபங்கொண்டு அவனைப் பிடித்துக்கொண்டு வந்து கொடு' என்று சொல்லி அடியேன் அருகே யிருக்கும்போதே என்னை அனுப்பாமல் எங்கள் தமையனை அனுப்பினீர் அது இன்னும் என் மனத்தில் குறையாயிருக்கின்றது. அக்குறை தீரும்வண்ணம் இக்குரங்கையாவது பிடித்துவர உத்தரவு கொடுக்கவேண்டும்; இமையா முக்கண் ஈசனுகிய உருத்திரனே வஞ்சனையை மனத்திலெண்ணி இவ்விடத்தில் ஒரு சிறு பழியை விளைவிக்க குரங்கு உருவம் எடுத்து எய்தினன் எனினும், அக்குரங்கை நொய்தினில் வென்று பற்றிக் கொடுவந்து உம்மிடம் தருவேன். பண்டைக்காலத்தில் தூணிற்றோன்றி இரணியனைச் சங்காரம் செய்த நாரசிங்கம், ஒரு கொம்பினுல் பூமியைப்பேர்த்து எடுத்த ஆதிவாரகம் ஆகிய இரண்டுமே குரங்கு வடிவம் எடுத்துப் போர்க்குப் போந்தன எனினும் அதனைப் பிடித்துத் தருவல், அக்குரங்கைக் கொண்டுவாத் தவறுவேனுயின் எனக்குத் தண்டனையை விதி,

எனவிவை யியம்பி யீதி
விடையென இறைஞ்சி நின்ற
வனைகழல் வயிரத் திண்டோண்
மைந்தனை மகிழ்ந்து நோக்கித்
துனைபரித் தேர்மே லேறிச்
சேறியென் றினைய சொன்னான்
புனைமலர்த் தாரி னானும்
போரணி யணிந்து போனான். (229)

அட்சகுமாரன் போர்க்கெழுந்தபோது அரக்கர்கள் ஆசிர்வாதஞ் செய்தார்கள். முரசங்கள் முழங்கின; ஊழிக்காலத்தில் பெயர்ந்து வருகின்ற கடலைப்போல சேனைகள் வந்துகூடின. கடலின்கணுள்ள மகரமீன்களை எண்ணலாகு மென்னின், அங்குவந்து சேர்ந்த யானைகளை எண்ணலாம். கடலிலுள்ள ஏனைய மீன்களைக் கணக்கிடலாகுமென்னின், அங்கு வந்திருக்கும் தேர்களை எண்ணலாம். கடற்கரையிலுள்ள நுண்மணலை எண்ணலாகுமென்னின், காலாள்களை எண்ணலாம். கடலின் அலைகளை எண்ணலாகுமென்னின், குதிரைகளை எண்ணலாம். இவ்வாறு கணக்கிடற்கரிய நால்வகைச் சேனைப் படைகள் நெருங்க அரக்கர்களுக்குள் அரசராய் விளங்குபவர்களின் குமாரர்கள் பன்னீராயிரவரும் அட்சகுமாரன் இன்னுயிரன்ன தோழர்களும், மந்திரி, பிரதானி, சேனைத்தலைவர்கள் ஆகிய இவர்களுடைய குமாரரும் இன்னும் ஏனையவரும் புடைசூழ அட்சகுமாரன் அனுமானிருக்கும் சோலையை நோக்கிச் சென்றான்.

வெள்ளவெஞ் சேனை சூழ
விண்ணுளோர் வெருவி விம்ம
உள்ளதொந் தனுங்கி வெய்ய
கூற்றமு முறுவ தன்னத்
துள்ளின சுழல்கட் பேய்க
ளோள்புடைத் தார்ப்பத் தோன்றும்
கள்ளவி ழலங்க லானைக்
காற்றின்சேய் வரவு கண்டான். (230)

இந்திர சித்சோ மற்றவ்
விராவண னேயோ வென்னச்
சிந்தையி னுவகை தோன்ற
முனிவுற்ற குரக்குச் சீயம்
வந்தனன் முடிந்த தன்றோ
மனக்கருத் தென்ன வாழ்த்திச்
சுந்தரத் தோளை நோக்கி
யிராமனைத் தொழுது சொன்னான். (231)

எண்ணிய விருவர் தம்மு
ளொருவனல் யான்முன் னேற்ற
புண்ணிய முளதா லெங்கோன்
றவத்தொடும் பொருந்தி னானே
நண்ணின னனு நின்றேன்
காலனு நணுகி நின்றான்
கண்ணிய கரும மின்றே
முடிக்குவன் கடிதி னென்றான். (232)

என்றவ னுவந்து விண்டோ
யிந்திர சாப மென்ன
நின்றதோ ரணத்தி னும்ப
ரிருந்ததோர் நீதி யானை

வன்றொழி லரக்க ஞேக்கி
வாலெயி றிலங்க நக்கான்
கொன்றதிக் குரங்கு போலா
மரக்கர்தங் குழாத்தை யென்னை. (233)

அன்னதா மச்சொற் கேட்ட
சாரதி யைய கேண்மோ
இன்னதா மென்ன லாமோ
உலகிய விகழ லம்மா
மன்னனே டெதிர்ந்த வாலி
குரங்கென்றான் மற்று முண்டோ
சொன்னது துணிவிற் கொண்டு
சேறியென் றுணரச் சொன்னான். (234)

சாரதி கூறியவைகளைக் கேட்ட அக்ஷகுமாரன், 'இங்கே போந்து பொழிலை யிறுத்து அரக்கரைக் கொன்ற குரங்கு, திரிலோகத்தில் எவ்விடத்தில் சென்று மறைந்துகொளினும் அங்கே போய் அதனைப் பற்றிக் கொணர்ந்து குரங் கென்னும் பூண்டே உலகத்தில் இல்லாமல் செய்துவிடுவேன்' என்றனன். அரக்கர் சேனை ஆர்த் தெழுந்து அநுமானை நெருங்கிப் படைகளை எறிந்தன. அப் படைக்கலங்களெல்லாம் மாருதி மேனியிற் பட்டு முறிந்தன. முட்டிய யானைகள் அழிந்தன. குதிரைகளும், தேரும் மடிந்தன. அரக்கரும் ஆவி பிரிந்து இறந்தனர்.

காயெரி முளிபுற் கானிற்
கலந்தெனக் காற்றின் செம்மல்
ஏயெனு மளவிற் கொல்லு
நிருதர்க்கோ ரெல்லை யில்லை

பேயவ ருயிரும் போகித்
தென்புலம் படர்தல் பொய்யா
தாயிர கோடி தூத
ருளர்கொலோ நமனுக் கம்மா. (235)

போர்க்களத்தில் வந்தவர்களையும், வாராநின்றவர்களையும், இனி வருபவர்களையும் அநுமான் ஓடி வளைத்துத் தமக்கு முன்னமே யிருக்கின்ற ஆற்றலின் மும்மடங்கு மேம்பட்ட ஆற்ற லுள்ளவனாய் ஊழிக் காலத்தில் உதய மாகும் அதிஉக்கிர சூரியனைப் போல விளங்கிச் சேனைகளை எல்லாம் அடித்தனன். அரக்கர்கள் சூரியனின் வெப்பத்தாலே தகிக்கப்பட்ட புழுவே போல் மடிந்தனர். இடைப்பெண் பாலைக் காய்ச்சித் தோய்த்த, அகன்ற வாயையுடைய தாழியிலே பொருந்திய, தயிரை ஒத்தனர் அரக்கர் மாருதி மத்தையும், ஊழித் தீயையும் போன்றவனாய் நின்று அழிக்க, பின் அக்ஷகுமாரன் தனியாய் நின்று கண்களில் தீப்பொறி சிந்த அநுமான் மீது பாணங்களை விட்டான். அநுமான் அவைகளை எல்லாம் இருப்புத் தண்டத்தினாலே தடுத்துச் சென்று அவன் தேரின் மேல் பாய்ந்தான். தேர் பூமியில் அழுந்தியது. அத்தேரை நடத்தும் சாரதியைக் கொன்றனன். தேரில் கட்டி யிருந்த குதிரைகள் மடிந்தன. அக்ஷகுமாரன் எய்யும் பாணங்களில் சில அநுமானுடைய மார்பிலே தைத்து ஊடுருவின. சில தோள்களில் புதைந்து மறைந்தன. சில முகத்தை மறைத்தன. இவைகட்கெல்லாம் சிறிதும் இளைக்காமல் அநுமான் அக்ஷகுமாரன் நேரே சென்று அவன் கையிலிருந்த வில்லை ஒரு கையால் பிடித்துக்கொண்டு அவன் எதிரில் நின்றனன். அக்ஷகுமாரன் இரு கையா-

னும் அச் சிலையைப் பற்றி வலித்தனன். இந்தப் போராட்டத்தில் வில் முறிந்தது. வில் முறியவும் அரக்கன் ஒரு உடைவாளை உருவி வெட்டினன். அநுமான் அந்த உடைவாளை ஒடித்துத் தூளாக்கிவிட்டனன். அவ்வுடைவாள் தூளாகிவிட்டதைக் கண்ட அக்ஷகுமாரன் தோளினாலே போர் செய்வான் எண்ணி அநுமானிடத்திற் சென்று அவனைத் தழுவிக்கொண்டனன். அநுமான் தேகத்தி லுள்ள உரோமம் வேலாயுதமே என்னும்படி அக்ஷகுமாரன் தேகத்தில் தைத்தது. அநுமானும் அவன் தேகத்தை நிமிரவொட்டாது தன் வாலால் சுற்றிப் பற்றி அவன்மேல் ஏறிக்கொண்டனன். வாலால் அக்ஷகுமாரனைப் பற்றிக்கொண்ட அநுமான் அவன் பற்கள் உதிரும்படி தன் கையினால் அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்தனன். பின்னர் மேகத்தினின்றும் பூமியில் விழும் மின்னற் கூட்டம் போல அவன் காதிலணிந்திருந்த குண்டலம் முதலிய இரத்தின ஆபரணங்கள் பூமியில் சிதறவும், குடல்கள் சரிந்து விழவும் தன்னுடைய வலி யமைந்த கையால் அக்ஷகுமாரன் பிடரியைப் பிடித்துப் பல குத்துக்கள் குத்தினன். அப்போது,

நீத்தா யோடின வுதிரப் பெருநதி
    நீரா கச்சிலை பாராகப்
போய்த்தாழ் செறிதசை யரிசிந் தினபடி
    பொங்கப் பொருமுயிர் போகாமுன்
மீத்தா நிமிர்சுடர் வயிரக் கைகொடு
    பிடியா விண்ணொடு மண்காணத்
தேய்த்தா னாழியி னுலகேழ் தேயினு
    மொருதன் புகழிறை தேயாதான். (236)

அக்ஷகுமாரன் இறந்துபட்டதைக் கண்ட அர்க்கர்களிற் சிலர் பயமுற்று இரத்த வெள்ளத்தில் மூழ்கி மறைந்தனர். சிலர் படைக்கலங்களைக் கை சோர விட்டுக் கண்ட கண்ட திசையில் ஓட்டம் பிடித்தனர். சிலர் மீனாகக் கடலிற் புக் கொளித்தனர். சிலர் பசுவாய் வழிதோறும் மேய்ந்திருந்தனர். சிலர் பறவையானார்கள். சிலர் மறையவர் உருவுற்றார்கள். சிலர் மங்கையர் வடிவங் கொண்டு குழலை வகிர்ந்து நின்றார்கள். சிலர் அநுமானிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

தந்தா ரமுழுறு கிளையுந் தமையெதிர்
தழுவுந் தொறுநும தமரல்லேம்
வந்தேம் வானவ ரென்றே கினர்சிலர்
சிலர்மா னுயரென வாய்விட்டார்
மந்தா ரங்கிளர் பொழில்வாழ் வண்டுக
ளானார் சிலர்சிலர் மருள்கொண்டார்
இந்தா ரெயிறுக ளிறுவித் தார்சில
ரெரிபோல் குஞ்சியை யிருள்வித்தார். ()

இவ்வாறு அரக்கர்கள் மடிந்ததைக் கேட்டு அரக்கியர்கள் வாய்விட்டழுத பேரோசை அண்டத்தைச் சென்று முட்டியது. மண்டோதரியும் தன் மகன் மாண்ட செய்தியை யுணர்ந்து கண்களினின்றும் நீர் பெருகக், குழல் புழுதியிற் புரள, வயிற்றி லடித்துக் கொண்டு இராவணன் பாதங்களில் வீழ்ந்து அலறியழுதாள். அவ்விலங்கையிலுள்ள யாவரும் புலம்பிக் கதறினார்கள்.

பாசப் பிணிப்பு

தன் தம்பியான அக்ஷன் இறந்துபட்டனன் என்ற கொடுஞ்சொல் தன்நெஞ்சைச் சுட மிகுந்த கோபங் கொண்டவனுய்க் கண்களில் தீப்பொறி பறக்க, திரிபுரி மெரித்த உருத்திர மூர்த்தியே போல், ஆயிரத்திருநூறு பேய்கள் பூட்டிய தேரின் மேல் ஏறினன், இந்திரனை வென்ற இந்திரஜித் என்றும் பெயரிய இராவணனுடைய மூத்த குமாரன். இவன் தேரின்மேல் ஏறியதைக்கண்ட தேவேந்திரன் நடுக்கம் கொண்டான். உயுத்தம் வலிமை யுடையது என்று எண்ணி மும்மூர்த்திகளும் தங்கள் தங்கள் தொழில்களைக் கைவிட்டனர்.

தம்பியை யுன்னுந் தோறுந்
தாரைநீர் ததும்புங் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி
வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியன் மாய வாழ்க்கைக்
குரங்கினுற் குரங்கா வாற்றல்
எம்பியோ தேய்ந்தா னெந்தை
புகழன்றோ தேய்ந்த தென்ருன். (238)

ஆயமாத் தானை தான்வந்
தண்மிய தண்ம வேளைத்
தீயவா ணிருதர் வேந்தர்
சேர்ந்தவர் சேரத் தேரின்
ஏயெனு மளவின் வந்தா
னிராவண னிருந்த யாணர்
வாயிருய்க் கோயில் புக்கா
னழுவிசோர் வயிரக் கண்ணன். (239)

தாளிணை விழுந்தான் தம்பிக்
கிரங்கினன் தருக னனும்
தோளிணை பற்றி யேந்தித்
தழுவின னழுது சோர்ந்தான்
வாளிணை நெடுங்கண் மாதர்
வயிறலைத் தலறி மாழ்க
மீளிபோல் மொய்ம்பி னனும்
விலக்கினன் விளம்ப லுற்றான். (240)

ஒன்றுநீ யுறுதி யோரா
யுற்றிருந் துலைய கிற்றி
வன்றிறற் குரங்கி னற்றன்
மரபுளி யுணர்ந்து மன்ன
சென்றுநீர் பொருதி ரென்று
திறத்திறஞ் செலுத்தித் தேயக்
கொன்றனை நீயே யன்றோ
அரக்கர்தங் குழுவை யென்றான். (241)

ஆயினு மைய நொய்தி
னண்டொழிற் குரங்கை யானே
ஏயெனு மளவிற் பற்றித்
தருகுவெ னிடரென் றென்றும்
நீயினி யுழக்கற் பாலை
யல்லைநீ டிருத்தி யென்னாப்
போயின னமரர் கோனைப்
புகழொடுங் கொண்டு போந்தான். (242)

இவ்வாறு தன் தந்தைக்குத் தேறுதல் சொல்லி, கரி-யும், பரியும், தேரும், கணக்கற்ற நிருதர்களும் ஊழிக் காலத்தில் பெயர்கின்ற பெரிய கடல் போலப் பொங்-கிச் செல்ல இந்திரஜித் அச் சேனையின் நடுவே மேரு

மலைபோலச் சென்றனன். போர்க்களத்தை நாடிவரும் சேனாசமுத்திரத்தைக் கண்ட அனுமான், 'அமரின் ஆற்றல் நன்று' என்று பகர்ந்து உவகை மேற் கொண்டிருந்தனன். அதனைக் கண்டோர் யாவரும் நடுக்கங் கொண்டனர். பிணங்களாகிய மலையும், இரத்தமாகிய பெரிய கடலையும், வேல், வாள் முதலிய ஆயுதங்களாகிய நெடிய காட்டையு முடையதாய் மற்றோர் உலகமே போலத் தோன்றுகின்ற போர்க்களத்தைக் கண்டு இந்திரஜித் பெரிதும் மனங் கலங்கினான். பின்னர் எண்ணில்லாத அரக்கரைக் கொன்றது ஒரே குரங்கு என்னின், ஸ்ரீராமன் வந்து எதிர்க்கும்போது நாம் எந்தப் படையைக் கொண்டு வெல்லப் போகின்றோம் என்று மனங்கவன்றனன்.

காணிடை யத்தைக் குற்ற
குற்றமுங் கரணர் பாடும்
யானுடை யெம்பி வீந்த
விடுக்கணும் பிறகு மெல்லாம்
மானிட ரிருவ ராலும்
வானர மொன்றி னாலும்
ஆனிடத் துளவென் வீர
மழகிற்றே யம்ம வென்றான் (243)

இவ்வாறு வருந்தும் இந்திரஜித்து பிணக் குவடுகள் இடறும்படி போர்க்களத்தைக் குறுகி அங்கே தேய்ப்புண்டு கிடக்கின்ற தன் தம்பியின் யாக்கையைப் பார்த்து, 'உன் தந்தையின் வெம்மையைக் கருதிக் கூற்றுவனும், உயிரைக் கவரான்; மற்றையோரும் அஞ்சுவர் என்னின், ஐயனே! எங்களைப் பிரிந்து எவ்வுலகிற் சென்று ஒளித்தனை' என்று பலவாறு கதறிப் புலம்பினான்.

ஆற்றல னனைய் னாகி
யறிவழிந் தயரும் வேலை
சீற்றமென் றொன்று தானே
மேனிமிர் செலவிற் ருகித்
தோற்றிய துன்ப நோயை
யுள்ளுறத் துரந்த தம்மா
ஏற்றஞ்சா லாணி யாணி யெதிர்
செலக் கடாய தென்ன. (244)

ஈண்டிவை நிகழ்வுழி யிரவி தேரெனத்
தூண்டுறு தேரின்மேற் ருேன்றுந் தோன்றலை
மூண்டுமுப் புரஞ்சுட முடுகு மீசனின்
ஆண்டகை வளைகழ லநும னோக்கினன். (245)

தன்னை நோக்கிப் போர் செயப் போந்த சேனைசமுத்திரத்தைக் கண்ணுற்ற அனுமான், 'இது காறும் சில் வீரரையான் வென்றமையானன்றே இச் சேனைசமுத்திரம் என் மேல் போர்க்கெழுந்தது. இவர்களை வெல்லுதல் அல்லது இவர்களால் தோல்வியடைதலாகிய இரண்டிலொன்று இன்று நடைபெறும். இச்சேனைக்குத்தலையாயவன் இராவணன் புதல்வனாகிய இந்திரஜித்து என்றே தோற்றுகிறது. இக்காளை என் கையால் ஒழிந்தானாயின் அதுவே அவ் விராவணனது முடிவு மாகும். அவன் இனி நாம் கெட்டோம் என்றெண்ணி சீதையைச் சிறையினின்றும் விட்டாலும் விடுவான். அரக்கரும் வெம்மைதீர்வார். என் மேல் போர்க்கு எழுந்த இந்திரஜித்தை யான் கொல்வேனாகில், அதனால் எய்தும் இலாபம் ஒன்றுதானோ? இந்திரன் துயரொழிந் திருப்பான். அரக்கர் வாழும் இலங்கையின் காவலும் நீங்கும். இராவ

ணனையும் வேரோடே வென்று வருவேன்' என்று எண்ணுவானாயினான்.

இவ்வாறு அநுமான் யோசித்துக்கொண்டிருக்குங் காலையில் அரக்கர்கள் நெருங்கிப் பெரும் போர்புரியத் தொடங்கினார்கள். சேனை தன்னோடு பொருவதைக் கண்ட அஞ்சனையின் புதல்வன் ஒரு பெரிய மராமரத்தைக் கையி லெடுத்துக்கொண்டு எல்லோரையுந் தாக்கினான். உதையுண்டும், மிதியுண்டும், புதையுண்டும் வதையுண்டும் யானைகள் மறிந்து புரண்டன. இடிந்தும், ஒடிந்தும், முறிந்தும், தேர்க் குலங்கள் பூமியிற் படிந்தன. தலையுங் காலுங் கழுத்தும் ஒடிந்து குதிரைகள் சாய்ந்தன. பிடிபட்டும், ஒடிபட்டும், சடிபட்டும், அடிபட்டும், அரக்கர்கள் அழிந்தனர்.

வட்ட வெஞ்சிலை யோட்டிய வாளியும் வயவர்
விட்ட விட்டவெம் படைகளும் வீரன்மேல் வீழ்ந்த
சுட்ட வல்லிரும் படைகலைச் சுடுகலா ததுபோல்
பட்ட பட்டன திசைதொறும் பொறியொடும் பாந்த.()

இவ்விதமாகத் தேரும், யானையும் புரவியும் அரக்கரும் அழிந்து பாரில் விழுந்ததும் தான் மாத்திரம் தனியே நின்ற பணைத்த தோளனை இந்திரஜித்து முறுவல்செய்து, மிக்க கோபங் கொண்டவனாய் அநுமான் மேற் போர் செய்ய வந்தனன். அநுமான் தன் நெடுந்தோள்களைப் புடைத்து மாதிரம் வெடிபட ஆர்த்தனன். அதனைக் கண்ட இந்திரஜித்து 'உன் வாழ்நாட்களின் எல்லை இன்றோடு முடிவெய்தியது' என்று பகர்ந்தான். இந்திரஜித்து கூறியவைகளைக் கேட்ட அநுமான், 'கொடியவர்களே! உங்கள் வாழ்நாளுக்கு முடிவும், அரக்கர்களால் உலகத்தை வருத்துந் தொழி-

லேயே மேற்கொண்ட உங்கள் கொள்கைக்கு முடிவும் உங்கள் ஆயுதங்கட்கு ஒரு முடிவும் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. என் தோளாற்றலுக்கு என்றும் முடிவு இல்லை!" என்று பகர்ந்தனன். இதனைக் கேட்ட இந்திரஜித்து,

இச்சி ரத்தையைத் தொலைப்பமென்
றிந்திரன் பகைஞன்
பச்சி ரத்தம்வந் தொழுகிட
வானவர் பதைப்ப
வச்சி ரத்தினும் வலியன
வயிரவான் கணைகள்
அச்சி ரத்தினு மார்பினு
மழுத்தலு மநுமன். (247)

அநுமான் தன் மீது பட்ட கணைகளை இந்திரஜித்தின் மீது படும்படி உதறி இந்திரஜித்து ஏறியிருக்கும் தேரிற் கட்டியுள்ள குதிரைகளும், சாரதியும் இறக்குமாறு புடைத்து அவனது வில்லையும் முறித்தனன். இந்திரஜித்து, தேவேந்திரன் தனக்குத் திறையாகக் கொடுத்த நீண்ட வில்லை எடுத்து அநுமான் மீது நூற்றுக் கணக்கான பாணங்களைத் தொடுத்தனன். அநுமானும் சிறிது தளர்வெய்தினன். அநுமான் அயர்ந்தமையைக் கண்ட தேவர்கள் அறிவழிந்தனர். இதனை உணர்ந்த அநுமான் அயர்ச்சி நீங்கி மரம் ஒன்றைக் கையில் பற்றி தன்மீது பட்ட வாளிகள் எல்லாம் துணிபடச் சுழற்றி இந்திரஜித்தன் முடித் தலையில் புடைத்தனன். அடிபட்டதும் மலையருவிபோல் இரத்தம் பெருக்கிழே விழுந்த மேகநாதன் மனங்கலங்கிச்

சிறிது போது தாழ்த்துத் தெளிந்து அநுமான்மீது ஆயிரம் பகழிகளை எய்தனன்.

உய்த்த வெஞ்சர முரத்தினுங் கரத்தினு மொளிப்பக்
கைத்த சிந்தையன் மாருதி நனிதவ கனன்ருன்
வித்த கன்சிலை விடுகணை விசையினுங் கடுகி
அத்த டம்பெருந் தேரொடு மெடுத்தெறிந் தார்த்தான்.

மேலே சென்ற தேர் பூமியில்வந்து வீழ்வதன் முன்னர் அநுமான் இந்திரஜித்தின் தேர்களை எல்லாம் சிதைத் தொழித்தனன்.

ஏறு தேரில னெதிர்நிற்கு மூானில னெரிபிற்
சீறு வெஞ்சினந் திருகுகின் ருன்றிரி வானும்
வேறு செய்வதோர் வினைபிறி தின்மையின் விரிஞ்சன்
மாறி லாப்பெரும் படைக்கலந் தொடுப்பதா மதித்தான்.

பூவும் பூநிற வயினியுந்
தீபமும் புகையும்
தாவில் பாவனை யாற்கொடுத்
தருச்சனை சமைத்தான்.
தேவி யாவையு முலகமுந்
திருத்திய தெய்வக்
கோவி னான்முகன் படைக்கலந்
தடக்கையிற் கொண்டான். (250)

பிரமதேவனுடைய வரப்பிரசாதத்தினுற்பெற்ற பிரம-பாசத்தைக் கையிலெடுத்து, வில்லில் தொடுத்து, அநுமான் தோள்களில் குறி பார்த்து விட்டான் அம் மேகநாதன். இந்திரஜித்து விட்ட படைக்கல மானது நெருப்பைச் சொரிகின்ற கண்களையுடைய பாம்புக் கூட்டங்கட்குத் தலைவனுன ஆதிசேடனது வடி-

வத்தைத் தாங்கி, சர்ப்பங்கட்கு வைரியாகிய கரு-டனும் திடுக்கிட்டு நடுங்கும்படி சென்று அநுமானது தோள்களைச் சுற்றிப்பிணித்தது.

திண்ணென் யாக்கையைத் திசைமுகன்
பண்டைசென் றிருக்
அண்ணன் மாருதி யன்றுதன்
பின்சென்ற வறத்தின்
கண்ணி னீரொடுங் கனகதோ
ரணத்தொடுங் கடைநாள்
தண்ணென் மாமதி கோளொடுஞ்
சாய்ந்தெனச் சாய்ந்தான். (251)

படைக்கலத்தால் பிணிக்கப்பட்டுப் பூமியில் சாய்ந்த அநுமான், 'இப்படைக்கலம் பிரமாஸ்திரமாகும் என்-பதை உணர்ந்து இதன் ஆணையை அவமதித்துச் செல்-லுதல் பொருத்தமுடையதன்று' என்று எண்ணித் தன் கண்களை மூடிக்கொண்டிருந்தனன். அநுமான் தரையிற் சாய்ந்ததைக்கண்ட மேகநாதன் 'இக்குரங்கின் வலி ஒய்ந்தது' என்று எண்ணி அதன் அருகே சார்ந்-தான். அநுமானல் தோல்வியடைந்து திசைகள் தோறும் பதுங்கிக்கொண்டிருந்த அரக்கர்கள் எல்-லோரும் ஓடிவந்து அநுமானைச் சூழ்ந்துகொண்டு அவன் தேகத்தைச் சுற்றி யிருக்கும் அரவைப்பற்றி யீர்த்தனர்.

குரக்கு நல்வலங் குலைந்ததென் றுவலங் கொட்டி
இரைக்கு மாநக ரெறிகட லொத்தகதெம் மருங்கும்
திரைக்கு மாசுணம் வாசுகி யொத்தது தேவர்
அரக்க ரொத்தனர் மந்தர மொத்தன னநுமன். (252)

இலங்கையிலுள்ள மைந்தரும் மகளிரும் ஒன்று சேர்ந்து இரைச்சலிட்டுக் களிப்படைந்தனர். இந்திரனை மேகநாதன் பிடித்துவந்த நாளைப்போல அவ்விலங்கைமாந்தர் அனைவரும் பெருமகிழ் வெய்தனர்.

பிணிவீட்கை

அநுமான் பிணிப் புண்டதைக்கண்டு அவனை ஒன்று சேர்ந்து சூழ்ந்துகொண்ட நகரமாந்தர், 'எய்யுங்கள், வெட்டுங்கள், தலையைக் கொய்யுங்கள், குடலைக் கூறுகச் செய்யுங்கள், கொல்லுங்கள் தின்னுங்கள் இவன் பிழைத்தால் அப்புறம் நமக்கு உயிரில்லை' என்று பகர்ந்தனர் பல்லோர். இவனை ஆயுதங்களாற் கொல்லவொண்ணாது, கடலில் தள்ளுங்கள், இல்லையேல் நெருப்பை வைத்துக்கொளுத்துங்கள்' என்று சொன்னார் பலர். சிலர் பார்க்கப் பார்க்கப் பயங்கொண்டவர்களாய் ஊர்ப்புறத்தே போய் ஒடி ஒளிந்தார்கள். சிலர் அரக்கரைக் கொல்ல அந்தகன் இவ்வானர ரூபமாக வந்தானோ' என்பார். சீதாபிராட்டியாரினது கற்பின் பெருமையால் கயிலையில் வீற்றிருப்பவனாகிய உருத்திரன் இவ்விலங்கையை அழிக்கக் குரங்காய்த் தோன்றினான்' என்றார் பலர். இவன் நாகத்தாற் கட்டுப்படவில்லை. ஏதோ எண்ணங்கொண்டு வருகிறான் என்று தெரிந்து, 'ஐயனே! எம்மைக் கோபியாமல் மகிழ்ந்து காக்கவேண்டும்' என்று தொழுதார் பலர் 'திருமாலும் நான்முகனும் தம் உருவைமாற்றி இக்குரங்காக வடிவங்கொண்டு வந்திருக்கின்றார்கள்' என்றார் பலர். இவ்வாறு பலர் பலவாறுய்பேசிக்கொண் டிருக்கப் பெருவலி படைத்த ஐம்பதினுயிரம் அரக்கர்கள் அநுமானைப் பிடித்துள்ள பாம்பைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள்.

ஆண்மொழி லநுமனு மவரோ டேகினன்
மீண்டிலன் வேறிலன் விரும்ப லுற்றிலன்
ஈண்டிது வேதொடர்ந் திலங்கை வேந்தனைக்
காண்டலே நலனெனக் கருத்தி னெண்ணினன். ()

அரக்கர்கள் இழுத்துச் செல்ல அவர்கள் புறம்பே செல்லும் அநுமான், 'என் பிதாவாகிய வாயுபகவானது கிருபையாலும், உலக ரக்ஷகனாகிய சீராமபிரானது திருவடியைச் சிந்தித்துக்கொண் டிருப்பதனால் எய்தும் நன்மைகளாலும், சீதாபிராட்டியும், தேவர்களும் கொடுத்த வரத்தாலும், என்னைப் பிணித்திருக்கும் இப்பாசத்தைச் சிந்திச் செல்ல எனக்கு ஆற்றலுண்டு எனினும், யான் இராவணன்பாற் சென்று அவனைச் சூழ்ந்திருக்கும் மந்திரிகளும், அறிவுடையோர்களும் அறியும்படி நீதியை எடுத்துரைத்தால், அவன் மனம் மிளகினவனாய் மிதிலை நாடியைச் சிறையினின்றும் நீக்கி என் வசம் அளிக்கவும் கூடும். இதுவேயன்றி அவனது துணை வலியையும் உணர்ந்து கொள்ளலாம். அக் கொடியோனது நிலையையும் மனத்தையும் அறியலாம். இம்மட்டோ, எம்பெருமான் பகழி ஒன்றினால் வாலி இறந்துபட்டமையும், மராமரம் ஏழும் தொளை எய்தினமையும், இரகோத்தமனுக்கு உறுதுணையாய் அமைந்துள்ள வானர வீரர்களின் பெருக்கையும், பரித்தேரோன் மகனின் ஆற்றலையும் எடுத்துரைப்பேனாயின், அவை இராவணன் மனத்தில் பதியவும் கூடும். ஆகலின், யான் இராவணனைச் சந்தித்து இராமனது நீதியும் ஆற்றலும் அவனுக்கு எடுத்துரைத்து எஞ்சிய அரக்கர்களையும் அழித்தலே கருமம்' என்னும் எண்ணங் கொண்டவனாய் அரக்கர் கட்டிய பாசத்துட்பட்டு அவர் பிறகே சென்றனன்.

தூதுவ ரோடினர் தொழுது தொல்லைநாள்
மாதிரங் கடந்தவற் குறுகி மன்னநின்
காதலன் மரைமலர்க் கடவுள் வாளியால்
ஏதில்வா னரம்பிணிப் புண்ட தாமென்றார். (254)

'நின்புதல்வன் அக்குரங்கைப் பிடித்துவிட்டான்' என்னும் சந்தோஷ சேதியைச் சொன்ன தூதுவர்கட்கு இராவணன் தன் மார்பில் அணிந்திருந்த மணிமாலைகளில் ஒரு ஆரத்தைப் பரிசாகக் கொடுத்து, 'நீங்கள் விரைவாக ஓடிச் சென்று அக்குரங்கைக் கொல்லாமல் கொண்டு வரும்படியாய்க் கட்டளையிட்டதாகச் சொல்லுங்கள்' என்றான். தூதுவர் விரைவிற் சென்று இராவணனது கட்டளையை இந்திரசித்துக்குத் தெரிவித்தார்கள். இஃது இவ்வாறாக, சோலையை யழித்து அரக்கரையுந் தொலைத்தான்; என்று மகிழ்ந்திருந்த சீதாபிராட்டியார் மாருதிக்கு நேர்ந்த தீங்கைக் கேட்டுக் கவன்று வேடன் கையில் தன்பார்ப்பைப் பறிகொடுத்த அன்னமே போல் பேதுறலெய்தி, 'கலைகள் யாவையும் முற்றுறக்கற்ற நீ ஓர் கள்ள அரக்கனால் கட்டுண்டாய் போலும். இதுவோ அறத்தின் பான்மை' என்றும் 'இறைவன் தந்த கணையாழியைக் காட்டி என் ஆருயிரை மறையாதபடி காட்டிய நீ உன் வலிமையை அரக்கர்பால் காட்டி நீக்கற் கரிய பழியை நாட்டிவிட்டனையே' என்றும், 'நீ கண்டு போன மார்க்கத்தை இராகோத்தமருக்குக் காட்ட அவர் ஈண்டுப் போந்து அரக்கர்களை மாய்த்து என்னைக்கொண்டு போவார்' என்று யான் எண்ணியிருந்த எண்ணத்தைப் போக்கி விட்டாயே' என்றும், இவ்விதமாகப் பலபல பன்னிக் கன்று பிடியுண்ணத் தீங்குறும் தாயே போல் தளர்ந்து மயக்க மெய்தினர்.

பெருந்த கைப்பெரி யோனைப் பிணித்தபோர்
முருந்தன் மற்றை யுலகொரு மூன்றையும்
அருந்த வப்பய னுலர சாள்கின்றான்
இருந்த வப்பெருங் கோயில்சென் றெய்தினன். (255)

இருந்த வெண்டிசைக் கிழவனை மாருதி யெதிர்ந்தான்
கருந்தி ணுகத்தை நோக்கிய கலுழனிற் கனன்றான்
திருந்து தோளிடை வீக்கிய பாசத்தைச் சிந்தி [ன்.
உருந்து நஞ்சுபோ லவன்வயிற் பாய்வனென் றுருத்தா

'உறங்குங் காலத்தில் கொல்லுதல் குற்றமா-மென்று ஒழிந்தேன். இப்போது இவன் பொன் மணியாசனத்தில் விழித்திருக்கப் பெற்றேன். பலவிதஞ் சிந்திப்பதேன். இவன் தலைகளை உருட்டித்தள்ளித் தருமம் என்னும் பூங்கொடி படர்தற்குக் கொள்-கொம்பென விளங்கும் சீதா பிராட்டியாரை மீட்டுக்-கொண்டு போவேன். வீரனது தேவியைச் சிறையிருக்கக் கண்ட தேவர், தானவர் முதலியோரது கட்புலன் காணும்படிக்கு இந்தப் பாவகாரியின் முடித் தலைகளைப் பறித்திலேன் எனில், என் ஆண்தன்மை என்னும்? நீண்ட வாளெயிற்று அரக்கனைக் கண்டு சில மொழிகளைப் புகன்று உயிரோடு செல்வேனாயின் வசையே உண்டாகும். இவனோடு எதிர்த்து மாளின் புகழன்றி வேறுண்டோ' என்று பற்பல விதமாக அநுமான் சிந்தையில் எண்ணி முடிவாகக் குன்றின் மேற் பாயுங் கோளரி போல ஓர் குதியிற் பாய்ந்து செல்வேன்' என்று சிந்தனை செய்தனன். பின்னர் அது காரியமல்லவென்று நினைந்தனன்.

கொல்லலாம் வலத்தனு மல்லன் கொற்றமும்
வெல்லலாம் தரத்தனு மல்லன் மேலைநாள்
அல்லெலாந் திரண்டன நிறத்த னற்றலை
வெல்லலா மிராமனுற் பிறரும் வெல்வரோ. (257)

என்னையும் வெலற்கரி திவனுக் கீண்டிவன்
தன்னையும் வெலற்கரி தெனக்குத் தாக்கினல்
என்னவே காலங்கள் கழியு மாதலான்
துன்னருஞ் செருத்தொழி ருெடங்க ஆயதோ. (258)

இங்கொரு திங்களே யிருப்பல் யானெனு
அங்கணு யகன்றன தானை கூறிய
மங்கையு மின்னுயிர் துறத்தல் வாய்மையால்
பொங்குவெஞ் செருவிடைப் பொழுது போக்கினல்.

ஆதலா னமர்த்தொழி லழகிற் றன்னருந்
தூதனுந் தன்மையே தூயதென் றுன்னினுன்
வேதநா யகன்றனித் துணைவன் வென்றிசால்
ஏதில்வா ளரக்கன திருக்கை யெய்தினுன். (260)

புவனமெத் தனையவை யனைத்தும் போர்கடந்
தவனையுற் றரியுரு வான வாண்டகை
சிவனெனச் செங்கணு னென்னச் சேவகன்
இவனெனக் கூறிநின் றிருகை கூப்பினுன். (261)

தன் எதிரே பிரமனது படைக்கலத்தாற் பிணிப்புண்டு கிடக்கும் அநுமானை இராவணன் நோக்கிக் கடுங்கோபங் கொண்டவனாய், 'நீ யார்? நீ ஏன் இங்கு வந்தனை?'

நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகட் பஃறலைப்
பூமிதாங் கொருவனோ பொருது முற்றுற
நாமமு முருவமுங் கரந்து நண்ணினாய். (262)

நின்றிசைத் துயிர்கவர் நீலக் காலனோ
குன்றிசைத் தயிலுற வெறிந்த கொற்றனோ
தென்றிசைக் கிழவனோ திசைநின் றாட்சியர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவனீ. (263)

ஆரைநீ யென்னையிங் கெய்து காரியம்
ஆருனை விடுத்தவ ரறிய வாணையால்
சோர்விலை சொல்லுதி யென்னச் சொல்லினான்
வேரொடு மமரர்தம் புகழ்வி ழுங்கினான். (264)

சொல்லிய வனைவரு மல்லன் சொன்னவப்
புல்லிய வலியினா ரேவல் பூண்டிலன்
அல்லியங் கமலமே யனைய செங்கணார்
வில்லிதன் றூதன்வந் திலங்கை மேயினேன். (265)

அவன் யாரெனில், 'உனது வலியையும், நீ முனாள் இயற்றிய தவத்தையும், கூட்டிய பெரிய படையையும் தேவர்கள் உனக்குக் கொடுத்த வரத்தையும், நீ சங்கரனிடத்தில் பெற்ற வாளையும், மற்றும் உனக்குள்ள வாழ்வு யாவற்றையும் தனது ஒரே பாணத்தால் அடியோடுந் தொலைக்க நிற்பவன். பூமியை எல்லாம் ஆண்டவனான தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரன்,

போதமும் பொருந்து கேள்விப்
புரையறு பயனும் பொய்தீர்
மாதவஞ் சார்ந்த தீரா
வரங்களு மற்று முற்றும்

யாதவ னினைந்தா னன்ன
    பயத்தன வேது வேண்டின்
வேதமு மறனுஞ் சொல்லு
    மெய்யற மூர்த்தி வில்லோன். (266

மூலமு நடுவு மீறு
    மில்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கு நீத்த
    காரணன் கைவி லேந்திச்
சூலமுங் திகிரி சங்குங்
    காகமுங் துறந்து தொல்லை
ஆலமு மலரும் வெள்ளிப்
    பொருப்புநீத் தயோத்தி வந்தான். ()

அறந்தலை நிறுத்தி வேத
    மருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச்
    செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோ
    ரிடர்துடைத் தேக வீண்டு
பிறந்தனன் தன்பொற் பாத
    மேத்துவார் பிறப்ப றுப்பான். (268)

அன்னவற் கடிமை செய்வே
    னும்மு மறும னென்பேன்
நன்னுத றன்னைத் தேடி
    நாற்பெருந் திசையும் போந்த
மன்னரிற் றென்பால் வந்த
    தானைக்கு மன்னன் வாலி
தன்மக னவன தேவற்
    றூதன்யான் றனியே னென்றான். (269)

என்றனு மிலங்கை வேந்த
னெயிற்றின மெழிலி நாப்பண்
மின்றிரிந் தன்ன நக்கு
வாலிசேய் விடுத்த தூத
வன்றிற லாய வாலி
வலியன்கொ லரசின் வாழ்க்கை
நன்றுகொ லென்ன லோடு
நாயகன் றூத னக்கான். (270)

அஞ்சலை யரக்க பார்விட்
டந்தர மடைந்தா னன்றே
வெஞ்சின வாலி மீளான்
வாலும்போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனி யான்ற
னடுகணை யொன்றுன் மாழ்கித்
துஞ்சினன் எங்கள் வேந்தன்
சூரியன் சேய்என்ற லென்றான். (271)

அநுமான் புகன்றவைகளைக் கேட்ட இராவணன் 'இப்போது இராமன் யாண்டையான்' என்றனன். அது கேட்ட அநுமான், 'சீதாபிராட்டியாரைத் தேடிப்போந்த இராமலக்குவர்க்கு எங்கள் தலைவனாகிய சுக்கிரீவன் இன்னுயிரன்ன நண்பனாயினான். அவன் வேண்டுகோளின்படி ஸ்ரீராமன் வாலியைக் கொன்று கிட்கிந்தையின் அரசியற் செல்வத்தையும் அவனிழந்த உருமை என்னும் இல்லக்கிழத்தியையும் அளித்தனன். சுக்கிரீவற்கு அரசச் செல்வத்தைக் கொடுத்த இரகுநந்தனன் அவனுடன் ஆறுமாதம் அங்கேயே வைகி எங்கட்குச் சீதையை நாடிக்கொண்டு வரும்வண்ணம்

கட்டளை யிட்டனன்' என்ருன். அநுமான் கூறியவைகளைக் கேட்ட தசக்கிரீவன், 'உங்கள் குலத்தலைவஞகிய வாலியைக்கொன்ற மனிதனுக்கு அடிமைப்பட்டு அவன் ஏவியவைகளைச் செய்தலை மேற்கொண்ட உங்கள் கீர்த்தியை என்னென்று எடுத்துரைப்பது? உங்கள் தலைவன் ஏவ நீ எனக்கு உணர்த்தலுற்றது யாது? உம்மை நாங்கள் கொல்லோம் அஞ்சாமற்சொல்' என்றனன்.

தூது வந்தது சூரியன் கான்முளை
ஏது வொன்றிய நீதி யியைந்தன
சாது வென்றுணர் கிற்றியேற் றக்கன
கோதி றந்தன நின்வயிற் கூறுகேன். (272)

வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன்னறம்
சிறிது நோக்கலை தீமை திருத்திஞய்
இறுதி யுற்றுள தாயினு மின்னுமோர்
உறுதி கேட்டி யுயிர்நெடி தோம்புவாய். (273)

போயிற் றீர்நும் புலன்வென்று போற்றிய
ஆயிற் றீர்வரி தாகிய மாதவம்
மாயிற் றீர்வரும் மாயிருங் கற்பிஞள்
தீயிற் றூயவ ளைத்துயர் செய்ததால். (274)

தீமை நன்மையைத் தீர்த்தலொல் லாதெனும்
வாய்மை நீக்கினை மாதவத் தால்வந்த
தூய்மை தூயவ டன்வயிற் றோன்றிய
நோய்மை யாற்றுடைக் கின்றனை நோக்கிலாய்.

திறந்தி றம்பிய காமச் செருக்கினல்
மறந்து தத்த மதியின் மயங்கினர்
இறந்தி றந்திழிந் தேறுவ தேயலால்
அறந்தி றம்பின ராருள ராயினர். (276)

இச்சைத் தன்மை யினிற்பிற ரில்லினை
நச்சி நாளு நகையுற நாணிலன்
பச்சை மேனி புலர்ந்து பழிபடூஉங்
கொச்சை யாண்மையுஞ் சீர்மையிற் கூடுமோ. ()

ஆத லாற்ற னரும்பெறற் செல்வமும்
ஓது பல்கிளை யும்முயி ரும்பெறச்
சீதை யைத்தரு கென்றெனச் செப்பினன்
சோதி யான்மக னிற்கெனச் சொல்லினன். (278)

என்ற லும்மிவை சொல்லிய தெற்கொரு
குன்றின் வாழுங் குரங்குகொ லாமிது
நன்று நன்றென மாநகை செய்தனன்
வென்றி யென்றொன்று தானன்றி வேறிலான். ()

குரக்கு வார்த்தையு மானுடர் கொற்றமும்
இருக்க நிற்கநீ யென்கொ லடாவிரும்
புரத்தி னுட்டருந் தூது புகுந்தபின்
அரக்கரைச் செற்ற தஃதுரை யாயென்றான். ()

காட்டு வாரின்மை யாற்கடி காவினை
வாட்டி னேனெனைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னு மென்மையி னாலுன்றன்
மாட்டு வந்தது காணுன் மதியினல். (281)

என்னு மாத்திரத் தீண்டெரி நீண்டுக
மின்னும் வாளெயிற் றன்சினம் வீங்கினன்
கொன்மி னென்றனன் கொல்லியர் சேர்தலும்
நின்மி னென்றனன் வீடண னீதியான். (282)

ஆண்டெ ழுந்துநின் றண்ண லரக்கனை
நீண்ட கையின் வணங்கின னீதியான்
மூண்ட கோப முறையதன் றுமென
வேண்டு மெய்யுரை பையவி ளம்பினன். (283)

வேறு

பூதலப் பரப்பி னண்டப்
பொகுட்டினிற் புறத்துட் பொய்தீர்
வேதமுற் றியங்கு வைப்பின்
வேறுவே றிடத்து வேந்தர்
மாதரைக் கொலைசெய் தார்க
ளுளரென வரினும் வந்த
தூதரைக் கொன்று ளார்கள்
யாவரே தொல்லை நல்லோர். (284)

இளையவ டன்னைக் கொல்லா
திருசெவி மூக்கொ டீர்ந்து
விளைவுரை யென்று விட்டார்
வீரராய் மெய்மை யோர்வார்
களைதியே லாவி நம்பா
லிவன்வந்து கண்ணிற் கண்ட
வளவுரை யாமற் செய்தி
யாதியென் றமையச் சொன்னன். (285)

நல்ல துரைத்தாய் நம்பியிவ
னவைசெய் தானே யாறுலும்
கொல்லல் பழுதே போயிடைநீ
கூறிக் கொணர்தி கடிதென்னுத்
தொல்லே வாலே மூலமறச்
சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லே கடக்க விடுமின்க
ளென்று னின்று ரிரைத்தெழுந்தார். (7)

ஆய காலத் தயன்படையோ
டிருப்ப வாகா தனவிடுகை
தூய பாச மெனேப்பலவுங்
கொணர்ந்து பிணிமின் ருளென்னு
மேய தெய்வப் படைக்கலத்தை
விட்டா னமரர் போர்வென்றுன்
ஏயெ னுமுன் னிடைபுக்குத்
தொடைவன் கயிற்றுற் பிணித்தீர்த்தார்.

அரக்கர்கள் நான்கு திக்குகளிலும் ஓடி நாட்டிலுள்ள கயிறுகள் நகரத்திலுள்ள கயிறுகள், வீட்டில் உள்ள ஊஞ்சற் கயிறுகள், தேர்வடக் கயிறுகள், குதிரை கட்டுங் கயிறுகள் ஆகிய கயிறுகள் எத்தனேயுண்டோ அவைகளே எல்லாம் சேகரித்துக் கொணர்ந்து மலே-போலக் குவித்து அநுமான்வாலிற் கட்டினர்கள். அது-கண்ட அநுமான், 'நாம் தெய்வப் படைக்கலத்தை அற நெறியினின்றும் விலகி அழித்தோம்' என்னும் பழி-சாராமல் அரக்கர்களே அப்படையினின்றும் விடுவித்-தார்கள். இனி நான் இவ் வரக்கர்களேச் சுலபமாய் ஜயித்துவிடுவேன். இவர்கள் என்னுடைய வாலேச்-

சுடும்படி எண்ணிய எண்ணம் இந்த ஊரை, 'நீ சுட்டெரிப்பாயாக' என்று எனக்குக் கட்டளை யிட்டதுபோலத் தோற்றுகின்றது, என்று இவ்வாறு பலபட எண்ணினவனாய்த் தான் அவ்வரக்கர்களின் மத்தியினின்று நீங்குதற்குரிய சமயத்தை நோக்கி யிருந்தான். மிக்க வலிமையையுடைய தன்னுடலை வருத்துந் திறம் அரக்கர் பிணிக்கும் கயிறுகட்கு இல்லாதிருக்கவும் அந்தப் பாசபந்தத்தைப் பொறுக்கும் வலியில்லாதவன் போல் அதற்கு உடன்பட்டு, உடம்பு துவளுதல் அடைந்து, கொடிய அரக்கர்கள் குழாத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ளும் ஆற்றலிருந்தும் அதற்கேற்ற சமயத்தை எதிர் பார்த்திருந்தமையினால் அநுமான் அவ்வரக்கர் செய்கைகட்கு உட்பட்டு அவர்கள் இழுக்கும் வழியெல்லாம் சென்றுகொண்டிருந்தனன்.

வேந்தன் கோயில் வாயிறோறும்
விரைவிற் கடந்து வெள்ளிடையிற்
போந்து புறநின் றிரைக்கின்ற
பொறைதீர் மறவர் புறஞ்சுற்ற
வந்து நெடுவால் கிழிசுற்றி
முற்றுந் தோய்த்தா ரிழுதெண்ணெய்
காந்து கடுந்தீக் கொளுத்தினா
ரார்த்தா ரண்டங் கடிகலங்க. (288)

பின்னர் அநுமானது தோள்களிலும், தொடைகளிலும், கரங்களிலும், கைகளிலும் கட்டிய வலியுள்ள கயிறுகளைப் பக்கந்தோறும் இரு கூறாய் நூறாயிரம் பேர்கள் இறுகப் பிடித்துச் சென்றனர். ஆயுதபாணிக

ளாக இரண்டு பக்கத்திலும் காவல் வீரர்கள் கணக்கற்ற பேர்கள் கடல் புரண்டு வருவது போலத் திரண்டு வந்தனர். 'மகாசிங்காரமாகிய இலங்கைமா நகரத்தை-யும், வாசனை வீசும் சோலையையும் அழித்துத் தன்னை எதிர்த்த அட்சகுமாரன் முதலியோரைக் கொன்று, சீதா பிராட்டியாரைக் கண்டு பேசி இராமலக்குவர்க-ளுடைய வில்லாண்மையை நம் அரசனாகிய இராவ-ணனுக்குச் சொல்ல வந்த குரங்கு படும் பாட்டைப் பார்க்க வாருங்கள்' என்று சகலமானவர்களும் அறிய அரக்கர் கூவி அழைத்தனர்.

ஆர்த்தா ரண்டத் தப்புறத்து
மறிவிப் பார்போ லங்கோடிங்
கீர்த்தார் முரச மெற்றினா
ரிடித்தார் தெழித்தா ரெம்மருங்கும்
பார்த்தா ரோடிச் சானகிக்கும்
பகர்ந்தா ரவளு முயிர்பதைத்தாள்
வேர்த்தா ளுலந்தாள் விம்மினாள்
விழுந்தா ளழுதாள் வெய்துயிர்த்தாள். ()

தாயே யனைய கருணையான்
றுணையே எதுந் தகைவில்லா
நாயே யனைய வல்லரக்கர்
நலியக் கண்டா னல்காயோ
நீயே யுலகுக் கொருசான்று
நிற்கே தெரியுங் கற்பதனில்
தூயே னென்னிற் றொழுகின்றேன்
எரியே யவனைச் சுடலென்றாள். (290)

வெளுத்தமென் னகையவள் விளம்பு மேல்வையின்
ஒளித்தவெங் கனலவ னுள்ள முட்கினன்
தளிர்த்தன மயிர்ப்புறஞ் சிலிர்ப்பத் தண்மையால்
குளிர்த்ததக் குரிசில்வா லென்பு கூரவே. (291)

சீதா பிராட்டியாரின் கற்பின் மாட்சியால் அக்கினி சுடாமல் குளிர்ந்திருந்ததை நாம் எவ்வாறு விவரித்துச் சொல்வது. சமுத்திரத்திலுள்ள வடவாமுக அக்கினியுங் குளிர்ந்தது. பூமியி லுள்ள அக்கினியுங் குளிர்ந்தது. தேவ ருலகி லுள்ள அக்கினியுங் குளிர்ந்தது. முனிவர்கள் காக்கும் மூன்று வகையான வேதாக்கினியுங் குளிர்ந்தது. உருத்திரனது நெற்றிக் கண்ணிலுள்ள அக்கினியுங் குளிர்ந்தது. உலகத்தை யளந்த வாமன ரூபியினுடைய வலக் கரத்தி லுள்ள அக்கினியுங் குளிர்ந்தது. ஓம குண்டங்க ளெல்லாம் குளிர்ந்தன. மேகத்தி லுண்டாகும் இடிகள் குளிர்ந்தன. சூரிய மண்டலங்குளிர்ந்தது. நரகமுங்குளிர்ந்தது.

வெற்பினை யியன்ற தன்ன
மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினுஞ் சுடாது நின்ற
நீர்மையை நினைவி னோக்கி
அற்பின ரறுத சிந்தை
யநுமனுஞ் சனகன் பாவை
கற்பினை யியன்ற தென்பான்
பெரியதோர் களிப்ப னானான். (292)

அரக்கர்கள் தன்னைப் பற்றிச் செல்ல அவர்கள் பிறகே சென்ற அநுமான்,

முழுவதுந் தெரிய நோக்கி
முற்றுமூர் முடிவிற் சென்றான்
வழுவுறு கால மீதென்
றெண்ணினன் வலிதிற் பற்றித்
தழுவின னிரண்டு நூறு
யிரம்புயத் தடக்கைத் தாம்போ
டெழுவென நால விண்மே
லெழுந்தனன் விழுந்த வெல்லாம். ()

அநுமான் ஆகாயத்தில் எழுந்த வளவில் அவனைப் பற்றி யிருந்த அரக்கர்கள் எல்லாரும் கீழே வீழ்ந்திறந்தனர். பல சர்ப்பங்களாற் சூழப்பட்டு விளங்கும் கருடன் என்னும்படி தன் மெய்யிற் சுற்றி யுள்ள கயிற்றோடும் ஆகாயத்தில் விளங்கும் அநுமான் சீராமனைப் பன் முறை வாழ்த்தித் தன் வாலை அவ் விலங்கையின் மீது போக விட்டனன். அவ் வால், தனது இறைவனை பரமசிவனது கைலையைப் பறித்த கொடியோனது நகரத்தை அழிப்பேன் என்று செல்லும் மழு வாயுதத்தைப் போலவும், முப்புரத்தையும் ஒரு கணப் போதினில் எரிக்கும்படி முக்கணன் எய்த பாணத்தைப் போலவும் விளங்கிற்று. அநுமான் தன் வாலை அந்நகரில் நெடுந்தூரம் செல்ல விடுத்துப் பொன்னாலும், மணியாலும் தெய்வத் தச்சன் கைமுறை திருந்தச் செய்திருந்த மனைகள்தோறும் தாவிச் சென்றனன்.

நீனிற நிருத ரீண்டு நெய்பொழி வேள்வி நீங்கிப்
பால்வரும் பசிய னென்பான் மாருதி வாலைப் பற்றி
ஆலமுண் டவனன் றாட்ட வுலகெலா மழிவி னுண்ணும்
காலமே யென்ன மன்னோ கனலியுங் கடிதி னுண்டான்.

இலங்கை எரியூட்டுகை

அநுமான் வாலிற் கொளுத்தப்பட்ட கடுங்கனலானது மனைகள் தோறும் புகுந்து கொடி, விதானம், சுவர், தூண் முதலிவற்றை யெல்லாம் தடவிக் கொளுத்தலால் அந் நெருப்புக்குப் பயந்து அரக்கர்களும் அரக்கியர்களும் வெளியே புறப்பட்டோடுவதும் பின் வீட்டிலுள்ள மக்கள் முதலியவர்களை நினைந்து திரும்புவதுமாய் ஊசலாடி மனமுளைந்து கூக்குரலிட்டுக் கதறினர்கள். மாதர்கள் சிலர் மாணிக்கக்கற்கள் இழைத்த தங்கள் மாளிகை எப்போதும் சிவந்த காந்தியை வீசிக்கொண் டிருப்பதினால் நெருப்புப் பற்றியதை அறியாதவர்களாய் உள்ளேயேயிருந்து வருந்துவாராயினர். ஆடவரும் மகளிரும், செந்நிறம் பொருந்திய மயிர்த்தலையினராதலின் நெருப்புப் பற்றியதை அறியாதவர்களாய் இருந்தனர்.

இல்லிற் றங்கும் வயங்கெரி யாவையும்
சொல்லிற் றீர்ந்தன போன்றன தொல்லுருப்
புல்லுக் கொண்டன மாயைப் புணர்ப்பறக்
கல்வித் தம்மியல் பெய்துங் கருத்தர்போல். ()

அரக்கர் வீட்டிலுள்ள நெருப்பு அநுமான்வாலின் நெருப்போடு சேர்ந்து எரிய, மேலே எழுந்த புகையானது, உலகளந்த நெடுமாலின் கரியமேனிபோல் மேலே எழுந்து பரவியது. நெருப்புப் பொறிபோய் வீழ்தலால் கடல் கொதிப்பையடைய அதில் உள்ள மீன்களெல்லாம் துடித்து வெந்து உயிர் சோர்ந்தன. பொன்னாற் செய்யப்பட்ட மாளிகைகளெல்லாம் தீப்பட உருகியோடிக் கடலிற் பாய்ந்து நீண்ட தடிபோலத் திரண்டன. இதுவேயன்றி அந் நெருப்பு,

பேய மன்றினி னின்று பிறங்கெரி
மாய ருண்ட நறவு மடுத்ததால்
தூய ரென்றவர் வைகிடந் துன்னினால்
தீய ரன்றியுந் தீமையுஞ் செய்வரால். (296)

சமுத்திரம் உலைபோலக் கொதித்து மறுகிற்று. மேகங்கள் எல்லாம் கொதித்தன. சோலைகள் எல்லாம் எரிந்து கரியாயின. அழகிய நிறமுடைய குதிரைகள் எல்லாம் பிடரிமயிர் தீய்ந்து மாய்ந்தன. கரிய யானைகள் எல்லாம் மேல்தோல் உரியத் தேவேந்திரன் ஏறிநடாத்தும் ஐராவதம்போல வெண்ணிறமுற்று விளங்கின. தேர்கள் எல்லாம் உருளையோடும் ஒன்றாயுருகிக் கட்டியாய்த் திரண்டன. அரக்கியர் சிலர், 'நம்முடைய கணவர்கள் குரங்கால் கொல்லப்பட்டனர். அதனால் நாம் மங்கல வாழ்க்கையில்லாதவர்களானோம். நாம் இனி வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது' என்று எண்ணி உள்ளேயே இருந்து மாண்டார்கள். மெய்யிலே நெருப்புப் பிடிக்க வருத்தமுற்று வானிலோடிய மங்கையர் சிலர் காட்டிலோடும் நீரென்று மயங்கிப் பேய்த் தேரில் வீழ்ந்து மரித்தார்கள். மேலேயோங்கி எழுந்த நெருப்பானது சந்திரனைக் கிட்டி யுருக்க அவன் மெய்யினின்றும் உகுத்த அமிர்தத்தால் உயிர்போன அரக்கருள் சிலர் ஆவி பெற்றெழுந்தார்கள். தீயினால் முற்றும் வெந்த மேகத்தினிடையில், கரியின் நடுவே உருகித்தோன்றும் பொற்றிரளைப்போலச் சூரியன் தோன்றினான்.

வெருளும் வெம்புகைப் படலையின்
மீச்செல வெருவி
இருளும் வெங்கடல் விழுந்தன
எழுந்தில பறவை

மருளு மீன்கணம் விழுங்கிட
உலந்தன மனத்தோர்
அருளில் வஞ்சரைத் தஞ்சமென்
றடைந்தவ ரனைய. (297)

நீரைவற்றும்படி பருகி, நிலத்தையெல்லாம் உருக்கிச் சோலைகளைச் சுட்டு மலைகளை யெல்லாம் தணலாக்கி, ஊரையெல்லா முடியவு மெரித்த, அப் பெருந்தீ இராவணன் மனையிலும் புகுந்து கொளுத்தத் தொடங்கிற்று. இராவணன் அரண்மனை,

பொன்றி ருத்திய தாயதா விராவணன் புரைதீர்
குன்ற மொத்துயர் தடநெடு மாநிலைக் கோயில்
நின்ற துற்றெரி பருகிட நெரிவுற உருகித்
தென்தி சைக்குமோர் மேருவுண் டாமெனத் தெரிந்த.

அப்போது அரக்கனும் அவன் தேவிமார்களும் பிறரும் அழகிய புட்பகவிமானத்தில் ஏறிக் கணப்போதில் இலங்கையைவிட்டு நீங்கிப்போனார்கள். நெருப்பை அணைப்போரின்மையால் மலைமேலுள்ள இலங்கைமா நகரும் விரைவில் வெந்து பாழாயிற்று. ஆகாய மார்க்கமாய்ச் செல்லும் இராவணன் தன் கண்ணெதிர்ப்பட்ட அரக்கர்களைச் சினந்துநோக்கி, 'உலகங்கள் எல்லாம் எரிந்தொழியும் ஊழிக்காலந்தான் வந்துளதோ? மற்றும் ஏதாயினும் உண்டோ? திடீரென நமது நகரத்தை நெருப்பு அழிக்க வேண்டிய காரணம் என்ன?' என்று வினவினான்.

கரங்கள் கூப்பினர் தங்கிளை
திருவொடும் காணார்
இரங்கு கின்றவல் லரக்கரீ
தியம்பின ரிறையோய்

தரங்க வேலையி னெடியதன்
வாலிட்ட தழலால்
குரங்கு சுட்டதென் றுரைத்தலு
மிராவணன் கொதித்தான். (299)

என்று கொல்குரங் கன்னதிவ்
வலியுள திலங்கை
நின்று வெந்துமா நீறெழு
கின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது
தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் வலியென
இராவண னக்கான். (300)

கோபத்தால் நகைத்த இராவணன், 'அக்குரங்கு, ஓடிப்போவதற்குமுன் போய்ப் பிடியுங்கள்' என்று கட்டளை யிட்டனன். உடனே அருகே நின்ற வீரர்கள், மற்றும் பல அரக்கர்களோடுஞ் சென்று மாருதியைக்கண்டு, 'பற்றுங்கள் எற்றுங்கள், சுற்றுங்கள், முற்றுங்கள்' என்று கூவிக்கொண்டு மிக்க சினத்தோடும் எதிர்த்தார்கள். அநுமான் அவர்களை எல்லாம் நெருப்புப்பற்றி எரியும் தன்வாலால் வளைத்து ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி எடுத்து அதனால் மோதி அடிக்கவே ஆயுதங்களையும் ஆயுளையும் இழந்து பலர் மாண்டனர். இறந்துபட்டவர்கள் உடலி னின்றும் போந்த இரத்தம், ஊரில் பற்றிய நெருப்புத் தணியும்படி ஆறுக ஓடிற்று. இறவாதொழிந்த அரக்கர்கள் எல்லோரும் அநுமானை மீண்டும் வந்து எதிர்த்து மாண்டனர். இஃதிவ்வாறிருக்க வித்தியாதரர் சிலர் சீதாபிராட்டியார் இருந்த சோலையையும் அதின்

வெளிப்புறத்தையும் தீ நெருங்க வில்லை' என்று சொல்லிக் கொண்டனர்.

வந்தவர் சொல்ல மகிழ்ந்தான்
வெந்திறல் வீரன் வியந்தான்
உய்ந்தன னென்ன உயர்ந்தான்
பைந்தொடி தாள்கள் பணிந்தான். (301)

பார்த்தனள் சானகி பாரா
வேர்த்தெரி மேனி குளிர்ந்தாள்
வார்த்தையென் வந்தனை யென்னாப்
போர்த்தொழில் மாருதி போனான். (302)

தெள்ளிய மாருதி சென்றான்
கள்ள அரக்கர்கள் கண்டால்
எள்ளுவர் பற்றுவ ரென்னா
ஒள்ளெரி யோனு மொளித்தான். (303)

திருவடி தொழுகை

நீங்குவன் விரைவி னென்னு
நினைவினன் மருங்கு நின்ற
தாங்கொரு குடுமிக் குன்றை
அருக்கனி னணைந்த ஐயன்
வீங்கின னுலகை யெல்லாம்
விழுங்கின னென்ன வீரன்
பூங்கழ றொழுது வாழ்த்தி
விசும்பிடைக் கடிது போனான். (304)

ஆகாயமார்க்கமாகச் செல்லும் அனுமான், வழியில் மைநாகமலையில் சிறிதுபோது தங்கித் தன்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வானரவீரர்கள் வசிக்கும் மலையில் வந்து குதித்தனன்.

போய்வருங் கரும முற்றிற்
றென்பதோர் பொம்மல் பொங்க
வாய்வெரீஇ நின்ற வென்றி
வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத் தாங்க
ணிருந்தன பறவைப் பார்ப்புத்
தாய்வரக் கண்ட தன்ன
உவகையில் தளிர்த்தா ரம்மா. (305)

வானரவீரர்கள் அநுமானைக் கண்டதும் தாய்வரக்கண்ட பறவைக் குஞ்சுகள்போலக் களிமகிழ் வெய்தினர். அதனால் சிலர் அழுதனர், சிலர் ஆர்த்தனர், சிலர் அன்பினால் தொழுதார்கள், சிலர் ஓடித் துள்ளினார்கள், சிலர் அள்ளிவிழுங்குபவர் போல் மொய்த்தார்கள். சிலர் சுற்றும் தழுவினார்கள், சிலர் தமது தோள் மேல் அவ் வநுமானைச் சுமந்து சென்றார்கள். சிலர் தேன், கிழங்கு, காய் முதலிய அரிதில் தேடியவைகளை உண்டு மெலிவு தீர்வாய் எனக்கொண்டுவந்து கொடுத்தார்கள். சிலர் அநுமானது தாளிலும் மார்பிலும், தோளிலும், தலையிலும் வாள்வேல் முதலிய ஆயுதங்களால் பட்ட-புண்களை நோக்கி உயிர்கரைந்தார்கள்.

வாலிகா தலனை முந்தை
வணங்கின னெண்கின் வேந்தைக்
காலுறப் பணிந்து பின்னைக்
கடன்முறை கடவோர்க் கெல்லாம்
மேலுற வியற்றி யாங்க
ணிருந்திவ ணிருந்தோர்க் கெல்லாம்
ஞாலநா யகன்றன் தேவி
சொல்லின னன்மை யென்றான். (306)

என்றலும் கரங்கள் கூப்பி
எழுந்தன ரிறைஞ்சித் தாழ்ந்து
நின்றன ருவகை பொங்க
விம்மலா னிமிர்ந்த நெஞ்சர்
சென்றது முதலா வந்த
திறுதியாச் செப்பற் பாலே
வன்றிற லுரவோ யென்னச்
சொல்லினன் மருத்தின் மைந்தன். ()

வானரவீரர்கள் வேண்டுகோட்கு இணங்கிய அநுமான் தான் இலங்கைக்குச் சென்றதும், பிராட்டியாரைக் கண்டதும், பிராட்டியார் இராமற்கு அடையாளம் தந்தும் புகன்று தான் செய்த பராக்கிரமங்கள் யாதும் புகலவில்லை.

பொருதமை புண்ணே சொல்ல
வென்றமை போந்த தன்மை
உரைசெய ஊர்தீ யிட்ட
தோங்கிரும் புகையே ஓதக்
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தேம் பின்ன
ரென்னினிச் செய்து மென்றார். (308)

யாவது மினிவே றெண்ணல்
வேண்டுவ திறையு மில்லை
சேவகன் தேவி தன்னைக்
கண்டமை விரைவில் செப்பி
ஆவதவ் வண்ண லுள்ளத்
தருந்துய ரகற்ற லேயாம்
போவது புல்மை என்னப்
பொருக்கென எழுந்து போனார். ()

போயினர் களிப்பி னோடும்
புங்கவன் சிலையி னின்றும்
ஏயின பகழி யன்ன
எழுந்துவிண் படர்ந்து தாவிக்
காய்கதிர்க் கடவுள் வானத்
துச்சிசென் றிறுக்குங் காலத்
தாய்வரு வீர ரும்போய்
மதுவன மதிலி றுத்தார். (310)

மதுவனத்தில் தங்கிய வானரவீரர்கள் அநுமானை நோக்கி, 'ஐயனே! சீதையைக் காணுமையால் நாங்கள் எல்லோரும் இறக்கத் துணிந்திருந்தோம். நீ போய்க் கண்டுவந்து நாங்கள் இறத்தலை ஒழித்தருளினை. நம் இறைவனான சுக்கிரீவன் ஏற்படுத்திய தவணை கடந்து நெடுநாளாயிற்று, இதுவரையில் நாங்கள் வருத்தத்தினால் உணவு கொள்ளாமல் இருந்தோம். எங்கட்கு உணவைத் தந்தருள்வாய்' என்று வேண்டினர். அநுமான், 'நாம் எல்லோரும் வாலிகாதலனாகிய அங்கதனிடம் செல்வோம்' என்று அவ் வானரவீரர்களுடன் சென்றனன்.

அங்கதன் தன்னை யண்மி
அநுமனு மிருகை கூப்பிக்
கொங்குதங் கலங்கல் மார்ப
நின்னுடை குரக்குச் சேனை
வெங்கத மொழிந்து சால
வருந்தின வேடை யோடி
இங்கிதற் களித்தல் வேண்டு
மிருவுமிழ் பிரச மென்றான். (311)

நன்றென அவனு நேர்ந்தா
னரலையு நடுங்க வார்த்துச்
சென்றுறு பிரசந் தூங்கும்
செழுவன மதனி னூடே
ஒன்றின்முன் னொன்று பாயு
மொடிக்குமென் பிரச மெல்லாம்
தின்றுதின் றுவகை கூரும்
தேனுக ரளியின் மொய்த்தே. (312)

வானரவீரர்கள் மதுவனத்தை யடைந்து பல நாள் உணர்வின்றி வருந்தினவர்களாதலின், அவ் வனத்தின் தேனை நுகர்ந்து ஒருவர் மேல் ஒருவர் விழுவதும் தழுவுவதுமாய் விளையாடிக் களித்தார்கள். அப்போது அம் மதுவனத்தைக் காக்கும் வானர வீரர்கள்,

முனியுமா லெம்மை எங்கோ
னென்றவர் மொழிந்து போந்து
கனியுமா மதுவ னத்தைக்
கட்டழித் திட்ட தின்று
நனிதரு கவியின் தானை
நண்ணலார் செய்கை நாண
இனிஎம்மால் செயலின் றென்னத்
ததிமுகற் கியம்பினாரே. (313)

கேட்டவன் யாவ ரேயெம்
மதுவனம் கேடு சூழ்ந்தார்
காட்டுமென் றெழுந்தா னன்னார்
வாலிசேய் முதல கற்றோர்

ஈட்டம்வந் திறுத்த தாக
வங்கத னேவ றன்னால்
மாட்டின கவியின் தானை
மதுவள ருலவை ஈட்டம். (314)

மதுவனத்தைக் காக்கும் தொழிலை மேற்கொண்ட வானர வீரர்கள், 'ஐயனே, நாங்கள் சுக்கிரீவ மகாராசன் கட்டளையிட்ட வண்ணம் இதுகாறும் மதுவனத்தைப் பாதுகாத்து வந்தோம். இன்று இங்கே இவ்வனத்தை அழிக்கப்போந்த குரங்குகளை அழிக்கவொட்டாமல் விலக்கினம். அவைகள் எங்களை வருத்த நாங்கள் நொந்தோம்' என்று பகர்ந்தனர். இதைக்கேட்ட ததிமுகன் 'தந்தையாகிய வாலி இறந்துபட்டது அவன் தநயனாகிய அங்கதன் அறிந்திலன் போலும்' என்று பகர்ந்து,

எனவுரைத் தனலில் பொங்கி
எழுந்திரைத் திரண்டு கோடி
கனைகழல் கவியின் சேனை
கல்லெனக் கலந்து புல்லப்
புனைமதுச் சோலை புக்கான்
மதுநகர் புனிதச் சேனை
அனகனை வாழ்த்தி ஓடி
அங்கத னடியின் வீழ்ந்த. (315)

சோலைபுக்க ததிமுகன் அங்கதனைப் பார்த்து, 'தேவேந்திரன் தன்மகனாகிய வாலிக்குக் கொடுத்த மதுவனத்தை யான்மிக அருமையாகப் பாதுகாத்து வந்தேன். அதனை நீ அழித்துவிட்டனை. சுக்கிரீவன் ஆணையை நீயறிந்தா யில்லைபோலும். உன் வாழ்நாள் இன்றோடே முடிவெய்தியது' என்று பகர்ந்து.

மதுவனம் தன்னை இன்னே
மாட்டுவித் தனைநீ என்னக்
கதுமென வாலி சேய்மே
லெறிந்தனன் கருங்கல் பாறை
அதுதனைப் புறங்கை யாலே
அகற்றியங் கதனுஞ் சீறித்
ததிமுகன் தன்னைப் பற்றிக்
குத்தினன் தடக்கை தன்னால். (316)

அங்கதன், ததிமுகனை வாய்வழி குருதிசோரக் குத்தி அடித்துத் துரத்திவிட்டு, அவன் சேனைகளை அழிக்கும்படி தன் சேனுவீரர்கட்குக் கட்டளை இட்டனன். அந்தக் கட்டளை அங்கதன் வாயினின்றும் வெளிப்படு முன்னரே வானரவீரர்கள் ததிமுகன் சேனையைப் பிடித்து வந்து காட்டிலே படர்ந்திருக்கின்ற கொடிகளால் கட்டி இருப்புலக்கையினுல் இடித்து வருத்தினுர்கள். அது பொறுக்கமாட்டாமல் ததிமுகன் சேனுவீரர் வருந்தினர். அவர்களையும் அங்கதன், 'நீங்களும் போய் உங்கள் தலைவனிடம் சொல்லுங்கள்' என்றனன். அங்கதன் சேனுவீரர்கள் மதுவனத்துள்ள கள்ளையும் தேனையும், கனிகளையும் உண்டு களித்து விளையாடிச் சூரியன் வெப்பந் தணிந்தவுடன் செல்லலாமென்று மதுவனத்திற்கு அருகேயுள்ள உபவனத்தில் தங்கியிருந்தனர்.

முத்தலை எஃகி னற்கு
முடிப்பருங் கரும முற்றி
வித்தகன் தூது மீண்ட
திறுதியாய் விளைந்த தன்மை

அத்தலை அறிந்த எல்லா
மறைந்தன மாழி யான்மாட்
டித்தலை நிகழ்ந்த எல்லா
மியம்புவா னெடுத்துக் கொண்டாம். ()

வானரசேனை மதுவனத்தில் தங்கி யிருக்குங்காலையில் சுக்கிரீவன் நான்கு திக்குகளிலும் போய்ச் சீதாபிராட்டியார் இருக்கு மிடத்தை அறிந்து வரும்படி தன் சேனைவீரர்கட்குக் கட்டளையிட்டுப் போக்கி இராமபிரானுக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தனன்.

கார்வரை யிருந்தனன் கதிரின் காதலன்
சீரிய சொற்களில் தெருட்டச் செங்கணன்
ஆருயி ராயிர முடைய னைமெனச் [வான்.
சோர்தொறுஞ் சோர்தொறு முயிர்த்துத் தோன்று

மூன்று திக்குகளிலும் சென்றவர்கள் சீதாபிராட்டியாரைக் காணவில்லை என்னும் சொல் தன்னை வருத்தவும் வருந்தும் சிந்தையனாகிய சிராமன் தென்திசை சென்ற அனுமான் ஓர்கால் சீதையைக் கண்டு வருவானோ என்னும் சிந்தையை உடையவனாய்ச் சுக்கிரீவனைப் பார்த்து,

குறித்தநா ளிகந்தன குன்றத் தென்றிசை
வெறிக்கருங் குழலியை நாடல் மேயினார்
மறித்திவண் வந்திலர் மாண்டு ளார்கொலோ
பிறித்தவர்க் குற்றுள தென்னை பெற்றியோ. (319)

கண்டன ராக்கரைக் கறுவு கைமிக
மண்டமர் தொடங்கினார் வஞ்சர் மாயையால்
விண்டல மத்தின்மே யினர்கொல் வேறிலாத்
தண்டலி னெடுஞ்சிறை தளைப்பட் டார்கொலோ. ()

கூறின நாளவ ரிருக்கை கூடலம்
ஏறலஞ் சுதுமென இன்ப துன்பங்கள்
ஆறின ரருந்தவ மயர்கின் ருர்கொலோ
வேறவர்க் குற்றதென் விளம்பு வாயென்ருன். (321)

என்றுரைத் திடருழந் திருக்கும் வேலையில்
வன்றிறல் ததிமுகன் வான ரேசன்முன்
தன்றலைப் பொழிதரு குருதி தன்னெடும்
குன்றெனப் பணிந்தன னிருகை கூப்பியே. (322)

எழுந்துநின் றையகே ளின்று நாளையோ
டழிந்தது மதுவன மடைய வென்றனும்
வழிந்திடு குருதியின் வதன நோக்கியே
மொழிந்திடங் கியாரது முடித்து ளோரென. ()

'உன்னை இவ்வாறு வருத்தியவர்கள் யார்' என்று சுக்கிரீவன் கேட்கத் ததிமுகன் 'நீலன் என்பவனும், குமுதன் என்பவனும் மலைபோலுயர்ந்த தேகத்தையுடைய சாம்பன் என்பவனும் சமுத்திரம் புரண்டு வந்து மூடிக்கொண்டதுபோல வானர சேனைகளுடன் வந்து மதுவனத்தை அழித்தனர். மதுவனத்தை அழிக்கப்படாது என்று நாங்கள் தடுத்தபோது வாலிகுமாரனுன அங்கதன் சேனைகளை அடித்துத்துரத்தி உம்மையும் இகழ்ந்து பேசினுன். உம்மை இகழ்ந்தமையைக் கேட்ட யான் மனம் பொறுக்காமல் ஒரு பெரும் பாறையை எடுத்து,

இமைத்தன்முன் வாலிசே யெழில்கொள் யாக்கையைச்
சமைத்தியென் றெறிதரப் புறங்கை யாற்றகைத்
தமைத்தரு கனலென அழன்றெற் பற்றியே
குமைத்துயிர் பதைப்பநீ கூறுபோ யென்ருன். (324)

ஏம்பலோ டெழுந்துநின் றிரவி கான்முளை
பாம்பணை அமலனை வணங்கிப் பைந்தொடி
மேம்படு கற்பின ளென்னு மெய்ம்மையைத்
தாம்புகன் றிட்டதிச் சலமென் றோதினன். (325)

இலங்கைமா நகரத்தில் சீதாப்பிராட்டியார் கற்பழியாமல் க்ஷேமமாயிருத்தலை வானரவீரர்கள் கண்டாராதலின், அந்தக் களிப்பினாலேதான் மதுவனத்தை அழித்து அதிலுள்ள தேனைக்குடித்து விளையாடினார்கள். 'அண்டர் நாயகனே, இனி தாம் வருந்தவேண்டியதில்லை' என்று சுக்கிரீவன் பகர்ந்தனன். தென்திசை நோக்கிச் சென்றவர்கள் மீண்டுவந்தனர் என்பதைக் கேட்ட சீராமன், 'தூதுவர் யார் சொல்வார்களோ' என்னும் வருத்தத்துடன் இருந்தனன். சுக்கிரீவன் ததிமுகனைப் பார்த்து, 'மதுவனத்திற்கு வந்தோர் யாவர்' என்று கேட்டனன். 'ததிமுகன் மயிந்தன், சாம்பன், அனுமான், அங்கதன் முதலிய பதினேழுபடைத் தலைவர்களும் கடலும்கண்டு நாணும் சேனைவீரர்களும் போந்தனர்' என்றனன். ததிமுகன் கூறியவைகளைக் கேட்ட சுக்கிரீவன் ததிமுகனை நோக்கி, 'நான் உனக்குச் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு, அங்கதனானவன் அற்பமான செய்கைகளை செய்யுந்தன்மை உடையவ னல்லன்'

கொற்றவன் பணிதலைக் கொண்டு தெண்டிரை
சுற்றிய திசையெலாம் துருவித் தோகையைப்
பற்றிய பகைஞரைக் கடிந்து பாங்கர்வந்
துற்றன ரவரையா முரைப்ப தென்னையே. (326)

அன்றியும் வாலிசே யாச தாதலின்
பின்றுத ரீதரோ பிணங்கும் சிந்தையாய்
ஒன்றுநீ உணரலே உறுதி வேண்டுமேல்
சென்றவன் தனைச்சரண் சேர்தி யீண்டென்றான்.

சுக்கிரீவன் புகன்றவைகளைக் கேட்ட ததிமுகன் வாயைப் பொத்திக்கொண்டு, வருந்திய மனமுடையவனாய், தேகத்தை ஒடுக்கிக்கொண்டு தன்கூட்டத்துடன் மதுவனத்தைச் சார்ந்தனன். அவனைக் கண்ட அங்கதன், 'ஓடிப்போனவன் மீட்டும் வந்திருக்கின்றான். இவன் உயிரைநான் உண்பேன்' என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் ததிமுகன் அங்கதனைத் தொழுது வணங்கி,

போழ்ந்தன யான்செய்த குறைபொ றுக்கென
வீழ்ந்தன னடிமிசை வீழ வாலிசேய்
தாழ்ந்துகை பற்றிமெய் தழீஇக்கொண் டும்மையான்
சூழ்ந்ததும் பொறுக்கென முதன்மை சொல்லினான்.

யாமுதற் குறித்தநா ளிறத்த லெண்ணியே
ஏமுறத் துயர்துடைத் தளித்த ஏற்றம்போல்
தாமரைக் கண்ணவன் துயரந் தள்ளநீர்
போமெனத் தொழுதுமுன் அனுமன் போயினான்.()

'நமது மன்னவனாகிய சுக்கிரீவனும் நம்மீதுள்ள கோபம் மாறி யிருக்கின்றனன். வெங்கதிரும் வெப்பம் தணிந்திருக்கின்றனன். ஆகலின் நாம் இறைவன்பால் எழுந்து போதலே நன்று' என்று வானரவீரர்கள் மதுவனத்தை விட்டு எழுந்து சென்றனர். இஃதிவ்வாறாகச் சீராமன் சுக்கிரீவனை நோக்கி, 'இப்போது தென் திசை போந்து மீண்ட வானரவீரர்கள், 'சீதாபிராட்டியாரைத் தப்பா-